ஞானப்பாட்டுகள்.

Ñānappāṭṭukaḷ.

இதிலே

தேவனைத் துதித்து வணங்கும்படி

கிறிஸ்தவர்கள் பாடவேண்டிய பாட்டுக்கள்

அடங்கியிருக்கின்றன.

சமஸ்த பிராணிகளும் யெகோவாவை வாழ்த்தக்கடவன. சங். ௱ருய. ௬.

MADRAS:

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.

Printed at the American Mission Press.

1861.

6 - AUG 13
Copy ____ 1968

BV510
T3N28
Orien
TAM

451211
'34

வேதவாக்கியங்களின் அட்டவணை.

Chap.	verse.	Hymn.	அதி.	வச.	பாட்டு.
Exodus.			**௨ மோசே.**		
20.	8.	284	௨௰.	௮.	௨௮௪
33.	14.	328	௩௩.	௰௪.	௩௨௮
1 Kings.			**௧ இராசாக்கள்.**		
8.		327	௮.		௩௨௭
1 Chronicles.			**௧ நாளாகமம்.**		
22.	19.	157	௨௨.	௰௯.	௱௫௭
Nehemiah.			**நெகேமியா.**		
13.	22.	117	௰௩.	௨௨.	௱௰௭
Job.			**யோபு.**		
13.	15.	148	௰௩.	௰௫.	௱௪௮
13.	23.	104	௰௩.	௨௩.	௱௪
15.	14.	100	௰௫.	௰௪.	௱
34.	15.	331	௩௪.	௰௫.	௩௩௧
Psalms.			**சங்கீதம்.**		
1.		185	௧.		௱௮௫
2.	8.	276	௨.	௮.	௨௭௬
4.	6.	164	௪.	௬.	௱௬௪
4.	8.	343	௪.	௮.	௩௪௩
5.	3.	341	௫.	௩.	௩௪௧
5.	4.	182	௫.	௪.	௱௮௨
6.	1.	114	௬.	௧.	௱௰௪
9.	1.	215	௯.	௧.	௨௱௰௫
16.	11.	198	௰௬.	௰௧.	௱௯௮
16.	11.	201	௰௬.	௰௧.	௨௱௧
17.	15.	203	௰௭.	௰௫.	௨௱௩
18.	1.	154	௰௮.	௧.	௱௫௪
23.	1.	15	௨௩.	௧.	௰௫
23.	6.	19	௨௩.	௬.	௰௯
24.	9.	87	௨௪.	௯.	௮௭
25.	9.	175	௨௫.	௯.	௱௭௫
27.	8.	135	௨௭.	௮.	௱௩௫
30.	5.	18	௩௰.	௫.	௰௮
30.	5.	178	௩௰.	௫.	௱௭௮

வேதவாக்கியங்களின் அட்டவணை.

Psalms.			சங்கீதம்.		
Chap.	verse.	Hymn.	அதி.	வச.	பாட்டு.
31.	5.	143	௩௧.	௫.	௱௪௩
31.	15.	330	௩௧.	௰௫.	௩௩௰
32.	1.	139	௩௨.	௧.	௱௩௯
34.	3.	217	௩௪.	௩.	௨௱௰௭
34.	3.	165	௩௪.	௩.	௱௬௫
37.	3.	152	௩௭.	௩.	௱௫௨
37.	3.	25	௩௭.	௩.	௨௫
37.	39.	336	௩௭.	௩௯.	௩௩௬
37.	39.	226	௩௭.	௩௯.	௨௨௬
40.	2.	107	௪௰.	௨.	௱௭
42.	5.	221	௪௨.	௫.	௨௨௧
46.	1.	222	௪௬.	௧.	௨௨௨
51.	3.	105	௫௧.	௩.	௱௫
51.	5.	99	௫௧.	௫.	௯௯
51.	10.	124	௫௧.	௰.	௱௨௪
51.	10.	185	௫௧.	௰.	௱௮௫
51.	12.	264	௫௧.	௰௨.	௨௬௪
59.	16.	342	௫௯.	௰௬.	௩௪௨
62.	....	26	௬௨.	....	௨௬
62.	5.	231	௬௨.	௫.	௨௩௧
72.	19.	64	௭௨.	௰௯.	௬௪
72.	11.	274	௭௨.	௰௧.	௨௭௪
72.	17.	282	௭௨.	௰௭.	௨௮௨
73.	23.	10	௭௩.	௨௩.	௰
73.	25.	166	௭௩.	௨௫.	௱௬௬
86.	5.	14	௮௬.	௫.	௰௪
90.	1.	206	௯௰.	௧.	௨௱௬
90.	5.	337	௯௰.	௫.	௩௩௭
90.	12.	339	௯௰.	௰௨.	௩௩௯
95.	11.	338	௯௫.	௰௧.	௩௩௮
96.	10.	278	௯௬.	௰.	௨௭௮
100.	...	7	௱.	....	௭
100.	2.	163	௱.	௨.	௱௬௩
103.	1.	295	௱௩.	௧.	௨௯௫
107.	33.	335	௱௭.	௩௩.	௩௩௫
107.	9.	220	௱௭.	௯.	௨௨௰
116.	7.	225	௱௰௬.	௭.	௨௨௫
116.	12.	16	௱௰௬.	௰௨.	௰௬
118.	14.	167	௱௰௮.	௰௪.	௱௬௭
118.	6.	224	௱௰௮.	௬.	௨௨௪
118.	24.	285	௱௰௮.	௨௪.	௨௮௫
119.	18.	255	௱௰௯.	௰௮.	௨௫௫

Chap.	verse.	Hymn.	அதி.	வச.	பாட்டு.
Psalms.			**சங்கீதம்.**		
119.	54.	95	௱௰௯.	௫௪.	௯௫
119.	130.	97	௱௰௯.	௱௩௰.	௯௭
121.	8.	13	௱௨௧.	௮.	௰௩
121.	5.	344	௱௨௧.	௫.	௩௪௪
130.	5.	174	௱௩௰.	௫.	௱௭௪
133.	1.	269	௱௩௩.	௧.	௨௬௯
139.	1.	8	௱௩௯.	௧.	௮
139.	3.	9	௱௩௯.	௩.	௯
139.	24.	150	௱௩௯.	௨௪.	௱௫௰
143.	10.	254	௱௪௩.	௰.	௨௫௪
145.	10.	22	௱௪௫.	௰.	௨௨
146.	2.	216	௱௪௬.	௨.	௨௱௰௬
Proverbs.			**சாலோமோனின் வாக்கியங்கள்.**		
23.	26.	121	௨௩.	௨௬.	௱௨௧
28.	20.	236	௨௮.	௨௰.	௨௩௬
Ecclesiastes.			**பிரசங்கியின் புஸ்தகம்.**		
12.	13.	90	௰௨.	௰௩.	௯௰
Song of Songs.			**சாலோமோனின் உன்னதப் பாட்டு.**		
3.	2.	134	௩.	௨.	௱௩௪
Isaiah.			**ஏசாயா.**		
6.	3.	11	௬.	௩.	௰௧
9.	6.	223	௯.	௬.	௨௨௩
9.	6.	31	௯.	௬.	௩௧
12.	2.	149	௰௨.	௨.	௱௪௯
25.	8.	213	௨௫.	௮.	௨௱௰௩
26.	4.	58	௨௬.	௪.	௫௮
32.	2.	42	௩௨.	௨.	௪௨
41.	10.	233	௪௧.	௰.	௨௩௩
43.	11.	103	௪௩.	௰௧.	௱௩
44.	22.	36	௪௪.	௨௨.	௩௬
53.	1.	281	௫௩.	௧.	௨௮௧
53.	4.	37	௫௩.	௪.	௩௭
53.	5.	70	௫௩.	௫.	௭௰
53.	5.	138	௫௩.	௫.	௱௩௮
59.	12.	106	௫௯.	௰௨.	௱௬
64.	9.	340	௬௪.	௯.	௩௪௰
Jeremiah.			**எரேமியா.**		
23.	6.	44	௨௩.	௬.	௪௪
23.	6.	283	௨௩.	௬.	௨௮௩

Chap.	verse.	Hymn.	அதி.	வச.	பாட்டு.
Jeremiah.			எரேமியா.		
27.	13.	109	௨௭.	௰௩.	௱௯
33.	8.	141	௩௩.	௮.	௱௪௧
Exekiel.			எசேக்கியேல்.		
11.	20.	122	௰௧.	௨௰.	௱௨௨
33.	11.	112	௩௩.	௰௧.	௱௰௨
37.	9.	251	௩௭.	௯.	௨௫௧
Hosea.			ஓசேயாவின் தீர்க்கதரிசனம்.		
13.	9.	43	௰௩.	௯.	௪௩
Haggai.			ஆகாயின் தீர்க்கதரிசனம்.		
2.	7.	27	௨.	௭.	௨௭
Zechariah.			சகரியாவின் தீர்க்கதரிசனம்.		
4.	6.	259	௪.	௬.	௨௫௯
12.	10.	170	௰௨.	௰.	௱௭௰
Matthew.			மத்தேயு.		
1.	21.	28	௧.	௨௧.	௨௮
3.	11.	257	௩.	௰௧.	௨௫௭
5.	3.	240	௫.	௩.	௨௪௰
7.	7.	171	௭.	௭.	௱௭௧
7.	8.	296	௭.	௮.	௨௯௬
8.	12.	94	௮.	௰௨.	௯௪
9.	21.	126	௯.	௨௧.	௱௨௬
11.	28.	115	௰௧.	௨௮.	௱௰௫
11.	28.	219	௰௧.	௨௮.	௨௰௯
14.	24.	228	௰௪.	௨௪.	௨௨௮
16.	24.	145	௰௬.	௨௪.	௱௪௫
18.	3.	241	௰௮.	௩.	௨௪௧
18.	20.	292	௰௮.	௨௰.	௨௯௨
19.	14.	312	௰௯.	௰௪.	௩௱௰௨
22.	4.	306	௨௨.	௪.	௩௱௬
24.	42.	244	௨௪.	௪௨.	௨௪௪
25.	10.	93	௨௫.	௰.	௯௩
25.	31–46.	92	௨௫.	௩௧–௪௬.	௯௨
26.	28.	310	௨௬.	௨௮.	௩௱௰
26.	41.	245	௨௬.	௪௧.	௨௪௫
26.	42.	234	௨௬.	௪௨.	௨௩௪
28.	19.	325	௨௮.	௰௯.	௩௨௫
Mark.			மாற்கு.		
16.	2.	79	௰௬.	௨.	௭௯

வேதவாக்கியங்களின் அட்டவணை.

Chap.	verse.	Hymn.	அதி.	வச.	பாட்டு.
	Luke.			லூக்கா.	
1.	70.	29	௧.	௭௰.	௨௯
2.	10.	30	௨.	௰.	௩௰
2.	11.	39	௨.	௰௧.	௩௯
7.	37, 38.	179	௭.	௩௭, ௩௮.	௱௭௯
13.	24.	187	௰௩.	௨௪.	௱௮௭
18.	13.	116	௰௮.	௰௩.	௱௰௬
24.	34.	82	௨௪.	௩௪.	௮௨
24.	40.	76	௨௪.	௪௰.	௭௬
	John.			யோவான்.	
1.	9.	35	௧.	௯.	௩௫
1.	39.	66	௧.	௩௯.	௬௬
4.	14.	128	௪.	௰௪.	௱௨௮
6.	37.	176	௬.	௩௭.	௱௭௬
6.	68.	127	௬.	௬௮.	௱௨௭
6.	48.	57	௬.	௪௮.	௫௭
8.	12.	33	௮.	௰௨.	௩௩
8.	12.	34	௮.	௰௨.	௩௪
8.	12.	279	௮.	௰௨.	௨௭௯
9.	35.	308	௯.	௩௫.	௩௱௮
10.	16.	268	௰.	௰௬.	௨௬௮
10.	27.	146	௰.	௨௭.	௱௪௬
12.	22.	186	௰௨.	௨௨.	௱௮௬
12.	32.	280	௰௨.	௩௨.	௨௮௰
13.	9.	72	௰௩.	௯.	௭௨
14.	6.	55	௰௪.	௬.	௫௫
14.	6.	56	௰௪.	௬.	௫௬
14.	19.	263	௰௪.	௰௯.	௨௬௩
16.	8.	260	௰௬.	௮.	௨௬௰
16.	13.	250	௰௬.	௰௩.	௨௫௰
17.	11.	267	௰௭.	௰௧.	௨௬௭
21.	15.	131	௨௧.	௰௫.	௱௩௧
21.	15.	160	௨௧.	௰௫.	௱௬௰
	Acts.			அப்போஸ்தலர்.	
1.	9.	86	௧.	௯.	௮௬
4.	12.	45	௪.	௰௨.	௪௫
10.	36.	48	௰.	௩௬.	௪௮
20.	7.	287	௨௰.	௭.	௨௮௭
	Romans.			உரோமர்.	
4.	24.	71	௪.	௨௪.	௭௧
5.	3.	227	௫.	௩.	௨௨௭

Chap.	verse.	Hymn.	அதி.	வச.	பாட்டு.
Romans.			உரோமர்.		
7.	18.	102	௭.	௰௮.	௱௨
8.	26.	262	௮.	௨௬.	௨௬௨
8.	28.	235	௮.	௨௮.	௨௩௫
16.	20.	193	௰௬.	௨௰.	௱௯௩
1 *Corinthians.*			௧ கொரிந்தியர்.		
1.	31.	169	௧.	௩௧.	௱௬௯
6.	20.	132	௬.	௨௰.	௱௩௨
10.	4.	59	௰.	௪.	௫௯
15.	20.	81	௰௫.	௨௰.	௮௧
2 *Corinthians.*			௨ கொரிந்தியர்.		
4.	17.	229	௪.	௰௭.	௨௨௯
5.	8.	209	௫.	௮.	௨௱௯
6.	2.	111	௬.	௨.	௱௰௧
7.	10.	119	௭.	௰.	௱௰௯
Ephesians.			எபேசியர்.		
1.	13.	252	௧.	௰௩.	௨௫௨
2.	3.	101	௨.	௩.	௱௧
2.	4, 5.	68	௨.	௪, ௫.	௬௮
3.	8.	63	௩.	௮.	௬௩
3.	14—21.	172	௩.	௰௪—௨௧.	௱௭௨
4.	8.	85	௪.	௮.	௮௫
5.	2.	40	௫.	௨.	௪௰
5.	2.	155	௫.	௨.	௱௫௫
6.	12.	190	௬.	௰௨.	௱௯௰
Philippians.			பிலிப்பியர்.		
1.	21.	208	௧.	௨௧.	௨௱௮
1.	23.	197	௧.	௨௩.	௱௯௭
1.	23.	200	௧.	௨௩.	௨௱
2.	5.	61	௨.	௫.	௬௧
2.	8.	67	௨.	௮.	௬௭
3.	2.	161	௩.	௨.	௱௬௧
3.	9.	46	௩.	௯.	௪௬
3.	12.	180	௩.	௰௨.	௱௮௰
4.	4.	168	௪.	௪.	௱௬௮
Colossians.			கொலோசியர்.		
2.	3.	158	௨.	௩.	௱௫௮
3.	1.	151	௩.	௧.	௱௫௧
3.	11.	62	௩.	௰௧.	௬௨
3.	11.	137	௩.	௰௧.	௱௩௭

வேதவாக்கியங்களின் அட்டவணை.

1 Thessalonians. — ௧ தெசலோனிக்கேயர்.

Chap.	verse.	Hymn.	அதி.	வசு.	பாட்டு.
4.	17.	199	௪.	௰௭.	௱௯௯

2 Thessalonians. — ௨ தெசலோனிக்கேயர்.

Chap.	verse.	Hymn.	அதி.	வசு.	பாட்டு.
1.	6.	88	௧.	௬.	௮௮
2.	16.	147	௨.	௰௬.	௱௪௭
3.	5.	156	௩.	௫.	௱௫௬

1 Timothy. — ௧ தீமோத்தேயு.

Chap.	verse.	Hymn.	அதி.	வசு.	பாட்டு.
6.	12.	189	௬.	௰௨.	௱௮௯
6.	15.	23	௬.	௰௫.	௨௩

Hebrews. — எபிரேயர்.

Chap.	verse.	Hymn.	அதி.	வசு.	பாட்டு.
6.	19.	218	௬.	௰௯.	௨௱௰௮
7.	26.	53	௭.	௨௬.	௫௩
9.	12.	69	௯.	௰௨.	௬௯
9.	27.	329	௯.	௨௭.	௩௨௯
11.	13.	191	௰௧.	௰௩.	௱௯௧
12.	2.	75	௰௨.	௨.	௭௫
13.	16.	347	௰௩.	௰௬.	௩௪௭
13.	20.	54	௰௩.	௨௰.	௫௪

James. — யாக்கோபு.

Chap.	verse.	Hymn.	அதி.	வசு.	பாட்டு.
4.	6.	239	௪.	௬.	௨௩௯
4.	14.	332	௪.	௰௪.	௩௩௨

1 Peter. — ௧ பேதுரு.

Chap.	verse.	Hymn.	அதி.	வசு.	பாட்டு.
1.	17.	183	௧.	௰௭.	௱௮௩
2.	3.	293	௨.	௩.	௨௯௩
2.	7.	130	௨.	௭.	௱௩௰
2.	21.	144	௨.	௨௧.	௱௪௪
2.	24.	73	௨.	௨௪.	௭௩
4.	7.	246	௪.	௭.	௨௪௬
4.	7,	242	௪.	௭.	௨௪௨
5.	6.	232	௫.	௬.	௨௩௨
5.	7.	230	௫.	௭.	௨௩௰
5.	8.	243	௫.	௮.	௨௪௩
5.	8.	247	௫.	௮.	௨௪௭

2 Peter. — ௨ பேதுரு.

Chap.	verse.	Hymn.	அதி.	வசு.	பாட்டு.
1.	21.	249	௧.	௨௧.	௨௪௯

வேதவாக்கியங்களின் அட்டவணை.

1 *John.*

Chap.	verse.	Hymn.
1.	7.	142
2.	6.	60
4.	10.	159

க யோவான்.

அதி.	வச.	பாட்டு.
௧.	௭.	௱௪௨
௨.	௬.	௬௰
௪.	௰.	௱௫௯

Revelation.

Chap.	verse.	Hymn.
1.	7.	89
1.	10.	286
1.	18.	83
2.	10.	192
3.	20.	120
3.	21.	195
4.	8.	12
5.	7.	6
5.	9.	162
6.	17.	91
7.	11.	202
7.	13.	204
12.	11.	194
17.	14.	47
20.	....	205
21.	4.	196

வெளிப்படுத்தின விசேஷம்.

அதி.	வச.	பாட்டு.
௧.	௭.	௮௯
௧.	௰.	௨௮௬
௧.	௰௮.	௮௩
௨.	௰.	௱௯௨
௩.	௨௰.	௱௨௰
௩.	௨௧.	௱௯௫
௪.	௮.	௰௨
௫.	௭.	௬
௫.	௯.	௱௬௨
௬.	௰௭.	௯௧
௭.	௰௧.	௨௱௨
௭.	௰௩.	௨௱௪
௰௨.	௰௧.	௱௯௪
௰௭.	௰௪.	௪௭
௨௰.	....	௨௱௫
௨௧.	௪.	௱௯௬

INDEX OF SUBJECTS.

	Hymns.
I. Praise to the Holy Trinity.	1—5
II. God the Father;	
His Majesty, ...	6, 7
Omniscience and Omnipresence, ...	8—10
Holiness, ...	11, 12
Goodness, ...	13—19
Grace, ...	20, 21
Power, ...	22, 23
Dominion.	24—26
III. God the Son;	
His Advent, ...	27—29
Birth;	30—32
The Light of the World;	33—35, 51
Our Redeemer, ...	36—41
Refuge, ...	42, 43, 52
Righteousness, ...	44—46
King, ...	47, 48, 50
Priest, ...	53
Shepherd;	49, 54
The Way, Truth and Life, ...	55, 56
The Bread of Life, ...	57
The Source of all blessings;	58—66
His Death, ...	67—78
Burial, ...	79, 80
Resurrection, ...	81—84
Ascension, ...	85—87
Second Coming, ...	88
Judgment Day.	89—94
IV. The Holy Scriptures.	
Their Excellency, ...	95—98
V. Man;	
His state by Nature, ...	99—103
by Practice, ...	104—107
Warning, ...	108
VI. The Christian;	
His call to Repentance, ...	109—119
Conversion, ...	121—138
Pardon, ...	139—143
Obedience, ...	144—146
Hope, ...	147
Trust;	148—152

	Hymns.
His Love, ...	153—160
Happiness, ...	161—171
Conflicts, ...	180—193
Consolations, ...	194—206
Death, ...	207—214
Gratitude, ...	215—217
Perseverance, ...	218—233
Resignation, ...	234—236
Patience, ...	237, 238
Humility, ...	240, 241
Watchfulness.	242—248
VII. God the Holy Spirit;	
His Offices as Inspirer, ...	249
Enlightener, ...	250—257
Sanctifier, ...	258—261
Strengthener, ...	262, 264, 265
Comforter.	263, 266
VIII. The Church;	
Its Unity, ...	267—269
Warfare, ...	270, 271
Triumph.	272—283
IX. The Sabbath.	284—287
X. Public Worship.	288—300
XI. The Lord's Supper.	301—311
XII. Baptism.	312—321
XIII. Marriage.	322—324
XIV. Special occasions;	
The spread of the Gospel, ...	325
Ordination, ...	326
Dedication of a Church, ...	327
Journey, ...	328
Death, ...	329—334
Famine, ...	335
Public Calamity, ...	336, 337
New Year, ...	338—340
Morning Worship, ...	341—344
Evening Worship, ...	345, 346
Charity.	347
XV. Various Hymns.	348—356
XVI. Hymns for Children.	357—380
XVII. Doxologies.	381—388

பொருள் அட்டவணை.

பாட்டு.

க. பரிசுத்த திரியேகத்துவத்துக்குத் துதி. .... க—௫

உ. பிதாவானவருக்குத் துதி.
அவரின் மகத்துவம், ... ௬, ௭
சருவ ஞானமும் சருவ வியாபகமும், ௮—௰
பரிசுத்தம், ... ௰க, ௰உ
தயாளம், ... ௰௩—௰௬
கிருபை, ... உ௰, உக
வல்லமை, ... உஉ, உ௩
ஆளுகை. .... உ௪—உ௬

௩. சுதனானவருக்குத் துதி.
அவரின் வருகை, ... உ௭—உ௯
பிறப்பு. .... ௩௰—௩உ
அவர் உலகத்தாருக்கு ஒளி, ... ௩௩—௩௫, ௫க
மீட்பர், ... ௩௬—௪க
அடைக்கலம், ... ௪உ, ௪௩, ௫உ
நீதி, ... ௪௪—௪௬
இராஜா, ... ௪௭, ௪௮, ௫௰
ஆசாரியர், ... ௫௩
மேய்ப்பர். ௪௯, ௫௪
அவர் வழியும் சத்தியமும் சீவனுமானவர், ௫௫, ௫௬
சீவ ஆகாரம், ... ௫௭
எல்லாத் தயவுக்கும் ஊற்றானவர். .... ௫௮—௬௬
அவரின் மரணம், ... ௬௭—௭௮
அடக்கம்பண்ணப்படல், ... ௭௯, ௮௰
உயிர்த்தெழுதல், ... ௮க—௮௪
பரத்துக்கேறுதல், ... ௮௫—௮௭
இரண்டாம் வருகை, ... ௮௮
நியாயத்தீர்ப்பு. .... ௮௯—௯௪

௪. தேவவசனம்;
அதின் மாட்சிமை, ... ௯௫—௯௮

பொருள் அட்டவணை.

	பாட்டு.
௫. மனிதன்.	
அவன் சென்ம நிலைபரம்,	௯௯—௱௩
கன்ம நிலைபரம்,	௱௪—௱௭
எச்சரிப்பு.	௱௮
௬. கிறிஸ்தவன்.	
பாவிகளை அழைத்தல்,	௱௯—௱௰௯
அவன் குணப்படுதல்,	௱௨௧—௱௩௮
மன்னிப்பு,	௱௩௯—௱௪௩
கீழ்ப்படிதல்,	௱௪௪—௱௪௬
கோரிப்பு,	௱௪௭
நம்பிக்கை;	௱௪௮—௱௫௨
அவன் அன்பு,	௱௫௩—௱௬௰
பாக்கியம்,	௱௬௧—௱௭௧
போராட்டம்,	௱௮௰—௱௯௩
ஆறுதல்,	௱௯௪—௨௱௬
மரணம்,	௨௱௭—௨௱௰௪
நன்றி அறிதல்,	௨௱௰௫—௨௱௰௭
துணிவு,	௨௱௰௮—௨௩௩
அடக்கம்,	௨௩௪—௨௩௬
பொறுமை,	௨௩௭, ௨௩௮
தாழ்மைப்படல்,	௨௪௰, ௨௪௧
விழித்தல்.	௨௪௨—௨௪௮
௭. பரிசுத்த ஆவி.	
அவர் ஏவிவிடுகிறவர்,	௨௪௯
பிரகாசிப்பிக்கிறவர்,	௨௫௰—௨௫௭
பரிசுத்தம் ஆக்குகிறவர்,	௨௫௮—௨௬௧
பெலப்படுத்துகிறவர்,	௨௬௨, ௨௬௪, ௨௬௫
தேற்றுகிறவர்.	௨௬௩, ௨௬௬
௮. தேவசபை.	
அதின் ஐக்கியம்,	௨௬௭—௨௬௯
போராடல்,	௨௭௰—௨௭௧
வெற்றி.	௨௭௨—௨௮௩
௯. ஓய்வுநாள்.	௨௮௪—௨௮௭
௰. தேவாராதனை.	௨௮௮—௩௱
௰௧. கர்த்தருடைய இராப்போசனம்.	௩௱௧—௩௱௰௧
௰௨. ஞானஸ்நானம்.	௩௱௰௨—௩௨௧
௰௩. விவாகம்.	௩௨௨—௩௨௪

௰௪. விசேஷசமய கீர்த்தனைகள். — பாட்டு.
- சுவிசேஷத்தின் விருத்தி, ... ௩௨௫
- குருப்பட்டத்தைக் கொடுத்தல், ... ௩௨௬
- கோவிலைப் பிரதிஷ்டைபண்ணல், ... ௩௨௭
- பிரயாணப்படல், ... ௩௨௮
- மரணம், ... ௩௨௯—௩௩௪
- பஞ்சம், ... ௩௩௫
- பொதுவான உபத்திரவம், ... ௩௩௬, ௩௩௭
- வருஷப்பிறப்பு, ... ௩௩௮—௩௪௰
- காலை ஆராதனை, ... ௩௪௧—௩௪௪
- மாலை ஆராதனை, ... ௩௪௫, ௩௪௬
- தருமம் செய்யல். ௩௪௭

௰௫. பலவித கீர்த்தனைகள். .... ௩௪௮—௩௫௬

௰௬. பாலகருக்குரிய கீர்த்தனைகள். .... ௩௫௭—௩௮௰

௰௭. தோத்திரங்கள். .... ௩௮௧—௩௮௮

ஞானப்பாட்டுகள்.

க—ம் பிரிவு.

திரியேகத்துவத்துக்குத் துதி.

க பாட்டு. L. M. **1**

Praise to the Holy Trinity.

பரிசுத்த திரித்துவத்துக்குத் தோத்திரஞ் செலுத்துதல்.

க எல்லாம் படைத்த நமது
தயாபர பிதாவுக்கு
படைப்பின் செய்கைக்காகவே,
இஸ்தோத்திரமுண்டாகவே.

உ இவ்வீனருக்கு மீட்பரும்
கர்த்தாவுமாஞ் சுதனுக்கும்
ரட்சிப்பின் செய்கைக்காகவே,
இஸ்தோத்திரமுண்டாகவே.

ஙா சுதனிடத்தில் நெஞ்சத்தை
திருப்பி அதில் நம்பிக்கை
உண்டாகச் செய்யும் ஆவிக்கே,
இஸ்தோத்திரமுண்டாகவே.

ச படைப்பு மீட்பு சுத்தத்தை
நடத்தும் மா திரியேகனை
சிருட்டி யாவும் அன்போடு
புகழ் செலுத்தத் தக்கது.

உ பாட்டு. L. M. 2

Praise to the Holy Trinity.

பரிசுத்த திரித்துவத்துக்குத் தோத்திரம்.

க பிதாவே, என்னைத் தேவரீர்
தெய்வீக ரூபாய்ச் சிஷ்டித்தீர்;
நீர்தான் என் சீவன், உம்மையே
இல்லாமல் மாண்டுபோவேனே.

உ திவ்விய மைந்தன் யேசுவே!
நீர் என்னை மீட்ட மீட்பரே,
அடியேன் தப்ப தேவரீர்
பெலியாய்ச் சீவனை விட்டீர்.

ங தெய்வாவியே, என் நெஞ்சை நீர்
திருப்பிப் புதிதாக்குவீர்;
நற்சிந்தையொன்றும் என்னிலே
உண்டோ, உம்மாலேதான் உண்டே

ச நீர் சோதனையில் தாங்குவீர்;
எத்துன்பத்திலுங் கைவிடீர்;
உம்மாலே திடன் வெற்றியும்
மகிழ்ச்சியோடே கிடைக்கும்.

ங பாட்டு. L. M. 3

Praise to the Holy Trinity.

பரிசுத்த திரித்துவத்துக்குத் தோத்திரம்.

க விஸ்தாரமான லோகத்தை
படைத்த சுவாமி, எங்களை
இந்நாள் வரைக்குந் தேவரீர்
விசாரித்தே இருக்கிறீர்.

உ எல்லாரும் உமதாளுகை
விவேகம் அன்பு வல்லமை
மற்றெந்தத் தேவகுணமும்
அறிந்து போற்றச் செய்திரும்.

௩ உயிரடைந்த கிறிஸ்துவே,
நீர் எங்கள் ஆத்துமாவிலே
தரித்து, எந்த நன்மைக்கும்
இந்நெஞ்சத்தை உயிர்ப்பியும்.

௪ தெய்வாவியே, நற்புத்தியும்
மெய் நம்பிக்கையும் நேசமும்
சபையில் மேன்மையாகவே
வளர்ந்திருக்கச் செய்வீரே.

௪ பாட்டு. C. M. 4

Praise to the Holy Trinity.

பரிசுத்த திரித்துவத்துக்குத் தோத்திரம்.

௧ பிதாவே, ஏழைத் தொண்டரை
நோக்கி ரட்சியும்;
முடியுமட்டும் எங்களை
காப்பாற்றி அருளும்.

௨ நீர் அன்பாய்ச் சிஷ்டித்தோர்களை
கைதூக்கிக் காத்திடும்;
மோட்சத்திற் சேர எங்களை
கடாட்சஞ் செய்திடும்.

௩ குமாரனே, நான் உம்மையே
பார்ப்பது முத்தியாம்;
பத்தர்களுக்குக் கிருபை
சம்பூரணம் உண்டாம்.

௪ தேவாவியே, பிதாவையும்
குமாரனையும் நீர்
வெளிப்படுத்தி, அன்பையும்
அருளக்கடவீர்.

௫ எட்டாத மனக்களிப்பை
நிசப்படுத்துவீர்;
ஆனந்த சமாதானத்தை
பரத்தில் தருவீர்.

ரு பாட்டு. P. M. 5

Praise to the Trinity.

திரியேகத்துவத்துக்குத் தோத்திரம்.

க தேவன்புக்காக உன்னத
  கர்த்தாவுக்கே புகழ்ச்சி;
என் பாவக்கேட்டை நீக்கின
  அருள், மகா திரட்சி;
உலகில் சமாதானமும்
நரர்களுக்கு நன்மையும்
  உண்டாக நீரே கர்த்தர்.

உ ஆ! யேசு தேவமைந்தனே,
  ஓர் பலியைச் செலுத்தி
கெட்டோரை மீட்ட மீட்பரே,
  மாசற்ற ஆட்டுக்குட்டி:
மா கர்த்தரே, தயாபரா;
அடியார் செபங் கேட்டெல்லா
  சபைக்கும் நீர் இரங்கும்.

ங மெய்யாகத் தேற்றும் உன்னத
  நல்லாவியே இறங்கும்;
பூமியிற் கிறிஸ்து சகித்த
  மா கஸ்தியின் நிமித்தம்,
மீட்டோரைச் சாத்தான் கண்ணியில்
விழாமற் காத்துத், துன்பத்தில்
  களிக்கப்பண்ணும் என்றும்.

உ—ம் பிரிவு.

பிதாவானவருக்குத் துதி.

தேவ லட்சணங்களைப்பற்றிப் பாடியது.

சு பாட்டு. 7's. **6**

"The voice of many Angels."

அநேகந் தேவதூதருடைய சத்தத்தைக் கேட்டேன். வெளி. ரு. எ.

க விண்ணோர்க்காதி தேவனே,
மண்ணோருக்கும் நேசனே,
தேவாதேவன்! அற்பர் நாம்
உம்மை நித்தம் போற்றலாம்.

உ மோட்ச தூதர் தேவனை
போற்றிச், சொல்வார் கீதத்தை;
எதிர் ஒலியாக நாம்
ஆரவாரஞ் செய்யலாம்.

ஙு "நித்தம் வாழ்க, சுத்தரே,
மண் விண் யாவும் உம்மையே
போற்றும்" என்று சொல்லுவார்,
பாடி, பாடி, துதிப்பார்.

எ பாட்டு. L. M. **7**

The Hundredth Psalm.

நூறாம் சங்கீதம்.

க விஸ்தார லோக மக்களே,
கர்த்தாவின் முன் நடுங்குங்கள்;
அவர் பலத்த தேவனே,
அதை அறிந்து போற்றுங்கள்.

உ நம்மால் துணை வேண்டாதவர்
மண்ணுலே நம்மைச் செய்தாரே;
நம்மால் இகழப்பட்டவர்
அன்போடு நம்மைச் சேர்த்தாரே.

௩ அவர் நன்ருய் விசாரித்து,
எப்போதும் நோக்கிப் பார்த்தாரே;
மிகுந்த இந்த நன்மைக்கு
என்னத்தைச் செய்வோம், மாந்தரே.

௪ பரத்திற் சத்தம் எட்டவும்
களித்துப் போற்றிப் பாடுவோம்;
தராதலத்தில் யாவரும்
துதிக்க ஏகமாகுவோம்.

௫ நீர் எங்கும் ஆளும் வேந்தரே!
நீர் செய்த அன்பு என்றுமாம்;
இக்காலம் முன்னும் பின்னுமே
தெய்வீக உண்மை மேன்மையாம்.

அ பாட்டு. L. M. 8

"O Lord! thou hast searched me and known me."

யெகோவாவே, நீர் என்னை ஆராய்ந்தறிந்திருக்கிறீர். சங். ௱௩௯. ௧.

௧ கர்த்தாவே, அடியேனை நீர்
ஆராய்ந்தறிந்திருக்கிறீர்;
என் தேகமும் என் ஆவியும்
உமக்கு நன்ருய்த் தெரியும்.

உ நினைக்கமுன் என் எண்ணமே,
நடக்கமுன் என் வழியே,
நான் பேச வாய்திறக்கமுன்
கர்த்தாவுக்கெல்லாந் தெரியும்.

௩ பின் முன்னுமாக நிற்கிறீர்,
என் சூழ வந்திருக்கிறீர்;
உமக்குத் தப்பி, நான் எங்கே
பறந்துபோவேன், கர்த்தரே!

௪ எங்கே போனாலும், நான் எங்கே
இருந்தாலும், என் நெஞ்சிலே
இந்நினைவை இருத்திடும்,
தப்பாமல்போக ரட்சியும்.

௯ பாட்டு. L. M. 9

"Thou art acquainted with all my ways."

என் வழிகளெல்லாம் உமக்கு வழக்கமாய்த் தெரியும். சங். ௱௩௯. ௩.

௧ கர்த்தாவே, நான் படுக்கையில்
எழுந்திருக்கும் வேளையில்,
நடப்பதின்னதென்று நீர்
கண்கண்டதாக அறிவீர்.

௨ என் அந்தரங்க எண்ணமும்
உமக்கு நன்றாய்த் தெரியும்;
என் சுக துக்கம் முன்னமே
நீர் அறிவீர், என் கர்த்தரே!

௩ உம்மைச் சேவிக்க மனதில்
விருப்பமற்றுப் போகையில்,
எங்கே நான் உமக்கொளித்தே
விலகுவேன், மா தேவனே!

௪ மேல் வானத்திற் பறக்கினும்,
பாதாளத்தில் இறங்கினும்,
என்னோடே கூடத் தேவரீர்
ஞாயம் விளங்க வருவீர்.

௫ ஆ! கர்த்தரே, என் மனதில்
தீயான சிந்தை உண்டாகில்,
மெய்வழியிலே நடத்தும்,
திருத்தி என்னை ரட்சியும்.

௰ பாட்டு. L. M. 10

"I am continually with thee."

இடைவிடாமல் உம்மோடிருக்கிறேன். சங். எ௩. உ௩.

க உன்னதமான ஸ்தலத்தில்
மா ஆழமுள்ள இடத்தில்,
கர்த்தாவே, நீர் இருக்கிறீர்,
எல்லாவற்றையும் பார்க்கிறீர்.

உ நான் சென்றுவரும் வழியை,
நான் போயிருக்கும் இடத்தை,
கர்த்தாவே, நீர் அறிகிறீர்,
சமீபமாயும் நிற்கிறீர்.

௩ வானத்துக்கேறித் தங்கியும்
பாதாளத்தில் இறங்கியும்,
ஆ! அங்கேதானும் தேவரீர்
என்னை அறிந்திருக்கிறீர்.

௪ இருளிலே ஒளிக்கினும்,
கடலிலே நான் போயினும்,
எங்கே போனாலும், தேவரீர்
அங்கென்னைச் சூழ்ந்திருக்கிறீர்.

௫ இதை அறிந்து தீமையை
வெறுத்துத் தள்ளித் தேவனை
பின் சென்று வழிபடவே,
கிருபை தாரும், கர்த்தரே!

௰க பாட்டு. C. M. 11

"Holy, holy, holy Lord God of Hosts."

சேனைபதியாகிய யெகோவாவே, பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்.
ஏசா. ௬. ௩.

க பரத்தில் தூதர் தினமும்
கர்த்தாவின் நாமமே,
மாசுத்தம், சுத்தம், சுத்தமும்,
பாடிக்கொள்வார்களே.

உ என் நெஞ்சே, நீயும் துதித்து
மகா புகழ்ச்சியாய்,
சமுகத்தில் சமீபித்து
வணங்கு பணிவாய்.

ங மனோவாக்குக் கெட்டாதவர்
பலியையல்லவே,
யாவற்றிலும் விரும்புவார்
சுத்தாங்க நெஞ்சமே.

ச களிம்பு குற்றம் நீங்கவே,
ரட்சியும் தேவரீர்;
என்னை, அன்புள்ள சுத்தோரே!
தரிசிப்பார் என்றீர்.

௰உ பாட்டு. L. M. 12

"Holy, holy, holy, Lord God Almighty."

சருவவல்லமையுள்ள கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்.
வெளி. ச. அ.

க கர்த்தாவே, இங்கே எங்களை
அன்பாக நோக்கி, ஆவியை
அவர் வரங்கள் யாவையும்
அருளிச் செய்து ரட்சியும்.

உ பரத்தில் நாங்கள் "சுவாமியே,
நீர் சுத்த சுத்த சுத்தரே,"
என்றோதி, உம்மை என்றைக்கும்
துதிக்கும் வாழ்வை அருளும்.

ங எல்லாரும் உம்மைப் போற்றவே
தேவன்பை நன்றாய் யோசித்தே
இருப்பதற்குப் புத்தியும்
நல்லாவியுங் கடாட்சியும்.

ச ஒன்றாக ஆண்டிருக்கிற
திரியேக தேவமாகிய
பிதாக் குமாரன் ஆவிக்கே
இஸ்தோத்திரமுண்டாகவே.

௰௩ பாட்டு. C. M. 13

"The Lord shall preserve thy going out and coming in."

யெகோவா இன்றுமுதல் என்றும் உன் போக்கையும் உன் வரவையுங் காப்பார். சங். ௱உ௧. ௮.

௧ ஆ! களிகூர்ந்து பூரித்து
மகிழ் என் மனமே!
பராபரன் தாம் உனது
அனந்த செல்வமே.

௨ நெஞ்சில் இராவும் பகலும்
துக்கிப்பதென்ன நீ,
உன் சிந்தனை அனைத்தையும்
கர்த்தாவுக்கொப்புவி.

௩ உன் சிறுவயது முதல்
பராமரித்தாரே;
கர்த்தாவால் வெகு மோசங்கள்
விலக்கப்பட்டதே.

௪ இந்நன்மையாற் கர்த்தாவுக்கு
நற்பிள்ளைக்கேற்றதாய்
எப்போதுங் கீழ்ப்படிந்திரு
அப்போது வாழுவாய்.

௰௪ பாட்டு. C. M. 14

"Thou Lord art good and ready to forgive," &c.

ஆண்டவரே, யாவருக்கும் நன்மைசெய்பவரும் மன்னிப்பவருமாயிருக்கிறீர். சங். ௮௬. ௫.

௧ கர்த்தாவாந் தேவரீரையே
துதிப்பேன் அடியேன்;
யாவுக்கும் முன்னும் உம்மையே
அறிக்கைபண்ணுவேன்

௨ மிகுந்த பாக்கியங்களும்
உம்மாற் கிடைக்குமே;
உண்டான எந்தத் தீமையும்
உம்மாலே நீங்குமே.

௩ விசேஷமாகப் பாவத்தை
நிவிர்த்தி செய்கிறீர்;
சந்தோஷமுள்ள மோட்சத்தை
அருளிக்கொடுப்பீர்.

௪ களிப்படைந்து பூரித்து
மகிழ், என்னெஞ்சமே!
பலத்த கர்த்தர் உனது
அனந்த செல்வமே.

௰௫ பாட்டு. C. M. 15

"*The Lord is my shepherd.*"

யெகோவாவே என் மேய்ப்பர். சங். ௨௩. ௧.

௧ சருவ வல்ல ஆண்டவர்
என் வழிகாட்டியாம்;
வேண்டியதை அளிப்பவர்
என் நல்ல மேய்ப்பராம்.

௨ பசும் புல்லான மேய்ச்சலில்
நடத்தி ஆற்றுவார்;
நதி ஓரத்தில் மரத்தின்
நிழலிற் போஷிப்பார்.

௩ அலைவுபடும் பாவியை
நிலைக்கப்பண்ணுவார்;
நீதியின் பாதையில் என்னை
நடக்கவுஞ் செய்வார்.

௪ யாதொரு பயம் நட்டமும்
இல்லாமற் சாவேனே;
நீர் நீட்டுங் கோலுந் தண்டமும்
தாங்கும் என் ஆவியை.

ரு இவ்வருள் செய்யுந் தேவன்தான்
என்னுடன் நிற்பதால்,
தொண்டுசெய்வேன் எப்போதுநான்
என் முழுப்பலத்தால்.

௰சு பாட்டு. C. M. 16

"What shall I render unto the Lord," &c.

பராபரன் எனக்குச் செய்த சகல நன்மைகளுக்காகவும் என்ன கைம்மாறு செய்வேன். சங். ாயசு. ௰உ.

க என் தேவனே, நீர் தந்திட்ட
பற்பல நன்மையும்
என் எண்ணம் எல்லைப்படுத்த
கூடாத இலக்கம்.

உ உற்பத்தி காலம் முதலாய்
என்னை நடத்தினீர்;
என் ஆவி தேகம் தயவாய்
இம்மட்டுந் தாங்கினீர்.

ந மயக்கம் நீங்க நெஞ்சத்தை
செம்மைப்படுத்தினீர்;
அநேக ஆறுதல்களை
என்னிற் பிரயோகித்தீர்.

ச என் சீவ காலம் யாவையும்
விசாரித்தீர்,—அதே
என் ஞாபகத்தில் என்றைக்கும்
இருக்கவேண்டுமே.

ரு இடைவிடாது போற்றுவேன்,
கர்த்தாவே, ஏற்றிடும்;
உம்மை எப்போதும் பற்றுவேன்,
என்னை விடாதிரும்.

௰எ பாட்டு. C. M. 17

Thanksgiving.

தோத்திரஞ் செலுத்தல்.

க விண்ணோர்கள் போற்றிப்பாடிய
தயாபரருக்கே
புகழ் செலுத்துஞ், சகல
நரரின் கூட்டமே!

உ இந்நாள்வரைக்கும் நமக்கு
சுகம் அருளினார்;
நீங்கா இக்கட்டைத் தமது
கரத்தால் நீக்கினார்.

ந இனியும் நாம் மகிழ்ச்சியாய்
இருக்கத் தேவரீர்,
பொல்லாப்பை நீக்கித் தயவாய்
பூரிக்க அருள்வீர்.

௰அ பாட்டு. C. M. 18

"In his favor is life."

அவருடைய தயை சீவனைத்தரும். சங். ௩௰. ௫.

க கிடைத்த நன்மை யாவையும்
சிந்தித்து அடியேன்
துதி நிறைந்த கீதமும்
செலுத்திப் பாடுவேன்.

உ குழந்தை முன் நான் வளர,
எனக்குத் தேவனே,
சகாயஞ் செய்து தந்திட்ட
தயை மிகுந்ததே.

ந வாலப் பிராய வாழ்விலும்
தீமைக்குட்படுகில்,
தாங்கிக்கொண்டீர் துன்பத்திலும்
உமது புயத்தில்.

௪ மா கோடாகோடி தீமைகள்
விலக்கி ரட்சித்தீர்,
கைமாறில்லாத நன்மைகள்
கதிக்கப்பண்ணினீர்.

௫ இம்மையில் என்றுந் தாழ்மையாய்
தேவன்பை நினைப்பேன்;
மறுமையில் வணக்கமாய்
உம்மைப் புகழுவேன்.

௬ புகழ்ச்சி கீர்த்தி தோத்திரம்
ஒன்றான உமக்கே,
இகத்திலும் பரத்திலும்
கொடுக்கத் தகுமே.

௰௬ பாட்டு. C. M. 19

"Surely goodness and mercy shall follow me."

நன்மையும் இரக்கமும் என்னைத் தொடருமே. சங். ௨௩. ௬.

௧ கர்த்தாவே, நாங்கள் தினமும்
உம்மாலே பிழைப்போம்;
நேரிடும் எந்த மோசமும்
உம்மாலே தப்புவோம்.

௨ பாவிகளான எங்களை
சீக்கிரந் தண்டியீர்;
அடியார் செய்த் பாவத்தை
அன்பாக மன்னிப்பீர்.

௩ இக்கட்டில் கெஞ்சும் பொழுது,
நீர் கேட்பீர் அருளாய்;
நீர் செய்யும் மகா தயவு
எட்டாத திரளாய்.

௪ இனி அனந்த வாழ்வையே
பரத்தில் அடைவோம்;
அதற்காய் நித்த நித்தமே
உம்மைப் புகழுவோம்.

உ0 பாட்டு. L. M. 20

Redeeming Grace.

இரட்சிப்புக்கேதுவான கிருபை.

க பிதாவே, உமதாவியை
அன்பாய் அனுப்பும்; அவரை
அடியாருக்கு ஈந்திடும்,
நற்சீரைத் தந்திரட்சியும்.

உ கெட்டோம், திரும்ப ரட்சித்தீர்,
விழுந்தோம், மீட்புண்டாக்கினீர்;
இம்மீட்பை நாங்கள் பற்றவும்
மெய் விசுவாசந் தந்திடும்.

ங துன்பத்தை இன்பமாக்குவார்,
இருட்டிற் சோதி காண்பிப்பார்;
மந்தாரம் மூடுஞ் சாவிலே
அருளின் ஒளி ஈவாரே.

உக பாட்டு. L. M. 21

God all gracious.

தேவன் மகா கிருபையுள்ளவர்.

க பிதாவே, என்னைத் தேவரீர்
தெய்வீக ரூபாய்ச் சிஷ்டித்தீர்;
நீர்தான் என் சீவன், உம்மையே
பற்றுதிருத்தல் அழிவே.

உ நான் சாவுக்குச் சாண் தூரமாய்
இருந்தபோதெல்லாம், அன்பாய்,
உண்டான மோசங்களையே
விலக்கிக் காத்து வந்தீரே.

ங திவ்விய மைந்தனே, உம்மால்
நான் மீட்கப்பட்டோன் அன்பினால்;
அடியேன் தப்பத் தேவரீர்
பலியாய்ச் சீவனை விட்டீர்.

௪ நீரே என் நல் ஆசாரியர்,
என் ஆறுதல், என் ரட்சகர்;
என் சீவன், சொஸ்தம், அருளே,
நான் கதிபெறும் வழியே.

௨௨ பாட்டு. 7's. 22

"All thy works shall praise thee."

உம்முடைய கிரியைகள் எல்லாம் உம்மைத் துதிக்கின்றன.
சங். ௱௪௫. ௰.

௧ வானம், பூமி, கடல்கள்,
அங்கமர்ந்த செந்துக்கள்,
ஆண்டவனை வாழ்த்தவே,
நெஞ்சே, நீயும் வாழ்த்தல் செய்.

௨ விண்ணிலுள்ள சூரியன்,
அதைச் சேர்ந்த சந்திரன்,
மற்றச் சுடர்கள் எல்லாம்
கர்த்தருக்கு வாழ்த்தலாம்.

௩ வானம் போலப் பூமியும்,
அதிலுள்ள வஸ்துவும்,
கர்த்தரின் விவேகத்தை
காட்டுமென்று நீ நினை.

௪ கர்த்தர் செய்தவையெல்லாம்
மா விசேஷ மேன்மையாம்;
அந்த மேன்மை சொல்லவே
மாந்தர் தக்கோர் அல்லவே

௫ ஆகிலுந் திராணிக்கே
தக்கதாக வாழ்த்தல் செய்;
நன்றியை எண்ணுதவன்
மோட்சத்துக்கபாத்திரன்.

உரு பாட்டு. L. M. 23

"The blessed and only Potentate."

அவர் ஆனந்தமுள்ள ஒரே ஏகாதிபதி. க தீமோ. சு. ௰ரு.

க அழிவில்லாத தேவனே,
மண், விண், கடல்கள், யாவுக்கும்
காரண கர்த்தர் உம்மையே
சிஷ்டி எல்லாம் பணிந்திடும்.

உ சராசரம் அனைத்தையும்
சிட்டித்த மா யெகோவா நீர்;
ராசாக்களுக்கிராசாவும்
என்றைக்கும் ஒன்றாய் ஆளுவீர்.

ஙு உமக்கே நாங்கள் தொண்டர்கள்
வேறொரு தேவன் அறியோம்;
சொரூபம், ஓமம், பூசைகள்
எல்லாம் வெறுத்துத் தள்ளுவோம்.

ச அஞ்ஞான இருள் மூடின
எங்குள்ள தேசம் யாவிலும்
பெய் மதம் நீங்க, உமது
மேன்மை விளங்கச் செய்திடும்.

ரு பொறாமை, கோபம், பெருமை
அகற்றி அன்புண்டாகவே
பூமியில் உமதாளுகை
பரம்பப்பண்ணுங், கர்த்தரே!

உச பாட்டு. 7's. 24

All under God's control.

யாவுந் தேவ ஆளுகைக்குட்பட்டது.

க மோட்ச லோக நாதரே,
நித்த அன்புமுள்ளோரே,
லோகச் செய்கைகள் எல்லாம்
தேவரீருக்குள்ளேயாம்.

௨ நான் பிறக்கச் செய்தவர்,
சாவுமட்டுங் காப்பவர்;
எனக்கேற்ற யாவையும்
தேவ ஞானம் ஆண்டிடும்.

௩ ரோக காலம் இன்பமும்,
ஏழைமை நற்செல்வமும்,
துக்கமுஞ், சந்தோஷமும்,
தேவ நேசம் அருளும்.

௪ தூய நீதியுள்ளோரே!
எனக்குள்ள யாவுமே,
உமக்கே அளிக்கவும்
பெலன், குணம், தந்திடும்.

௫ காலந் தோறும் உம்மையே
தோத்திரித்தல் முத்தியே;
நீர் என் செல்வமானவர்,
என்றும் அன்புக்கேற்றவர்.

௨௫ பாட்டு. L. M. 25

Psalm 37. 3.

சங்கீதம் ௩௭. ௩.

௧ கர்த்தாவை நல்லபத்தியால்
எப்போதும் நம்பும் நீதிமான்,
எத்தீங்கிலேயுங் கர்த்தரால்
ரட்சிப்படைந்து பூரிப்பான்.

௨ சந்தோஷஞ் செய்ய ஏற்ற நாள்
அவர் தெரிந்திருக்கிறார்;
தண்டித்த பின் மகிழ்ச்சியால்
சன்மார்க்கனை நிரப்புவார்.

௩ உன் காரியத்தைச் சித்தியாய்
தயாளத்தில் கடாட்சிப்பார்;
நீ ஒப்புவித்தால் நிசமாய்
உன் நயத்தை விசாரிப்பார்.

௪ மன்றுடிப் பாடிப் பத்தனாய்
நடந்துகொண்டுன் வேலையை
மெய்யோடே செய்து, உண்மையாய்
பெற்றுக்கொள்வாய் இரட்சிப்பை.

உ௬ பாட்டு. 8.7. 26

Praise for God's providential care. Ps. 62.

பராபரனுடைய அன்புள்ள விசாரணையைத் துதித்தல். சங். ௬௨.

௧ பாவத்தாலே கெட்டுப்போன
நம்மை மீட்ட சுவாமிக்கே,
ஏற்ற தோத்திரஞ் செலுத்த
வாருங்கள், சன்மார்க்கரே!

௨ சுவாமி, எத்தனை விஸ்தாரம்
உம்முடைய கிரியை!
சொல்ல முடியாத ஆழம்
தேவரீரின் யோசனை.

௩ சில நாள் துன்மார்க்கர் வாழ்ந்து
புஷ்பம்போலச் செழிப்பார்;
தேவ கோபத்தாலே தாழ்ந்து
வாடி மாண்டுபோகுவார்.

௪ நீதிமான் மென்மேல் பலத்து
மரம்போல ஓங்குவான்;
கர்த்தர் வீட்டில் நாட்டப்பட்டு
என்றும் அங்கே வாழுவான்.

௩-ம் பிரிவு.

சுதனனவருக்குத் துதி.

அவருடைய முதலாம் வருகையையும், நாமங்கள் தொழில்களையும், மரணத்தையும், உயிர்த்தெழுந்ததையும், பரத்துக்கேறினதையும், இரண்டாம் வருகையையும்பற்றிப் பாடியது.

உஎ பாட்டு. 8.7. **27**

"The desire of all nations shall come."

சருவ தேசத்தாராலும் விரும்பப்படத்தக்கவர் வருவார்.
ஆகா. உ. எ.

க வாரும் வாஞ்சைப்பட்ட யேசு,
எம்மை மீட்க வந்த நீர்,
எங்கள் பாவ பாரம் நீங்க
விடுவித்துத் தேற்றுவீர்.
இஸ்ரவேலின் மா பெலத்த
சார்வும் மேசியாவும், நீர்;
மாந்தர் யாரும் வேண்டிக்கொண்ட
பாவ நாசர், தேவரீர்.

உ எம்மை ரட்சித்தாள வந்த
பிள்ளையான ராயரே,
என்றும் உம்மை அண்டிக்கொள்ள
உள்ளே வாரும், மீட்பரே!
எங்கள் நெஞ்சை உமதாவி
சீர்திருத்தி ஆளவும்;
நம்மை உமதன்பினலே
வானத்திற்குயர்த்தவும்.

உஅ பாட்டு. 7's. 28

"She shall bring forth a son, and thou shalt call his name Jesus."

அவள் ஒரு புத்திரனைப் பிரசவிப்பாள்; அவருக்கு இயேசுவென்று பெயரிடுவாயாக. மத். க. உக.

க வாரும், லோக மீட்பரே,
கன்னி பெற்ற மைந்தரே,
நீர் பிதாவால் வந்தவர்
லோகத்தாரின் ரட்சகர்.

உ சோதியாம் பிதாவுக்கு
சாயலாக நமது
மேன்மையான மீட்பர் நீர்,
தாழ்மையாகத் தோன்றினீர்.

ஙா எங்கள்மேற் பிரகாசியும்,
என்றென்றைக்கும் ரட்சியும்;
நீர் பலத்த தேவனுர்
நம்மைக் காக்கும் நாயனுர்.

உகூ பாட்டு. 7. 6. 29

"He hath visited and redeemed his people."

தம்முடைய சனங்களைக் கடாட்சித்து மீட்டுக்கொண்டார். லூக். க. எ௮.

க உன் சஞ்சலத்தை விட்டு
கர்த்தாவின் சபையே,
சந்தோஷத்தைத் தரித்து,
அனந்த துதிசெய்.
அநேக நாள் நீ காத்த
உன் மீட்பர் பிறந்தார்;
கிலேசம் யாவும் மாற்ற
உன்னேடே தங்குவார்.

உ இராவு சென்றுபோக
உன் சோதி உதித்தார்;
நற் கதிராலே லோக
விசாரம் நீக்குவார்.
பசாசினாலே வந்த
மந்தாரம் அற்றுப்போம்;
இயேசுவாற் சிறந்த
பிரகாசம் அடைந்தோம்.

ஈ இயேசுவே, நீர் வாழ்க!
பிதாவின் சுதனே,
நிர்ப்பந்த நரனாக
பிறந்த தேவனே.
விண்ணிற் கர்த்தாதி கர்த்தர்,
மண்ணில் தணிந்தீரோ?
அநாதியான நித்தர்
குழந்தை யானீரோ?

ச நான் வானத்துக்கு ஏற
பூலோகத்தில் வந்தீர்;
நான் தூதரோடே சேர
தீயோர்க்குள் தங்கினீர்.
நான் வாழ, உம்மைத் தாழ்த்தி,
பிழைக்க மரித்தீர்;
நான் என்றும் உம்மை வாழ்த்தி
வணங்க ரட்சிப்பீர்.

௩௰ பாட்டு. L. M. 30

"*Behold I bring you good tidings of great joy.*"

மிகுந்த ஆனந்தத்தை உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கிறேன். லூக். உ. ௰.

க பரத்தினின்று வந்த நான்
அனுப்பப்பட்ட தூதன்தான்;
நற்செய்தி சொல்வேன், கேளுங்கள்,
பயமில்லாமல் வாழுங்கள்.

௨ இன்றுங்கள் கர்த்தரானவர்
மேசியா உங்கள் ரட்சகர்,
தாவீதின் ஊரில் ஏழையர்
ரட்சிப்புக்காகச் சனித்தார்.

௩ பரத்திலே நாம் ஏகமாய்
என்றைக்குந் தங்கும்படியாய்
இக்கட்டும் பாவமும் எல்லாம்
இம்மீட்பரால் நிவர்த்தியாம்.

௩௧ பாட்டு. L. M. 31

"Unto us a child is born," &c.

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். ஏசா. ௯. ௬.

௧ இரக்கமுள்ள யேசுவே,
நரரின் தன்மையாகவே
பிறந்த உம்மைப் போற்றுவோம்,
வானோரும் பாடக் கேட்கிறோம்.

௨ அளவில்லாத வல்லவர்
சமஸ்தத்தையுஞ் செய்தவர்
குழந்தையாய்ப் பிறந்தனர்,
பூவோர்க்கும் மோட்ச காரணர்.

௩ அநாதி சோதி பூமிக்கு
வெளிச்சம் தந்து மாந்தர்க்கு
சுடர்கொடுக்க ராவிலே
பிரவேசித்தார், சந்தோஷமே!

௪ அவற்றை யாருஞ் சிந்தித்து
சந்தோஷமாகப் பூரித்து,
தீபத்தை கண்டு வாழ்த்துங்கள்,
அதில் நடக்கப் பாருங்கள்.

௩௨ பாட்டு. 8. 7. 4. **32**

The birth of Christ.

கிறிஸ்துநாதரின் பிறப்பு.

க லோகத்தாரின் வாஞ்சையான
கர்த்தர் யேசுக்கிறிஸ்துவே,
தேவரீருக்கேற்றதான
சித்தத்தோடு போற்றவே,
என்னிடத்தில்
அருளைக் கடாட்சியும்.

உ நானும் மற்ற மாந்தர் யாரும்
மோட்சமற்றுப் போயினேம்;
லோகத்துள்ளோர் நாங்கள் யாரும்
சாபத்தில் அகப்பட்டோம்.
அதை நீக்கி,
மோட்சந் தரப் பிறந்தீர்.

௩ பாவக் கட்டில் அகப்பட்ட
கட்டவிழ்க்க ஏற்பட்டீர்;
துன்ப பாரச் சுமை தாங்க
ஆற்றல்செய்து ரட்சித்தீர்.
நான் எளியன்.
என்னைச் செல்வனாக்கினீர்.

ச ஆ! கர்த்தாவே இந்த அன்பை
என்றும் நான் ருசிக்கவே
தயை தந்து இந்த நெஞ்சை
ஏவி, சுத்தோனாகவே
நான் நடக்க
என்னைக் காத்துக்கொண்டிடும்.

௩௩ பாட்டு. P. M. 33

"I am the light of the world."

நான் உலகத்தின் ஒளி. யோவா. ௮. ௰௨.

௧ கடாட்சமுள்ள யேசுவே,
என்னெஞ்சை நீர் நன்றாக
சந்தோஷிப்பித்து என்னிலே
மிகுந்த ஊக்கமாக,
தெய்வீக அன்பை ஊற்றிய
தயையினாலே உத்தம
புகழ்ச்சி சொல்வேனாக.

௨ இராவில் நீர் நட்சத்திரம்,
பகலிலே குளிர்ச்சி;
குறைவில் நீர் என் பொக்கிஷம்,
என் தாழ்விலே உயர்ச்சி;
கசப்பிலே தித்திப்பு நீர்,
இளைத்த என்னைத் தேவரீர்
பெலக்க நீர் என் சத்தி.

௩ நிகரில்லாத சோதியே,
என்றென்றுஞ் சிந்தித்தாலும்
பொருள் அடங்கவில்லையே,
விரும்பிக்கொள்ளும் யாவும்
உம்மால் உண்டாகும், யேசுவே,
தயையுடைய நேசரே,
என்றைக்கும் என்னை ஆளும்

௩௪ பாட்டு. 7.6. **34**

Christ the light of the world.

கிறிஸ்துநாதர் உலகத்துக்கு வெளிச்சம். யோவா. ௮. ௰௨.

க அருளின் சோதியான
அன்புள்ள யேசுவே,
நரரின் சீவனான
உயர்ந்த நாயனே,
என் பாவத்தை மன்னித்து
அகற்றி அருளும்;
சந்தோஷத்தைத் தந்திட்டு
என்மேல் அன்பாயிரும்.

உ நீர் தேவ ஆவியாலே
மகிழ்வும் வன்மையும்
தந்தென்னில் அன்பினாலே
எல்லாம் நடப்பியும்.
என்னாலேதான் நான் கெட்டோன்;
என் சென்ம பாவத்தால்
ஏதேனும் நன்மையற்றோன்
நான் செய்த தீமையால்.

௩ தயாபரா! ரட்சித்து
துற்செய்கை யாவையும்
என் ஆத்துமாவை விட்டு
விலக்கி நீக்கிடும்.
என் நெஞ்சு சுத்தமாக
நல்வார்த்தைக்கேற்கவே
நடக்கத்தக்கதாக
இரங்கும், கர்த்தரே!

௩௫ பாட்டு. 6s. & 8s. 35

This is the true Light.

அவரே மெய்யான ஒளி. யோவா. ௧. ௯.

௧ ஆ! லோகத்தாரின் ஒளியாய்
உதித்த யேசுக்கிறிஸ்துவே,
இருள் நிறைந்த மாந்தர்க்காய்
பிறந்த சீவசோதியே,
எங்களிற் பிரவேசியும்,
பிரகாசமாக்கி அருளும்.

௨ சொல்லுக்கெட்டாத அன்பினால்
தேவ சொருபமானவர்
இப்பூமியிற் பிறந்ததால்,
நிர்ப்பந்தமுள்ள மனிதர்
மகிழ்ச்சியாகப் பாடவே
இடமுண்டாக்கப்பட்டதே.

௩ கர்த்தர் இவ்வித அன்பினால்
காண்பித்த நல்ல யோசனை
நம்மிற் பலிக்க, அதினால்
குழந்தைக்கேற்ற சிந்தனை
நமக்குண்டாகும்படிக்கே
இரங்கும், தேவசுதனே!

௩௬ பாட்டு. P. M. 36

"Return unto me, for I have redeemed thee."

நான் உன்னை மீட்டுக்கொண்டேன்; ஆதலால் நீ என்னிடத்தில்
திரும்பு. ஏசா. ௪௪. ௨௨.

௧ சீவ கர்த்தரே,
பாவக்கேட்டிலே
சாகும் என்னைத் தப்புவித்து
சேர்த்த உம்மை நான் துதித்து
போற்றவேண்டுமே,
சீவ கர்த்தரே!

உ அன்பின் ரூபம் நீர்,
என்னைத் தேவரீர்
அன்பாய்ச் சேர்த்துக்கொண்டதாலே
என்னை மெய் மகிழ்ச்சியாலே
பூரிப்பாக்கினீர்
அன்பின் ரூபம் நீர்.

௩ உம்மைத் தேடினேன்,
என்னைத் தேற்றுமேன்;
நம்பிக்கையின் தீபத்திற்கு
நல் வளர்ப்புண்டாவதற்கு
எண்ணெய் வாருமேன்,
உம்மைத் தேடினேன்.

௪ வல்ல கர்த்தரே,
துன்ப நாளிலே
லோக மோசத்துக்குத் தப்ப
என்னை வன்மையால் நிரப்ப
வாரும், யேசுவே!
வல்ல கர்த்தரே.

௩௭ பாட்டு. 7.6. **37**

" Surely he hath borne our sins and carried our sorrows."

மெய்யாய் அவர் நம்முடைய நோய்களைத் தாங்கினுர்; நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். ஏசா. ருு. ௪.

க எவற்றிலும் உயர்ந்த
அன்பான யேசுவே,
பரத்திலே சிறந்த
பத்தாவே, உமக்கே
என் நெஞ்சை வாஞ்சையாலே
கொடுத்திருக்கிறேன்;
நீர் பட்ட நோவினுலே
சுகம் அடைகிறேன்.

உ என் சோர்வை நீரே மாற்றி,
என் நெஞ்சின் துக்கத்தை
கடாட்சமாக ஆற்றி,
புலம்பும் ஏழையை
ரட்சிக்கத்தக்கதான
இம்மானுவேலானீர்;
கர்த்தாவே, நீர் மெய்யான
இரட்சை கொடுப்பீர்.

௩ ஆ! யேசுவே, மலர்ந்த
முகத்தைக் காண்பியும்;
என் உள்ளத்தில் உயர்ந்த
அன்பாய்ப் பிரகாசியும்.
என்னில் நீரே தரித்தால்,
களிப்பேன், யேசுவே,
என் உள்ளத்தை நீர் விட்டால்.
சலிப்பேன், மீட்பரே.

௩அ பாட்டு. 8. 7. 4. 38

Christ the Saviour.

கிறிஸ்துவானவர் மீட்பர்.

க என்னைத் தேவசாயலான
சிஷ்டியாக்கிப், பின்பு நான்
கெட்டபோதென் மீட்பரான
கர்த்தரே, நீர் நேசவான்.
என்னை என்றும்
உம்மில் நிற்கச் செய்திடும்.

உ மானிடர்க்கு மார்க்கத்தையும்
மெய்ம்மையையும் நித்திய
சீவனையும் மோட்சத்தையும்
ஈந்த மீட்பராகிய
நீரே என்றும்
என்னில் தங்கி ரட்சியும்.

௩ எனக்காகப் பாடுபட்டும்
நிந்தையுள்ளதாகிய
முடிபெற்றுச் சாகுமட்டும்
கஸ்திப்பட்டு ஏறின
யேசு சுவாமி,
என்னைக் காத்திரட்சியும்.

௩௯ பாட்டு. 7's. 39

"Unto you is born a Saviour."

இரட்சகர் உங்களுக்குப் பிறந்தார். லூக். ௨. ௰௧.

க மீட்கப்பட்ட கூட்டமே!
உங்கள் மீட்பர் பேரிலே
பாடி வாழ்த்தல் செய்யுங்கள்,
மீட்ட அன்பைச் சொல்லுங்கள்.

௨ பாவத்தாலே கஸ்தியை
பட்டோரே இரட்சிப்பை
ஏற்றுங்கள், இயேசுவே
மீட்பதற்கிறந்தாரே.

௩ அந்தகாரப் பேயினை
கிறிஸ்து தாழ்த்தி, எங்களை
அதினின்றிரட்சித்தார்
மீட்க யேசு தேவனார்.

௪ ஆதலால் மகிழ்வோடே
போற்றிப் பாட, மக்களே,
தூதரோடுங் கூடுங்கள்
மீட்பையே உயர்த்துங்கள்.

௪0 பாட்டு. C. M. 40

"Christ also hath loved us, and given himself for us."

கிறிஸ்து நமக்காக தம்மைத் தேவனுக்கு சுகந்த நைவேத்திய
மாகவும் பலியாகவும் ஒப்பித்தார். எபே. ௫. ௨.

க ஆ! மீட்பரே, நீர் ரத்தத்தால்
மீட்டோரை எண்ணீரோ?
உம் முகத்தைத் தேவாவியால்
காண்பிக்க மாட்டீரோ?

உ பூர்வீகத்தில் என் தேவன் நீர்
நிறைந்த தாழ்மையாய்
மா கஸ்திப்பட்டு, சகித்தீர்
எட்டாத தயவாய்.

௩ இரத்தக் கையும் கால்களும்
காண்பியும், தேவனே,
எல்லாருடைய நெஞ்சமும்
உருகச் செய்வீரே.

௪ உமது வாக்கை ரூபிக்க
ஒத்தாசை காண்பிப்பீர்;
இரத்த ஊற்றில் கழுவ
நீர் அருள் கொடுப்பீர்.

௪க பாட்டு. 8. 7. 41

Praise for redemption.

மீட்புக்காகத் தோத்திரஞ் செலுத்திப் பாடியது.

க எங்களுக்கு மீட்பாக
தேவமைந்தனான நீர்,
பூமியில் மா ஏழையாக
மாந்தர் சாயல் தரித்தீர்

௨ எங்களை ரட்சிக்க வந்த
தேவ ஆட்டுக் குட்டியே,
பாவத்தாலுண்டாக்கப்பட்ட
ஆக்கினை சுமந்தீரே.

௩ வானோரென்னும் வென்ற சபை
"யேசுக்கிறிஸ்து அரசர்"
என்று சொல்லி, கனம், கீர்த்தி,
தோத்திரஞ் செலுத்துவர்.

௪ உம்மைப் பற்றிக்கொண்டிருந்த
யாவரும் "நீர் ரட்சகர்"
என்று உமது மிகுந்த
அன்பைப் போற்றிப் பாடுவர்.

௪௨ பாட்டு. 8. 7. 4. **42**

" A man shall be an hiding place from the wind."

அந்தப் புருஷன் பெருங்காற்றில் மறைவிடமாக இருப்பான்.
ஏசா. ௩௨. ௨.

௧ லோகத்தாரின் தஞ்சம் என்னும்
யேசு சுவாமி தேவரீர்,
ஈனர் துக்கப்பட்டோர் யார்க்கும்
சத்தி ஆறுதலும் நீர்,
என்னை நோக்கி
தேற்றி ஊக்கம் தந்திடும்.

௨ என் இதையம் சென்மப் பாவம்
ஊறும் ஊற்றேயானது;
என்னுடைய முழுச் சுபாவம்
தீமையால் நிறைந்தது.
பாவத்தோடு
நான் பிறந்தோன், யேசுவே!

௩ உம்முடைய ரத்தத்தாலே
குற்றம் நீக்கி ரட்சியும்;
எனக்குமதாவியாலே
சுத்திகரித்தருளும்.
ஆ! கர்த்தாவே,
ஆற்றித் தேற்றி ஆண்டிடும்.

௪ என்னுடைய நெஞ்சில் வந்து
தங்கும், என் சகாயரே!
அதால் துக்கத்தை மறந்து,
வெற்றிகொண்டு வாழ்வேனே,
உமக்கேற்ற
கீதம் பாடி உரைப்பேன்.

௪௩ பாட்டு. L. M. 43

"Thou hast destroyed thyself, but in me is thine help."

நீயே உனக்குக் கேடுவருவித்தாய், ஆனாலும் உனக்குத் துணை நம்மிடத்திலுண்டு. ஓசியா. ௰௩. ௯.

௧ ஒரே கர்த்தர் இருக்கிறார்,
பிதா, குமாரன், ஆவியார்;
அவர் எல்லாம் படைத்தவர்
எப்போதுங் காத்துக்கொண்டவர்.

௨ படைப்பில் ஆதி மானிடர்
தெய்வீகச் சாயலானவர்;
அவர்களுக்குண்டானது
மெய் ஞானம், சுத்தங், களிப்பு.

௩ பசாசின் தந்திரத்தினால்
அதை இழந்துபோனதால்,
இயல்பாய் யாருங் கெட்டோர்கள்
நடத்தையாலும் பாவிகள்.

ச அதாலே தேவ கோபமே
உண்டாகப், பேயின் கையிலே
விழுந்து சாவுக்குட்பட்டோம்,
நரகத் தீக்கும் நேரானோம்.

ரு அதற்குத் தப்பி மோட்சத்தை
அடையத்தக்க வகையை
காணாமல்போனபொழுதே,
கர்த்தர் ரட்சிப்பைத் தந்தாரே.

சச பாட்டு. C. M. 44

"This is the name whereby he shall be called, 'The Lord our righteousness.'"

யெகோவாவே நம்முடைய நீதியென்னும் நாமம் அவருக்கிடப்படும். எரே. உரு. சு.

க சிறையுற்றோரின் மீட்பரே,
என் யேசுவே, நீர் தாம்
தயையால் என்னைத் தேற்றவே
மகா இரக்கமாம்.

உ ஆன்மாவைத் தாங்க வல்லவர்
உதார தேவன் நீர்;
ரட்சிப்புக்கே நீர் காரணர்
பொல்லாங்கை நீக்குவீர்.

ஙு நான் சொந்த நீதியற்றவன்
என் நீதி கந்தைதான்;
உம்மால் நான் நீதியுள்ளவன்
மிகுந்த பாக்கியவான்.

ச இம்மேன்மைக்கே என் ஆயுளில்
உம்மை எந்நேரமும்
துதிக்க நீர் என் உள்ளத்தில்
பலத்தை ஊற்றிடும்.

சரு பாட்டு. C. M. **45**

" There is none other name under heaven whereby we must be saved."

நாம் இரட்சிப்புப் பெறுவதற்கு வானத்தின்கீழ் வேறொரு நாமம் இல்லை. அப். ச. ௧௨.

க எங்கள் முயற்சிப் பலனால்
நாம் செயங்கொள்ளோமே;
நீர் சிந்தின இரத்தத்தால்
வெல்வோம், நல்மீட்பரே!

உ நாம் மீறி விட்ட கற்பனை
இடி முழக்கமாய்
நாசப்படுத்தும் எங்களை
கர்த்தாவின் முனிவாய்.

ஙு என்றாலும், நமக்காகவே
நீர் வந்து மரித்தீர்;
பாவத்தைப் போக்கும் பலியே,
என்றைக்கும் வாழுவீர்.

ச கர்த்தாவே, நீர் மரித்ததால்
நாம் வாழ்ந்து பிழைப்போம்;
நீரே ஒப்பித்த பலியால்
ரட்சிப்பை அடைவோம்.

ரு இவ்வாழ்வு சீவன் முத்தியும்
கிடைக்கும் ஏதுவே
நீர்பட்ட பாடு மரணம்,
தெய்வீக மீட்பரே!

சசு பாட்டு. S. M. 46

"The righteousness which is of God by faith."

விசுவாசமூலமாய் தேவனாலே வருகிற நீதியையுடையவனாகி, &c.
பிலி. ௩. ௯.

க என் நீதி யேசுவே,
அவர் இல்லாவிட்டால்
பிதாவுக்கு முன்பாகவே
நான் கெட்டோன் பாவத்தால்.

உ என் சாவு யேசுவால்
விழுங்கப்பட்டது
இவர் காருண்ணியத்தினால்
என் பாவம் நீங்கிற்று.

௩ எப்போதும் வாழுவேன்,
நியாயத்தீர்ப்புக்கும்
பயப்படாதவனாவேன்,
என் ஆவி பூரிக்கும்.

ச என் தெய்வம் தயவால்
கிறிஸ்து நிமித்தமே
கடாட்சம்பண்ணி ரட்சித்தால்
ஓர் தீங்குஞ் சேராதே.

சஎ பாட்டு. L. M. 47

"He is Lord of lords, and King of kings."

அவர் கர்த்தாதி கர்த்தரும் இராசாதி இராசனுமாயிருக்கிறார்.
வெளி. ௰எ. ௰ச.

க ராசாக்களுக்கிராசாவே,
பூலோகத்தாரின் சோதியே,
இயேசு தேவனுருக்கு
புகழ் உண்டாகத்தக்கது.

உ விரும்பப்பட்ட தேவரீர்
அன்பாக வந்திருக்கிறீர்;
சபையெல்லாம் அன்பாகவே
உம்மைத் துதிக்க ஞாயமே.

ந கடலுக்கெல்லையை வைத்தீர்,
எல்லாவற்றையும் பண்ணினீர்;
அணையிற் புல்மேல் யேசுவே,
படுக்க வைக்கப்பட்டீரே.

ச நரர்களுக்குத் தீமையை
நீரே விலக்கிக் கஸ்தியை
சகித்ததாலே அவர்க்கு,
அனந்த நன்மை வந்தது.

ரு சந்தோஷித்தும்மைப் பற்றினேன்,
உம்மால் ரட்சிப்பைக் கொள்ளுவேன்;
உம்மால் என் பாவஞ் சாபமும்
எல்லா இக்கட்டும் நீங்கிடும்.

கூ தராதலத்தில் தினமும்
பரத்தில் நித்த நித்தமும்
சந்தோஷத்தோடே வாழுவேன்,
புகழ்ச்சியைச் செலுத்துவேன்.

சஅ பாட்டு. C. M. 48

"*He is Lord of all.*"

எல்லாருக்குங் கர்த்தராயிருக்கிறார். அப். ம. நகூ.

க எல்லாருக்கும் மா உன்னத
கர்த்தாதி கர்த்தரே,
மெய்யான தேவ மனித
நீர் வாழ்க, யேசுவே!

உ விண்ணில் மேலான தேவன் நீர்
பகைஞர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்;
நீர் வாழ்க, யேசுவே!

௩ பசாசு, பாவம், லோகமும்
இச்சத்துருக்களே
அழிந்துபோக மிதியும்;
நீர் வாழ்க, யேசுவே!

௪ நீர் வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே
பரத்தில் செங்கோல் செலுத்தும்
நீர் வாழ்க, யேசுவே!

௫ விண்ணோர்களோடும் மண்ணுள்ளோர்
என்றைக்கும் வாழ்கவே
பரத்தின் வாசல் திறந்தோர்
நீர் வாழ்க, யேசுவே!

சக பாட்டு. P. M. **49**

God my Shepherd.

கர்த்தர் என் மேய்ப்பரானவர்.

௧ கர்த்தர் என் மேய்ப்பரானவர்;
நன்றாகக்காக்கிறாரே;
அனைத்தையும் என் ரட்சகர்
அன்பாக ஈகிறாரே;
யாவையும் பார்க்க உத்தம
தெய்வீக வார்த்தையாகிய
நன் மேய்ச்சல் எனக்குண்டு.

௨ சுகங்கொடுக்கும் ஆவியை
என் நெஞ்சத்துக்குக்காட்டி,
என் ஆத்துமாவின் தாகத்தை
அவர் நன்றாக் மாற்றி,
இயேசு அவராகையால்,
என்னை மிகுந்த நேசத்தால்
நடத்தி, ஆண்டுகொள்வார்.

௩ ஓர்வேளை சோதி இன்றியே,
மிகுந்த துக்க சாவின்
இருண்ட பள்ளத்தாக்கிலே
நடந்தும், அவ்விருட்டின்
பொல்லாப்புக்குப் பயப்படேன்;
நீர் நீட்டுங் கோலைப் பற்றுவேன்;
அதே என்னை நடத்தும்.

௪ மெலிந்தோனுக்கோர் பீடத்தை
பகைவர்க்கே முன்பாக
வைத்தெண்ணெய்யால் என் உச்சியை
மகா கடாட்சமாக,
சிறப்பித்தின்பஞ் செய்கிறீர்;
என் பக்கத்தில் இருக்கிறீர்;
என் பாத்திரம் நிரம்பும்.

௫ என் சீவனுள்ள காலத்தில்
தேவன்பு தான் கிடைக்கும்;
கடைசியான நேரத்தில்
அதே என்னை அழைக்கும்;
இங்கே கர்த்தாவின் வீட்டிலும்,
அங்கே மகா தலத்திலும்
என்றைக்கும் நிலைநிற்பேன்.

௫௰ பாட்டு. C. M. 50

Christ crowned as Lord of all.

கிறிஸ்துவே எல்லாருக்கும் மேலாக முடிசூட்டப்பட்டவர்.

க போற்றுங்கள் யாரும், யேசுவின்
நாமத்தின் மேன்மையை
தூதர்கள் கூறி கர்த்தரின்
மேல் சூட்டும் முடியை.

உ சூட்டும் இரத்த சாட்சிகாள்
ஸ்தேவானின் கூட்டமே,
துதிசெய்தும் மா நாதனுர்
மேல் சூட்டும் முடியை.

௩ தாவீதின் வேரும் வித்துமாம்
தெய்வீக யேசுவை
அன்பரே போற்றி யெகோவா
மேல் சூட்டும் முடியை.

௪ இஸ்ரவேலே, நீ கர்த்தரால்
ரட்சிப்படைந்ததை
சிந்தித்துக்கொண்டிம்மானுவேல்
மேல் சூட்டும் முடியை.

௫ சிற்றின்பப்பாவிகாள், நீர்தான்
உலோக இச்சையை
முழுதும் நீக்கி எம்பிரான்
மேல் சூட்டும் முடியை.

௬ பூவின் சிருட்டிக்கோத்திரம்
யாவும் மகிமையை
செலுத்தி எங்கள் மெய்ப்பரன்
மேல் சூட்டும் முடியை.

ருக பாட்டு. 7's. 51

Christ the Light of men.

கிறிஸ்துவே மனிதருடைய ஒளி.

க என் மெலிந்த மனதை
திடமாக்கிக்கொண்டிரும்,
தாகிக்கும் என் உள்ளத்தை
தேற்றி ஆசீர்வதியும்,
அருளைக்கடாட்சியும்,
விரைவாய் வந்தருளும்.

உ சூரியன் உதிக்கையில்,
அந்தகாரம் நீங்குமே,
நீர் என்னில் தோன்றுமையில்
விசனம் பிறக்குமே,
கிருபையின் கிரணம்
ஆத்துமாவுக்கின்பமாம்.

ஈ பாவமான இருளை
நீக்கி, பிரகாசியும்,
தேவ சோதியால் என்னை
நிறைவாக்கி அருளும்,
பட்டப்பகல் வரைக்கும்
பெருஞ் சோதியாய் இரும்.

ருஉ பாட்டு. 7's. 52

Christ a refuge.

கிறிஸ்துவே புகலிடம்.

க ஆ, அன்புள்ள யேசுவே
இந்த அந்தகாரத்தில்
மானிடர் தவிக்கவே
சூறைக்காற்றடிக்கையில்,
உம்மிடத்தில் சேருவேன்,
என்னைக் காத்துக்கொண்டிரும்,
மனதைக்கொடுக்கிறேன்,
அக்கரையில் ஏற்றிடும்.

உ தேவரீர் இராவிடில்
வேறு துணை இல்லையே,
நான் தனித்திருந்திடில்
கேட்டுக்குள்ளே போவேனே.
ஆ, துணையில்லாத நான்
உம்மிடத்தொதுங்கிறேன்,
நீர் நல்லோடமாய் வந்தால்
அக்கரையில் சேருவேன்.

ஈ கிறிஸ்துவே, என் நெஞ்சுக்கு
நீர் நிறைவு செய்திடும்,
கீழ்விழுந்த ஏழைக்கு
செம்மையைக் கொடுத்திடும்.
ஊக்கமற்ற ஈனனை
நீர் நிறுத்தி ரட்சியும்,
கஸ்தியுள்ள நெஞ்சத்தை
அன்பினாலே தேற்றிடும்.

ச நான் மிகுந்த பாவிதான்,
நீர் மிகுந்த சுத்தரே,
நான் அநீதி கேடுள்ளான்,
நீர் நிறைந்த நீதியே.
நான் மிகுந்த ஆக்கினை
பெற்றுக்கொள்ளப் பாத்திரன்,
நீர் மகா ரட்சிப்பினை
ஈந்திடும் தயாபரன்.

ரு மட்டில்லாத பாவத்தை
நீக்க நீர் பலத்தவர்,
தேற்றும் மா சந்தோஷத்தை
எனக்கீயும் ரட்சகர்.
சீவ ஆற்றின் ஊற்று நீர்,
உம்மில் தாகம் ஆறுமே,
என்றென்றைக்கும் தேவரீர்
என்னில் தோன்றும் யேசுவே.

ருங பாட்டு. 7's. 53

"For such an High Priest became us."

இப்படிப்பட்ட மகா ஆசாரியரே நமக்குவேண்டும். எபி. எ. உசு.

க யேசு மீட்பர், உம்மை நீர்
எனக்காகப் படைத்தீர்;
என்னைக் குற்றமின்றியே
ஸ்வாமிக்குப் படைப்பீரே.

உ மீட்பரே, நீர் ஒருவர்
உத்தம ஆசாரியர்;
உம்மைக் கொண்டாலன்றியே,
பலி செல்ல மாட்டாதே.

ங நீர் என் கெட்ட இச்சையை
நீக்கிவிட்டு, நெஞ்சத்தை
நோ, அழுக்கு யாவுக்கும்
தப்புவித்திரட்சியும்.

௪ என்னில் ஒன்றும் ஈயவே
இங்கிராமற் போகவே,
பீடத்தில் நான் முழுதும்
சுட்டெரிக்கப்படவும்.

௫ அதினாலே உமது
கையினாற் பிதாவுக்கு
நீர் செலுத்தும் பலியே
ஏற்றப்படும் நிசமே.

௫௪ பாட்டு. 8. 7. 4. **54**

" That great Shepherd of the sheep."

ஆடுகளின் மகா மேய்ப்பராயிருக்கிறார். எபி. ௰௩. ௨௰.

க ஆடுகளின் உண்மையான
மேய்ப்பரே, இரங்குமேன்;
நானும் உம்மைச் சேர்ந்ததான
உமதாடாகட்டுமேன்.
என்னை மீட்க
நீரே சீவன் கொடுத்தீர்.

௨ மந்தைக்கும் நல் மேய்ப்பனுக்கும்
ஒன்றுக்கொன்று அன்புண்டே;
அப்படி இங்கே இருக்கும்
என் மேல் நேசத்தை நீரே
வைக்கும் போது
உம்மைச் சேர்வேன், நேசரே!

௩ தன் தன் மேய்ப்பனை நன்றாக
ஆடொவ்வொன்றும் அறியும்;
மேய்ப்பனும் மா திட்டமாக
தன்னுடைய மந்தையும்
பார்த்தறிந்து
காத்துக்கொண்டு போஷிப்பான்.

௪ மேய்ப்பன் இடும் சத்தத்திற்கு
ஆடு செவி இடுமாம்;
ஆடு கூப்பிட்டால், அதற்கு
மேய்ப்பன் கேட்டுக்கொள்ளுவான்
ஆ! கர்த்தாவே,
என்னைக் கேளும் தயவாய்.

௫ எனதாவி உம்மைப் பற்றும்,
கர்த்தரான யேசுவே,
வேண்டிக்கொண்டு தேடித் தட்டும்
என்னைத் தயவுடனே
ஆதரித்து,
ஆற்றித் தேற்றி அருளும்.

௫௫ பாட்டு. P. M. 55

"I am the way, the truth, and the life."

நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன்.
யோவா. ௰௪. ௬.

௧ கர்த்தாவே, மோட்ச வழி நீர்,
இதற்குள்ளான யாரும்
தப்பாய்ப் போகார், இரட்சிப்பீர்;
விலகினோர் எல்லாரும்
அழிந்து போகுவார்கள் தான்;
வழியாம் சுவாமி! உம்மில் நான்
நிலைக்க என்னைக் காரும்.

௨ நீர் சத்தியம், நான் உம்மையே
தெரிந்துகொண்டு சார்வேன்;
பொருளும் சாரமும் நீரே,
வீண் கோலத்தை நான் தேடேன்.
உம்மாலே நன்மை கிடைக்கும்
மெய்யே, என் நெஞ்சை என்றைக்கும்
நான் உமக்கே படைப்பேன்.

௩ நீர் சீவன், மீட்சி நீர், நீரே
தரும் பெலன் கதிக்கும்;
திடன் இல்லா அந்நேரமே
நெஞ்சைத் திடப்படுத்தும்.
அப்போது வாழ்ந்து தேறுமே,
இத்தெய்வ சீவன் என்னிலே
என்றென்றும் பெலன் கொள்ளும்.

௫௬ பாட்டு. C. M. **56**

"No man cometh unto the father but by me."

என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்திற்குச் செல்லமாட்டான்.
யோவா. ௰௪. ௬.

௧ மெய்வழி நீரே, யேசுவே!
நீர் பாவ நாசர்தாம்;
பிதாவிடத்திற் சேர்வதே
உமதிரக்கமாம்.

௨ சுத்த பிதாவிடத்திலே
செல்பவர் யாவரும்
உமது வழியாகவே
அன்பாய்ச் சேரவேண்டும்.

௩ சத்தியம் நீரே; உமது
வார்த்தை மெய்ஞானமும்
நெஞ்சில் உண்டாக்கி, சகல
கறை அகற்றிடும்.

௪ கர்த்தாவே, நீர்தான் சீவனும்,
என்றும் பிழைக்கிறீர்;
உம்மிடம் சேரும் யாவரும்
பிழைக்கப்பண்ணுவீர்.

௫ ஆ! வழி, சத்யம், சீவனும்
உடைய யேசுவே,
என்னை நடத்திப் போதியும்
என்றைக்கும் வாழவே.

ருஎ பாட்டு. P. M. 57

"I am the bread of life."

நானே அந்தச் சீவ ஆகாரம். யோவா. சு. சரு.

க தெய்வீக அன்னமான நீர்,
 உம்மாலே ஆசை ஆறும்;
வனாந்தரமான லோகத்தில்
 என் நெஞ்சு உம்மை நாடும்.
பிதாவின் ஈவாம் மன்னாவே,
என்னை அசுத்த ஆசைக்கே
 விலக்கிக் காத்துக்கொள்ளும்.

உ சீவன் பொருந்தும் ஊற்று நீர்,
 என் தாகம் உம்மால் தீரும்;
நிறைந்த ஈவுண்டாக்கினீர்,
 அது எப்போதும் ஊறும்.
என்னையும் ஆற்றிப் போஷித்து
நற்சீரைத் தந்து மோட்சத்து
 சுகிர்தத்தை உண்டாக்கும்.

ருஅ பாட்டு. 7's. 58

"Trust ye in the Lord," &c.

யெகோவாவிடத்தில் நம்பிக்கையாயிருங்கள். ஏசா உசு. ச.

உ ஆ! அன்புள்ள யேசுவே,
இருள் மூடும் பள்ளத்தில்
மானிடர் தவிக்கவே,
சூறைக் காற்றடிக்கையில்,
உம்மிடத்தில் சேருவேன்,
என்னைக் காத்துக்கொள்ளுவீர்;
ஆவி ஒப்புக்கொடுப்பேன்,
மோட்ச கரை ஏற்றுவீர்.

உ கிறிஸ்துவே, என் நெஞ்சுக்கு
நீர் நிறைவு செய்திடும்;
கீழ் விழுந்த ஏழைக்கு
பெலத்தைக் கொடுத்திடும்.
ஊக்கமற்ற ஈனனை
நீர் நிறுத்தி ரட்சியும்;
கஸ்தியுள்ள நெஞ்சத்தை
அன்பினாலே தேற்றிடும்.

ங நான் மிகுந்த பாவிதான்
நீர் மிகுந்த் சுத்தரே;
நான் அநீதி கேடுள்ளான்,
நீர் நிறைந்த நீதியே.
நான் மிகுந்த ஆக்கினை
பெற்றுக்கொள்ளப் பாத்திரன்;
நீர் மகா ரட்சிப்பினை
ஈந்திடுந் தயாபரன்.

ச மட்டில்லாத பாவத்தை
நீக்க நீர் பலத்தவர்;
தேற்றும் மா சந்தோஷத்தை
எனக்கியும் ரட்சகர்.
சீவ ஆற்றின் ஊற்று நீர்,
உம்மில் தாகம் ஆறுமே;
என்றென்றைக்குந் தேவரீர்
என்னில் தோன்றும், யேசுவே!

ருகூ பாட்டு. 7's. 59

"That Rock was Christ."

அந்தக் கன்மலை கிறிஸ்து. க கொரி. ய. ச.

க உடைபட்ட மலையே,
புகலிடந் தாருமே;
பக்கம்பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்,
பாவதோஷம் யாவையும்
நீக்கும்படி அருளும்.

௨ கண்ணீர் நித்தம் சொரிந்தும்,
தொய்யாத் தவம் புரிந்தும்,
பாவம் நீங்கமாட்டாதே,
நீரே மீட்பர், யேசுவே!
செந்நீர் பட்ட சிலுவை
சேருவேன் என் தஞ்சத்தை.

௩ நிழல் நேரிவ்வாழ்விலே,
கண்ணைமூடுஞ் சாவிலே,
இகம்விட்டுப் பரத்தில்,
நடுத்தீர்வைத் தினத்தில்
உடைபட்ட மலையே
புகலிடந் தாருமே.

௬௰ பாட்டு. L. M. 60

"He that saith he abideth in Him ought also to walk even as he walked."

அவரிடத்தில் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்த பிரகாரம் தானும் நடக்கவேண்டும். ௧ யோ. ௨. ௬.

௧ சுத்தாங்க் ஊற்றும் யேசுவே,
மாசுமில்லாத வழியே;
நான் சேரும் வழி காண்பியும்,
உம்மைப் பின்பற்ற அருளும்.

௨ ஒளி நிறைந்த வழி நீர்;
பிரகாசம் யாவும் தேவரீர்;
என் கர்த்தர், நானும் உமக்கே
ஒப்பாய் சுத்தாங்கமாகவே.

௩ தினமும் பாடுபட்டவர்
விழித்திருந்த ஆண்டவர்,
ஆ! யேசு, நானும் உமக்கே
ஒப்பாய் விழித்திருக்கவே.

ச மா தாழ்மையான மீட்பர், நீர்
யாரையும் பார்க்கப் பணிந்தீர்;
எப்போதும் நானும் உமக்கே
ஒப்பாக தாழ்மையாகவே.

சுக பாட்டு. L. M. 61

"Let this mind be in you which was also in Christ Jesus."

கிறிஸ்து யேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக்கடவது.
பிலி. உ. ரு.

க கர்த்தாவே, உம்மைப்போல நான்
மிகுந்த அன்பு சுத்தவான்
இரக்கமுள்ளோனுகவே
இருக்கச் செய்யும், யேசுவே!

உ இங்கே இருக்கும் அளவும்
நம்பிக்கையுடன் வாழவும்,
என் சித்தந் தேவரீருக்கும்
அடங்கவுஞ் செய்தருளும்.

ஈ இறந்துபோகும் நேரத்தில்
சிறந்து நானும் மோட்சத்தில்
உம்மோடிருந்து வாழவே,
கடாட்சியும், நன் மீட்பரே!

சுஉ பாட்டு. P. M. 62

"The fulness of Him that filleth all in all."

கிறிஸ்துவே சகலருக்குள்ளும் சகலமுமாயிருக்கிறுர்.
கொலோ. ௩. ௰க.

க என் மேய்ப்பராயிருக்கிறீர்,
என் மேய்ச்சலும் நீர் தாமே;
சிறையிற்போன என்னை நீர்
அன்பாக மீட்டோராமே.
இவ்வாடு மீண்டும் என்றைக்கும்
அலையவே விடாதிரும்;
உமக்குள்ளானேன் நானே.

௨ இராவில் நீர் நட்சத்திரம்,
இருட்டிலே என் சோதி;
குறைவில் நீர் என் பொக்கிஷம்,
என் தாழ்விலே உயர்ச்சி;
கசப்பிலே மா தித்திப்பும்,
இளைத்துப்போம் என் மனமும்
பெலக்க, நீர் என் சத்தி.

௩ உயிர் தரும் விருட்சம் நீர்,
என் ஆத்துமா பிழைக்கும்;
மகிழ்ச்சிக்கேற்ற சோலை நீர்,
அமிழ்தமே கிடைக்கும்;
வருத்தமுள்ள பள்ளத்தில்
என் யேசுவால் என் நெஞ்சத்தில்
சம்பூரணம் தழைக்கும்.

௬௩ பாட்டு. L. M. 63

"The unsearchable riches of Christ."

கிறிஸ்துவினுடைய ஆராய்வுக்கெட்டாத ஐசுவரியம. எபே. ௩. ௮.

௧ மகா சிநேகம்! அற்புதம்;
பிதா இரங்கி, உலகம்
சீர்கொள்ள ஏக மைந்தனை
கொடுத்ததே, மகா தயை!

௨ பொல்லாருக்காக இவரே
பலியாய்ச் சிலுவையிலே
மரித்துப், பாவம் நீக்குதல்
உண்டாக்கினார் இம்மானுவேல்.

௩ கர்த்தாவின் அன்பை மீளவும்,
மாளாத மோட்ச வாழ்வையும்,
எல்லாருக்குஞ் சம்பாதித்தார்
கொடுப்போமென்றும் நிற்கிறார்.

ச இவ்வாழ்வை நீ விரும்பினுல்,
தேவாவி செய்யுந் துணையால்
உன் பாவத்தை அரோசித்து
மெய் மனஸ்தாபப்பட்டிரு.

ரு குமாரன் நீதி உன்னதே,
அதால் உன் பாவம் நீங்குமே;
பிதாவின் பிள்ளையாகுவாய்,
தேவாவியையும் பெறுவாய்.

கூச பாட்டு. 7's. 64

"Blessed be his glorious name for ever."

மகிமைபொருந்திய அவருடைய நாமம் சதாகாலமும் வாழ்த்தப்படக்கடவது. சங். எ உ. ௰கூ.

க கர்த்தரான யேசுவே,
இப்போதெங்கள் நெஞ்சிலே
சுத்த சீரை அருளும்,
தேவ ஒளி விளக்கும்;
அதில் நாங்கள் ஒழுங்காய்
நிற்கச் செய்யும் தயவாய்.

உ மோட்ச மகிமை எல்லாம்
தேவரீருக்கே உண்டாம்;
நீரே கர்த்தர் சிஷ்டிகர்,
சர்வ லோக ஆண்டவர்;
பாவ இருள் யாவையும்
நீக்கி அருள் செய்திடும்.

ங உம்மால் எந்த வரமும்
குறையறக் கிடைக்கும்;
தந்தை சாயல் தேவரீர்
ஊழிக்காலம் தரிப்பீர்;
மோட்ச சேனை உமக்கும்
துதிசெய்யும் என்றைக்கும்.

௪ சர்வானந்த நீர் நன்றாய்
பார்த்துக்கொள்ளும் தயவாய்;
வரந் தந்தாதரித்து
அடியாரை ரட்சித்து,
பின்னர் மோட்ச வாழ்விலே
சேர்த்துக்கொள்ளும், யேசுவே!

௬௫ பாட்டு. P. M. 65

Christ our example.

கிறிஸ்து நமக்கு முன்மாதிரி.

௧ மாசில்லாமல் துய்யதான,
பளிங்கிலேயுந் தெளிவான,
சுத்தாங்க ஊற்றே! யேசுவே!
கெருபீன்கள் துய்ய சீரின்,
பிரகாசம் யாவும் தேவரீரின்
முன்பாக மங்கிப் போகுமே;
என் பாவ இருள்
கர்த்தாவே! தயவாய்
தொலைத்திடும்;
ஆ யேசுவே! நான் உமக்கே
ஒப்பாய்ச் சுத்தாங்கமாகவே.

௨ பகல் ராவுறக்கம் அற்று,
நன்மேய்ப்பராய் வருத்தப்பட்டு,
நன்றாய் விழித்தீர், யேசுவே!
தினம் தினம் பாடுபட்டீர்!
செபத்தில் ராவிலுந் தரித்தீர்;
மங்கா வெளிச்சக் கண்ணனே!
விழித்துக் கெஞ்சவே,
நான் உம்மிடத்திலே
கற்பேனாக;
ஆ யேசுவே! நான் உமக்கே
ஒப்பாய் விழித்திருக்கவே.

௩ சுய மேன்மையைத் தேடாமல்,
ஓர் மேட்டிமையையுங் காட்டாமல்,
மா தாழ்மையானீர், யேசுவே!
வேலைக்காரன்போல் திரிந்தீர்,
எல்லாரிலும் நீரே பணிந்தீர்,
மகா பெரிய கர்த்தரே!
ஆ! நான் உமக்கு
பின்செல்லும்படிக்கு
நடப்பியும்;
என் யேசுவே! நான் உமக்கே
ஒப்பாக தாழ்மையாகவே.

௪ தேவரீருக்குப் பிரிய
தெய்வீக சாயலையணிய,
ஆசிக்கிறேன், என் சீவனே!
அதற்குமதாவியாலும்,
பெலத்த தத்துவத்தினாலும்,
சகாயஞ்செய்யும், யேசுவே!
நானுமக்கேற்கவே,
கனியைத் தரவே,
எக்காலமும்,
நான் உம்மிலே நிலைக்கவே
சகாயம் பண்ணும், கர்த்தரே!

௬௬ பாட்டு. L. M. 66

"*Behold the Lamb of God.*"

இதோ தேவ ஆட்டுக்குட்டி. யோவா. ௧. ௩௬.

௧ பூலோக சீவ மீட்பனை
மரத்தில் தூங்கப் பாருங்கள்;
எவ்வளவாய் ஆ! எங்களை
நேசித்தாரென்று எண்ணுங்கள்.

௨ முடிந்ததென்று யேசுவே
சீவனை விட்டு மரித்தார்;
தேவ குமாரன் இவரே!
கண்டோர் எல்லாருஞ் சொல்லுவார்.

௩ பூமி கம்பிக்கச் சேலையுங்
கிழிந்துபோகச், சூரியன்
இருள் அடையக், கற்களும்
பிளந்தன, — மா அற்புதம்!

௪ எங்கள் நிமித்தம் இவையே
அன்பாய்ப் பட்டார் சிலுவையில்;
அவர் நிமித்தம், பிதாவே,
எங்களைச் சேர்க்கும் மோட்சத்தில்.

௬௭ பாட்டு. 7. 6. **67**

"*He became obedient unto death, even the death of the Cross.*"

அவர் மரணத்திற்குத் தம்மைத் தாழ்த்திச் சிலுவையின் மரணத்திற்கே கீழ்ப்பட்டவரானுர். பிலி. ௨. ௮.

௧ இரத்தங் காயங் குத்தும்
நிறைந்து நிந்தைக்கே
முள்முடியாலே சுற்றும்
குற்றுண்ட சிரசே!
முன் மாட்சிமையைக் கொண்ட
நீர் லச்சை காண்பதேன்?
அன்பாய் வதைந்து நொந்த
உம்மை வணங்குவேன்.

௨ நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி நித்தமே,
நீர் பட்ட கஸ்திக்காக
துதிப்பேன், யேசுவே!
உம்மில் நான் ஊன்றி நிற்க
சகாயமாயிரும்;
உம்மோடே நான் மரிக்க
நீர் தயை செய்திடும்.

ஈ என் மூச்சொடுங்கும் அந்த
கடையிக்கட்டிலும்,
நீர் எனக்காய் இறந்த
உருபைக் காண்பியும்.
அப்போது உம்மைப் பார்த்து
கண்ணோக்க நெஞ்சிலே,
இறங்கி ஓடிவந்து
ரட்சிப்பீர், யேசுவே!

சுஅ பாட்டு. 8. 7. 4. 68

" When we were dead in sins, God quickened us together with Christ."

நாம் அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்தும், கிறிஸ்துவோடே நம்மை உயிர்ப்பித்தார். எபே. உ. ச—ரு.

க என்னுடைய சாவின் சாவே,
என் உயிரின் சீவனே,
என்னை மீட்க நீர் கர்த்தாவே,
தேவ கோபத் தீயிலே
பாய்ந்ததாலே,
உமக்கே இஸ்தோத்திரம்.

உ கேட்டுக்கான பாவத்துக்கு
என்னை நீங்கலாக்கவே,
உம்மைத் தீயோர் துஷ்டத்துக்கு
நீரே ஒப்புவிக்கவே,
கள்ளன் போல,
கட்டப்பட்டுப் போனீரே.

ஈ நான் உபாதியைப் பெருமல்
பூரிப்பாய் மகிழவே,
சொந்த இன்பத்தைப் பாராமல்,
வாதிப்பாரின் இச்சைக்கே
நீர் இணங்கி
தூக்கப்பட்டுப் போனீரே.

ச மீட்பரே, மகா அன்பாக
நீர் புறம்பும் உள்ளேயும்
சிவன் போகும் அளவாக
பட்ட பாடனைத்துக்கும்
என்ன சொல்வேன்?
என்றென்றைக்கும் போற்றுவேன்.

ரு மீட்பரே, மகா அன்பாக
நீர் புறம்பும் உள்ளேயும்
சிவன் போகும் அளவாக
பட்ட பாடனைத்துக்கும்
என்ன சொல்வேன்?
என்றென்றைக்கும் போற்றுவேன்.

சூகூ பாட்டு. S. M. **69**

"*Not by the blood of bulls and goats,*" &c.

வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தோடே அல்ல. எபி. கூ. ௰உ.

க இரத்தப் பலியால்
என் பாவம் நீங்காதே;
என் நெஞ்சுக்கேற்ற ஆறுதல்
கொடாமற் போயிற்றே.

உ இயேசு மீட்பர் தாம்
மேலான பலியாய்
என் பாவ தோஷம் யாவுமாம்
அகற்றுவார் முற்றாய்.

ங மரத்தில் தூங்கிய
என் யேசு பட்டதை
உணர்ந்து வன்னெஞ்சுருக
புலம்புவேன் அன்பாய்.

ச மிகுந்த சாபத்தை
கடந்து களிப்பேன்;
தெய்வீக ஆட்டுக்குட்டியை
எப்போதும் துதிப்பேன்

எ௰ பாட்டு. L. M. 70

"He was wounded for our transgressions, he was bruised for our iniquities."

நம்முடைய மீறுதல்களின் நிமித்தம அவர் காயப்பட்டார்; நம்முடைய பாவங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். எசா. ௫௩. ௫.

க மரித்த கிறிஸ்தின் ஆவியும்
வதைக்கப்பட்ட தேகமும்
என் ஆவியை உயிர்ப்பித்து
என்றைக்குங் காக்கத்தக்கது.

உ அவர் விலாவிற் காயமும்
பொழிந்த நீரும் ரத்தமும்
என் ஸ்நானமாகிப், பாவமே
நிவர்த்தி செய்யத்தக்கதே.

௩ அன்புள்ள யேசுக்கிறிஸ்துவே,
ஒதுக்கம் உம்மிடத்திலே
விரும்பித் தேடும் என்னையும்
மறைத்துக் கொண்டிரட்சியும்.

௪ என் ஆவிபோகும் நேரத்தில்
நீர் என்னைத் தேற்றி, மோட்சத்தில்
என்றைக்கும் உம்மைப் போற்றவே
அழைத்துக்கொள்ளுங், கர்த்தரே!

எக பாட்டு. 8. 7. 4. 71

"Who was delivered for our offences."

நம்முடைய பாவங்களை நிவர்த்தியாக்குவதற்கு ஒப்பிக்கப்பட்டார். உரோ. ௪. உ௫.

க கஸ்திப்பட்ட நேரான
யேசு சுவாமி கிறிஸ்துவே,
சாவுமட்டும் மீட்பரான
அன்பால் பொங்கின நீரே,
கோபத் தீயில்
பாய்ந்து என்னை மீட்டீரே

உ சிலுவையில் எனக்காக
நீரே ஆணிகளினால்
பீறப்பட்டுத் தொங்கிச் சாக,
உம்மை மா இரக்கத்தால்
ஏவி விட்ட
அன்பின் ஆழம் எத்தனை!

ந ஆ! என் ஆவியை இளைக்க
பண்ணும் பாவ பாரத்தை
நோக்கிக்கொண்டு, நான் பிழைக்க
அதை நீக்கும் கிருபை
செய்வீராக,
ரட்சை செய்த மீட்பரே!

ச தேவரீர் என் நெஞ்சைத் தேற்றி
ஏங்கலான என்னை நீர்
எந்த நோவிலும் காப்பாற்றி
அன்பின் கையை நீட்டுவீர்.
என்றும் வாழ
அடியேனை ரட்சிப்பீர்.

எஉ பாட்டு. C. M. **72**

"Lord not my feet only, but also my hands and my head."

கர்த்தாவே என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் தலையையும் கூட என்றான். யோவா. ௰௩. ௯.

க சொரிந்த ரத்த காயத்தில்
என் நம்பிக்கை உண்டாம்;
என் உறுதி என் ஆறுதல்
என் சீவ மீட்பராம்.

உ குற்றங்கள் அறக் கழுவ
என் ஊற்று ஆகுவீர்;
என் பாவம் எல்லாம் ஒழிய
தெளிக்கக்கடவீர்.

௩ நான் உமதாகும்படிக்கு
ஆ! சுத்திகரியும்;
என் கால், கை, உள்ளம், சிரசு
முற்றுகக் கழுவும்.

௪ இப்பூமி விட்டு மோட்சத்தை
நான் சேரும் வரைக்கும்
என் பாவம் தீர்க்கும் ரத்தத்தை
என்னில் தரிப்பியும்.

எ௩ பாட்டு. 8. 7. **73**

"By his stripes ye are healed."

அவருடைய காயங்களினுலே சொஸ்தம் பெற்றீர்கள்.
க. பேது. உ. உ௪.

க கர்த்தரே, என் மீட்புக்காக
நீர் சுமந்த நிந்தனை,
தேவ கோபத்தின் கீழாக
பட்ட வாதை எத்தனை!
மீட்பராய் இக்கஸ்தியோடே
மாண்டதாலே, தேவரீர்
என்றுந் தேவ தூதரோடே
நான் மகிழ அடைந்தீர்.

உ ஈட்டிக் குத்தால் திறவுண்ட
பக்கம் இருதயமும்
சுத்தவீனத்தால் சூழுண்ட
எனக்கே அடைக்கலம்.
ரத்த தண்ணீரும் பொழிந்த
அந்தக் காயவூற்றிலே
பாவக் கஸ்தியால் நெரிந்த
இந்த நெஞ்சு வாழவே.

எசு பாட்டு. C. M. **74**

The death of Christ.

கிறிஸ்துநாதருடைய மரணத்தின்பேரிற் பாடியது.

க மா வாதை பட்ட யேசுவே,
அன்பின் சொரூபம் நீர்
நிறைந்த தேவ அன்பிலே
நான் மூழ்க அருள்வீர்.

உ தேவன்பின் ஆழம் உணர
வாஞ்சிக்கும் அடியேன்
நீர் பட்டவஸ்தை ஒழிய
ஒன்றையும் அறியேன்.

ங என் மீட்பர் சீவன் விட்டதால்
பூமி அசைந்ததே;
கன்மலை அதைக் கண்டதால்
வேறாய்ப் பிளந்ததே.

ச அவ்வண்ணமாய் இந்நெஞ்சத்தை
பிளக்க தேவரீர்
நீர்பட்ட சாவின் பெலத்தை
காண்பிக்கக் கடவீர்.

ரு தீயாசை நீக்கும்படிக்காய்
தெய்வன்பை ஊற்றிடும்;
கற்போன்ற நெஞ்சை நிறைவாய்
உருக்க கற்பியும்.

சு நீர் சொல்லும் தேவ வார்த்தையை
என்றும் ருசிக்கவே
நீரே காண்பித்த தயவை
உணர்த்தும், கர்த்தரே!

எரு பாட்டு. 8. 7. 4. **75**

"Looking unto Jesus."

இயேசுவை நோக்கி, எபி. ௰௨. ௨.

க கிறிஸ்துநாதர் பட்ட காயம்
தோன்றும் நேரம், அருமை;
சுத்தம் செல்வம் சற்சகாயம்
சீவன் காட்டும் சிலுவை.
என்றும் பார்ப்பேன்
என்னை மீட்ட யேசுவை.

௨ அன்பு பாயும் ஊற்றைக் கண்டு,
ஐந்து காயம் சிந்திப்பேன்;
பிதாவோடே சமாதானம்
எனக்கித்தால் ஆகுமே.
என்றும் பார்ப்பேன்
என்னை மீட்ட யேசுவை.

௩ அவர் கண்ணுல் தோன்றும் நேசம்
எனக்கேற்ற செல்வமே;
பாடுபட்ட காயம் துக்கம்
ஈயும் அருள், மோட்சமே.
என்றும் பார்ப்பேன்
என்னைமீட்ட யேசுவை.

௪ நேசந் துக்கம் களிப்புடன்
நெஞ்சிற் பலன்கொள்ளுமே;
கறை குற்றம் பாவக்கடன்
தீருமென்றிருக்கிறேன்.
அல்லேலூயா!
உம்மால் முத்தி, யேசுவே!

எசு பாட்டு. 8. 7. 4. 76

"And he showed them His hands and His feet."

கைகளையுங் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.

லூக். உச. சம.

க யேசு! உமதைந்து காயம்
நோவுஞ் சாவும் எனக்கு
எந்தப் போரிலுஞ் சகாயம்,
ஆறுதலும் உள்ளது.
பாடுபட்ட
உம்மை என்றும் நோக்குவேன்.

உ தனக்கின்பமான வாழ்வை
கெட்ட சிந்தை நாடுமே;
நீரோ உம்முடைய தாழ்வை
நினைப்பூட்டும், யேசுவே!
அதைப் பார்த்து,
இவ்வுலோகம் வெறுப்பேன்.

ங சாவு வந்தால் கொடிதாக,
அப்போதே விசேஷமாய்
என்னைத் தாங்கித் தேற்றன்பாக,
நேசமுள்ள மீட்பராய்
உம்மிடத்தில்
சேர்த்துக்கொள்ளும், யேசுவே!

எஎ பாட்டு. P. M. 77

The Death of Christ.

கிறிஸ்துவின் மரணத்தைக்குறித்துப் பாடியது.

க அன்புள்ள சுவாமி! நீர் வருத்தமாக
இறந்து போகத் தீர்த்ததேதுக்காக?
நீர் என்ன செய்தீர்? தேவரீரின் மீது
ஏன் அந்தத் தீது?

உ துன்மார்க்கரால் அடிக்கப்பட்டுச் சோர்ந்தீர்
கட்டுண்டு முள்முடியுஞ் சூட்டப்பட்டீர்;
கசப்பையீந்து, உம்மைத் தூக்கினார்கள்,
வதை செய்தார்கள்.

௩ அவ்வாதை யாவும் உமக்கேதினாலே
உண்டாயிற்று? ஐயோ! என் பாவத்தாலே
கர்த்தாவே! உம்மை யித்தனை யடித்தேன்,
நானே வதைத்தேன்.

௪ மிகுந்த அன்பு! கர்த்தர் சாக நேர்ந்தார்,
நன்மேய்ப்பர் ஆட்டுக்காகச் சீவனீந்தார்;
உலகந் தப்பக் குற்றமற்ற மீட்பர்
கடனைத் தீர்ப்பார்.

௫ என் உள்ளங்கால் தொடங்கி உச்சிமட்டும்
பொல்லாங்கினால் நிறைந்தும், நன்மையற்றும்
இருந்த நானே, அந்தத் தீமையாவும்
அடைய நியாயம்.

௬ உயர்ந்த ராசனே! அதற்கு ஏற்கும்
புகழ்ச்சி செய்ய யாவனாலே யாகும்?
செலுத்தத்தக்க தெந்தச் சீவனுக்கும்
தோன்றாதிருக்கும்.

எஅ பாட்டு. P. M. **78**

The Death of Christ.

கிறிஸ்துவின் மரணம்.

க அதோ! மரத்திற் சாக
உன் தேவன் உனக்காக
நின்றார் உலோகமே,
குரூரமான நிந்தை
சகித்த மா கர்த்தாவை,
கண்ணோக்குங்கள் நரர்களே!

௨ நானே கை, கால்கட்டுண்டு,
சிறையிலே தள்ளுண்டு,
கிடக்க நியாயமே.
நானே யிடைவிடாமல்
சந்தோஷத்தைக் காணமல்
வதையடைய நீதியே.

௩ அதற்கு நான் அகன்று
ஞாயாக்கினையை வென்று
இருக்கச் செய்ய, நீர்
துன்மார்க்கர் கைக்குள்ளாகி,
மரத்திற் சாபமாகி,
எத்தீமையையும் தாங்கினீர்.

௪ கர்த்தாவே! நீர் பகைக்கும்
பொல்லாங்கை யென்றென்றைக்கும்
வெறுத்துத் தள்ளவும்,
என் நெஞ்சிலே பலத்தை
நற்சிந்தையைத் திடத்தை
அனுக்கிரகித் திரட்சியும்.

எகூ பாட்டு. 7's. **79**

"*Very early in the morning they came unto the sepulchre.*"

சூரியோதய சமயத்தில் பிரேதவறையைச். சேர்ந்தார்கள்.
மாற். ௰௬. ௨.

க வைகறையிருக்கையில்
ஓடி வந்த மரியாள்,
சேமம் வைத்த இடத்தில்
நின்றுகொண்டு அழுதாள்.
"எங்கள் யேசு எங்கேயோ?
சீவன் விட்ட மீட்பரே
காணவில்லையே, ஐயோ
யாவனோ எடுத்தானே."

உ ஏங்கிச் சொல்ல, நேசமாய்,
"மரியாளே கேள்" என்ருர்;
கேட்டுக்கொண்டு ஆவலாய்
பார்த்து விசுவாசித்தாள்.
தேவவாக்குச் சீவனும்,
தேவ நேசம் மோட்சமே;
தாழ்ந்த குணர் யார்க்குமாம்
யேசு தோன்றுவார் அங்கே.

அ0 பாட்டு. C. M. **80**

The Burial of Christ.

கிறிஸ்துநாதரடக்கம்பண்ணப்பட்டதைக்குறித்துப் பாடியது.

க எனது மனந் துடிக்கும்
துக்கத்தாலே நோகும்,
தெய்வ மைந்தரின் சரீரம்
கல்லறைக்குப் போகும்.

உ என் ஆண்டவர், என் ரட்சகர்,
நொந்த மேனியாக,
இரத்தமாய்க் கிடக்கிருர்;
என் ரட்சிப்புக்காக.

ஙூ ஆ! யேசுவே! என் சீவனே,
கல்லறைக்குள்ளாக
நீர் வைக்கப்பட்டதைத் தினம்
நான் சிந்திப்பேனுக.

அக பாட்டு. 8. 7. 4. **81**

"Now is Christ risen from the dead," &c.

கிறிஸ்து மரித்தோரை விட்டெழுந்து, க கொரி. ௰டு. உ0.

க சபையே! வாருங்கள் பாடி,
கர்த்தரை நாம் போற்றுவோம்;
பூரிப்பாக நாம் கொண்டாடி,
களிகூரக்கடவோம்.
கிறிஸ்துவென்ருர்
செத்தும், சீவன் அடைந்தார்.

௨ சிலுவையில் சீவனற்று,
மாண்டு கல்லறையிலே
வைத்தடக்கம் பண்ணப்பட்டு,
போனவர் எழுந்தாரே;
எங்கள் மீட்பர்,
சாவை வெற்றிகொண்டவர்.

௩ மீட்பரே! நீர் வெற்றியாக
உயிரோடெழுந்ததால்,
நாங்கள் நீதிமான்களாக
கர்த்தர் முன்னே நிற்கலாம்.
என்றென்றைக்கும்
கர்த்தருக்குத் தோத்திரம்.

௪ சாவு நமக்கே சாவல்ல,
தேகம் மண்ணுக்குட்படும்;
ஆனால் என்றென்றைக்குமல்ல,
கர்த்தர் அதை மீளவும்
உயிர்த்தெழுப்பி,
செயங் தானே காட்டுவார்.

அ௨ பாட்டு. 7's. 82

"The Lord is risen indeed."

கர்த்தர் மெய்யாக எழுந்தார். லூக். ௨௪. ௩௪.

௧ தேவ மைந்தரானவர்
யேசு என்னும் ரட்சகர்,
தேவ தத்துவத்தினால்
கல்லறையை விட்டதால்,

௨ சாபந் துன்பம் யாவையும்
நீக்கி, எந்த வாழ்வையும்
மாந்தர்க்கீந்திரட்சித்தார்,
பேயின் மேன்மை தாழ்த்தினார்

௩ ஆதலால் நரர்களே!
கிறிஸ்துவின் ரட்சிப்பையே
உண்மையோடே நாடுங்கள்,
ஏற்றுக்கொண்டு பாடுங்கள்.

௪ தேவரீர்க்குத் தோத்திரம்!
அல்லேலூயா! கீர்த்தனம்!
மீட்கப்பட்ட கூட்டமே
உம்மைப் போற்றிக்கொள்ளுமே.

அந பாட்டு. L. M. **83**

"*I am He that liveth and was dead, and behold I am alive for evermore.*"

பார், நான் மரித்தும் என்றைக்குஞ் சீவித்திருக்கிறேன்.
வெளி. க. ௰அ.

க இந்நாளிற் கிறிஸ்து வெற்றியை
அடைந்து, வல்ல தீயனை
சிறைப்படுத்திக்கொண்டாரே,
துதி செய்யுங்கள், மாந்தரே!

உ பசாசு சாவு மயக்கம்
எத்துன்பமும், அன்றைத்தினம்
எழுந்த கிறிஸ்தின் காலிலே
நசுக்கப்பட்டுப் போயிற்றே.

௩ அந்நாளிற் சீஷர் கர்த்தரின்
சரீரம் சேமஞ்செய்தபின்,
கிலேசத்தோரின் நெஞ்சுக்கு
சந்தோஷம் பூரிப்பாயிற்று.

௪ மிகுந்த தேற்றல் செய்யவே
எழுந்த யேசுக்கிறிஸ்துவே!
செயம் முடித்த உமக்கு
துதி உண்டாகத்தக்கது

அச பாட்டு. 8's & 7's. 84

The Resurrection of Christ.

கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்ததைக் குறித்துப் பாடியது.

க கிறிஸ்தவர்களே! நாம் பாடி,
கர்த்தனை அனைவரும்
மிகுதியுமாய்க் கொண்டாடி,
போற்றிப்பாடக் கடவோம்.
ஆர் எதிர்க்கலாம் இனி?
கிறிஸ்து சபையே! களி.

உ சிலுவையில் சீவனற்று,
மாண்டு, கல்லறையிலே
வைத்தடக்கம் பண்ணப்பட்டு,
போனவர் எழுந்தாரே!
உன் மீட்பர் தாம் அதிபதி,
கிறிஸ்து சபையே! களி.

ங மீட்பரே! நீர் வெற்றியாக
உயிரோடெழுந்ததால்,
நாங்கள் நீதிமான்களாக
கர்த்தர் முன்னே நிற்பதால்,
ஐயம் பயமும் ஏன் இனி?
கிறிஸ்து சபையே! களி.

ச சாவு நமக்குச் சாவல்ல,
தேகம் மண்ணுக்குட்படும்;
ஆனால் என்றென்றைக்குமல்ல
கர்த்தர் அதை மீளவும்
எழுப்ப வருவார், இனி
கிறிஸ்து சபையே! களி.

அரு பாட்டு. L. M. **85**

"He led captivity captive."

சிறையாக்கினதைச் சிறையாக்கி, எபே. ச. அ.

க இந்நாளில் யேசு தேவனார்
வெற்றி சிறந்து ஏறினார்;
தராதலம் விட்டேகினர்
புகழை ஏற்கத் தக்கவர்.

உ பசாசின் சத்தி ஆண்டவர்
அழித்துச் செயங்கொண்டவர்;
அனைவரும் அதற்குண்டாம்
குரூரத்துக்கு நீங்கலாம்.

ங சிறையுற்றோரின் மீட்பரே!
வெற்றி சிறந்த கிறிஸ்துவே!
பசாசின் கீழே நாங்களும்
இராமல் போக ரட்சியும்.

ச அதிற் சந்தோஷமாகிறோம்
கர்த்தாவின் அன்பைப் போற்றுவோம்;
திரியேகரே, எப்போதும் நீர்
துதிப்பை ஏற்கக் கடவீர்.

அசு பாட்டு. L. M. **86**

"He was taken up and a cloud received him out of their sight."

அவர்கள் அவரைக் காணாதபடி ஒரு மேகம் அவரை எடுத்துக்
கொண்டுபோயிற்று. அப். க. கூ.

க பரத்தில்போன யேசுவே,
நரர்களுக்கும் விண்ணிலே
இடங்கொடுக்கும் உமக்கு
புகழ் செலுத்தத் தக்கது.

உ பிதாவின் ஆசனத்திலே
இருந்து, தாழ்மையாளையே
கண்ணேக்கிப் பெலன் தந்த நீர்,
இழிந்த எங்களை விடீர்.

௩ பசாசின் மூர்க்கம் எத்தனை
மிகுந்திருந்தும், எங்களை
கெடுத்துப்போடத் திராணியே
அதற்குச் சற்றும் இல்லையே.

௪ அதில் மகிழ்ந்து, மாந்தர்க்கு
சம்பந்தமான உமக்கு
இஸ்தோத்திரஞ் செலுத்துவோம்,
உம்மாலே வெற்றிகொள்ளுவோம்.

அஎ பாட்டு. L. M. 87

"*Lift up your heads O ye gates,*" *&c.*

வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள். சங். உச. ௯.

க மகிழ், கர்த்தாவின் கூட்டமே!
மகா கம்பீரமாகவே;
பரத்துக்கே உன் நாயனுர்
எழுந்து, வெற்றி அடைந்தார்.

உ பரத்தின் சேனை ஓசையாய்
கொண்டாடி, மா வணக்கமாய்
பணிந்து, யேசு சுவாமிக்கு
ஆராதனை செய்கின்றது.

௩ பூவாசரே, விண்ணேளைப்போல்
சந்தோஷமாகப் பாடுங்கள்;
என்றைக்குமுள்ள வாழ்த்தலே
கர்த்தாவினுக்குண்டாகவே.

௪ உன்னதமான யேசுவே!
வெற்றி சிறந்த தேவனே!
இடைவிடாமல் உமக்கு
தோத்திரஞ் செய்யத் தக்கது

அஅ பாட்டு. 7's. 88

"The Lord Jesus shall be revealed from heaven with his mighty Angels."

கர்த்தராகிய யேசு தமது வல்லமையுள்ள தூதரோடு வானத்தினின்று வெளிப்படுவார். உ தெச. க. சு.

க வருவார் விண் மேகத்தில்
யேசுநாதர் வருவார்;
தெய்வ தூதர் கூட்டத்தில்
சோதியோடே தோன்றுவார்.

உ கூறுங்கள், என் தாசரே!
லோகமெங்கும் விரிவாய்;
சொல்லுங்கள், என் சீஷரே!
சோதி தோன்றும் மகிமை.

ங ஆளுவார் இராசாவாய்
தேசத்தார்கள் யாரையும்;
செங்கோலோடு தயவாய்
இகபரத்தோரையும்.

ச கர்த்தருக்குத் தோத்திரம்!
மோட்ச லோக சேனையார்
அல்லேலூயா! என்றைக்கும்
கீதஞ் சொல்லிப் பாடுவார்.

அகூ பாட்டு. 8. 7. 4. 89

"Behold he cometh with clouds and every eye shall see Him."

பாருங்கள் மேகங்களில் அவர் வருகிறார் எந்தக் கண்ணும் அவரைக் காணும். வெளி. க. எ.

க பாவிக்காய் மரித்த யேசு
வானத்திலிறங்குவார்;
கோடி தூதர் அவரோடு
வந்து ஆரவாரிப்பார்;
அல்லேலூயா!
கர்த்தர் பூமி ஆளுவார்.

௨ பயங்கர ஆசனத்தில்
அவரை எல்லோர் பார்ப்பார்;
துன்புறுத்து சிலுவையில்
அவரைக் கொன்றோர் காண்பார்;
காணும் போது
கஸ்திப்பட்டு அழுவார்.

௩ அவர் தேகம் பட்டகாயம்
இன்னங் காணப்படுமே;
நம்புவர் மகிழ்ச்சியாயும்
நோக்குவார் அப்பொழுதே;
அவர் காயம்
தரும் நித்த ரட்சிப்பு.

௪ அந்தமற்ற காலமாக
உம்மைப் போற்றச் செய்திடும்;
அடியாரை மேன்மையாக
ஆண்டுகொள்ளும் என்றைக்கும்.
ஆதி கர்த்தர்,
விரைந்து வந்தருளும்.

௯௰ பாட்டு. P. M. **90**

" God shall bring every work unto judgment."

தேவன் சகல காரியங்களையும் நியாயம் விசாரிப்பார். பிர. ௰௨. ௰...

௧ மேன்மை நிறைந்த ஆண்டவர்,
சனங்கள் யாவருக்கும்
நிறைந்த நீதி செய்பவர்,
இறங்கும் நாள் பிறக்கும்;
அப்போது மா பிரஸ்தாபமாய்
நம்மையும் மாற்றுஞ் சோதியாய்
மின்போலத் தோன்றுவாரே.

௨ இலக்கமற்ற தூதர்கள்
அவர்க்குக் கீழ்மையாக
பலத்த சத்த தாரைகள்
உடையவர்களாக
முழக்கஞ் செய்யப், பூமியும்
விஸ்தாரமான வானமும்
அதிர்ந்து வெந்து போகும்.

௩ அத் தூதரின் எக்காளங்கள்
எத்திக்கிலும் முழங்கும்;
அந்நேரம் கோடாகோடிகள்
உயிரடைந் தெழும்பும்;
ஓர்பக்கத்திற் சன்மார்க்கரும்,
ஓர்பக்கத்தில், துன்மார்க்கரும்,
வணக்கமாய் நிற்பார்கள்.

௪ அப்போதவர்கள் பூமியில்
நடந்து வந்த யாவும்,
அவர்கள் தங்கள் நெஞ்சத்தில்
நினைத்திருந்த யாவும்,
ஆண்டவர் கையால் வெளியாம்;
அதற்கதற்கு ஏற்றதாம்
பலனைக் கொடுப்பாரே.

௫ சன்மார்க்கர் மோட்ச மார்க்கத்தில்
நடந்ததால் மகிழ்ந்து
சிறப்படைந்து போகையில்;
துன்மார்ககத்தார் அதிர்ந்து
பல்லைக் கடித்துச் சாபத்தை
அடைந்து சன்னிதானத்தை
விட்டோடி மாளுவார்கள்.

௬ என் மனமே! துன்மார்க்கத்தை
வெறுத்துத் தள்ளிவிட்டு,
அன்புள்ள யேசுக்கிறிஸ்துவை
நம்பிக்கையாய்த் தரித்து,

குணப்பட்டு, இவ்வண்ணமாய்
அவர் வரில், மகிழ்ச்சியாய்
அவர் முன்பாக நிற்பாய்.

கூக பாட்டு. P. M. 91

"The great day of his wrath is come; who shall be able to stand."

அவருடைய குரோதத்தின் மகா தினம் வந்துவிட்டது; அதில் நிலைநிற்க வல்லவன் யாவன். வெளி. சு. ௰எ.

க யாரையும் நியாயத் தீர்ப்பராய்,
கர்த்தாவின் மைந்தனுன
அதிபதி பிரஸ்தாபமாய்,
இறங்கும் பயமான
நாள் வரும்போது, தீயிலே
எல்லாங் கரைந்து போகவே;
நகைப்பதரிதாகும்.

உ எக்காளத்தை நற்றூதர்கள்
எத்திக்கும் ஊதுவார்கள்;
சடுதியாய் இறந்தோர்கள்
யாரும் எழும்புவார்கள்;
உயிரோடிருக்கும் யாவரும்
ஓர் நிமிஷத்திற் கூடவும்
அழியா ரூபாவார்கள்.

ஙு எல்லாரின் சிந்தை செய்கையும்
வெளிப்படுவதற்கு,
இரண்டு புத்தகங்களும்
திறந்தவரவர்க்கு
நடந்ததற்குத் தக்கதாய்,
பலன் அனந்த காலமாய்,
கொடுக்கப்பட்டிருக்கும்.

கூஉ பாட்டு. P. M. 92

Judgment Hymn.

நியாயத்தீர்ப்புநாளைப் பற்றிப் பாடியது. மத். உ௫: ௩க—சகூ.

க புலம்புதலிருக்கும் நியாயத்தீர்ப்பிலே
லோகம் வெந்தெரிந்து அழிந்தபோதிலே
பெற்றோர் மக்கள் விட்டு,
விட்டென்றுங் காணாரே;
கடுங் கோபம் என்றும்
பாவி பட்சிக்குமே.
ஐயையோ! என்றைக்கும்
பாவி பட்சிக்குமே.

உ புலம்புதலிருக்கும் நியாயத்தீர்ப்பிலே
லோகம் வெந்தெரிந்து அழிந்தபோதிலே
நாயன் பாரி விட்டு,
விட்டென்றுங் காணாரே;
கடுங்கோபம் என்றும்
பாவி பட்சிக்குமே.
ஐயையோ! என்றைக்கும்.
பாவி பட்சிக்குமே.

கூ புலம்புதலிருக்கும் நியாயத்தீர்ப்பிலே
லோகம் வேந்தெரிந்து அழிந்தபோதிலே
உவாத்தி சிஷன் விட்டு,
விட்டென்றுங் காணாரே;
கடுங் கோபம் என்றும்
பாவி பட்சிக்குமே.
ஐயையோ! என்றைக்கும்
பாவி பட்சிக்குமே.

௪ புலம்புதலிருக்கும் நியாயத்தீர்ப்பிலே
லோகம் வெந்தெரிந்து அழிந்தபோதிலே
அண்ணன் தம்பி விட்டு,
விட்டென்றுங் காணுரே;
கடுங்கோபம் என்றும்
பாவி பட்சிக்குமே.
ஐயையோ! என்றைக்கும்
பாவி பட்சிக்குமே.

௯௩ பாட்டு. L. M. 93

"*The door was shut.*"

கதவு பூட்டப்பட்டது. மத். ௨௫. ௰.

க ஆ! ஐயையோ! என் நெஞ்சமே!
விண் வாசல் பூட்டப்பட்டதே;
மறுதலித்தாய் யேசுவை,
ஐயோ! ஐயோ! மா சோதனை.

௨ இனிச் சகாயமில்லையே!
எரிந்தெரிந்து தீயிலே,
நானே பட்டாலுஞ் சகிப்பேன்,
என் உறவர்கள் வந்ததேன்?

௩ நீதான் நீதானே ஒவ்வொன்ருய்
சொல்வார்களே, மா கசப்பாய்;
விரோதம், பகை, கோபமும்
சாதித்துக்கொள்வார் என்றைக்கும்.

௪ முடியாதே, ஐயோ! ஐயோ!
சபிக்கப்பட்டோம் அல்லவோ?
சிற்றின்ப விலையாகவே,
இந்தாத்துமாவை விற்றேமே.

௫ பிதா, மாதாக்கள், பிள்ளையும்,
கூடப்பிறந்த எல்லோரும்
ஒருவருக்கொருவராய்
குற்றஞ் சொல்வார்கள் கோபமாய்

சு ஆ! பாவி கேள், ஏன் கெடுவாய்?
உன் இனஞ் சனங் கொடிதாய்
நரகத் தீயிற் படுவார்;
அறிந்த நீ திகைத்துப்பார்.

கூச பாட்டு. L. M. **94**

"There shall be weeping and gnashing of teeth."

அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாகும். மத். அ. ௰உ.

க நரகமென்னுஞ் சொல்லையே
நினைக்க, நெஞ்சம் ஏங்குமே;
பாதாளத் தீ என்றென்றுமாம்
கனைந்தெரியும் குழியாம்.

உ பிசாசும், அதின் தூதரும்,
நம்பிக்கையற்ற மாந்தரும்
அதில் தள்ளுண்டு தாழுவார்,
மீட்சியில்லாமல் மாளுவார்.

ந அங்கே தீயோர் பற்கடித்து,
ஐயோ! ஐயோ! வென்றழுது,
புலம்பி, நித்த தீயிலே
கனைந்தெரிந்துஞ் சாகாரே.

ச ஓர் சொட்டு நீர் கிடையாது,
நாக்கை நனைக்கக் கூடாது;
மா கோடாகோடி காலமாய்
பட்டாலும், படும் புதிதாய்.

ரு ஆ! ஐயையோ! இச்சாவை யார்
பொறுத்துத் தாங்கிக்கொள்ளுவார்?
கர்த்தாவே, நானும் நரகில்
போகாமற் சேர்த்தும் மோட்சத்தில்.

சு௰ம் பிரிவு.

சத்திய வேதம்.

கூரு பாட்டு. P. M. **95**

"Thy statutes have been my songs in the house of my pilgrimage."

நான் பரதேசியாய்த்தங்கும் வீட்டிலே, உம்முடைய பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயிருக்கின்றன. சங். ௱௰௯. ௫௪.

க கர்த்தாவே! நாங்கள் நெஞ்சத்தில்
மெய்ஞ்ஞானமற்ற மாந்தர்;
நற்பத்தியைத் தாராவிடில்
எப்போதும் புத்தியீனர்;
உம்மாலுண்டான வேதமும்,
அதோடே உமதாவியும்,
நற்சிந்தை காட்ட வேண்டும்.

உ வேதத்துக்காகத் தோத்திரம்!
கர்த்தாவின் சொல் நாம் கேட்க,
தெய்வீக வார்த்தை தினமும்
எல்லாரும் பத்தியாக
தியானம்பண்ணி யோசித்து
கைக்கொள்ள, நீர் கடாட்சித்து
நல்லாவியைச் செலுத்தும்.

௩ பிதாவே! எங்கும் உமது
நல் வார்த்தை செல்வதாக;
இயேசுவே! நீர் காட்டிய
வகையிற் போவோமாக.
தேவாவி, எங்கள் உள்ளத்தில்
இறங்கி வார்த்தையால் அதில்
நற்சீரைச் செய்வீராக.

௯௬ பாட்டு. C. M. 96

The holy Scriptures.

சத்திய வேதம்.

க தேவாவியால் இரக்கமாய்
உண்டான வேதமே,
உயர்ந்த ஞானமுள்ளதாய்
நமக்குண்டாயிற்றே.

உ அதிற் பிறந்த போதனை
விளக்கைப் போலவே,
பிரகாசமாக மார்க்கத்தை
கதிக்குக் காட்டுமே.

௩ கர்த்தர் ஈந்திட்ட வேதந்தான்
தெய்வருள் சத்தியம்;
அதை வாசித்தறிந்த நான்
வாழ்வேனே என்றைக்கும்.

௪ இருள் நிறைந்த பூமியில்
அதே நடத்துமே;
பரத்தை நோக்கிப் போகையில்
வெள்ளியைப் போலாமே.

௫ அதைக் கர்த்தர் கொடுத்ததே
மகா அன்பாயிற்று;
அதைக் குறித்தென் நெஞ்சமே
சந்தோஷமாயிரு.

கூள பாட்டு. C. M. 97

"The entrance of thy word giveth light."

உம்முடைய வாக்குகளின் விரிவு ஒளியைத் தருகின்றது.

சங். ாஙகூ: ாகூ௰.

க சத்திய வேதம் முழுதும்
நமக்குண்டாயிற்றே;
அதற்காய் நாம் இஸ்தோத்திரம்
செலுத்த ஞாயமே.

உ நம்மாத்துமாவுக்கதனுல்
வெளிச்சம் விளங்கும்;
அதாலேயன்றி எங்களால்
இருள் நீங்காதிரும்.

ந அதை நாம் சாந்த விதமாய்
ஆராய்ந்து வாசித்தால்,
அப்போது கர்த்தர் தயவாய்
தமது ஆவியால்.

ச அதின் மெய்யான பொருளே
விளங்கப் பண்ணுவார்;
அதோடே புத்தி ஞானத்தை
நமக்கு அருள்வார்.

ரு கர்த்தாவே! உமதாவியை
என் நெஞ்சில் ஊற்றிடும்;
வேதத்துக்கேற்றதாய் என்னே
நடக்க அருளும்.

கூஅ பாட்டு. L. M. 98

The excellency of the Scriptures.

சத்திய வேதத்தின் மேன்மை.

க வானப் பிதாவே! உமது
அருளால் வந்த வேதமே
பூரணமுள்ளதாயிற்று;
அதால் நற்சீர் உண்டாகுமே.

௨ தேவருளான வாக்கியம்
சத்தியம் சுத்தமானதே;
நீர் இட்ட கற்பனைகளும்
மிகுந்த செம்மையானவே.

௩ கர்த்தாவே! நின் நியாயங்கள்
நன் நீதி, சுத்தம், மேன்மையே;
தங்கத்தைப் பார்க்க அவைகள்
விரும்பப்படத் தக்கவே.

௪ அவைகளாலே மனிதர்
இருளை நீங்கி, ஞானத்தில்
வந்தும்மைக் கண்டு களிப்பர்,
என்றைக்குமுள்ள மோட்சத்தில்

௫ இவ்வேதத்தை எத்தினமும்
படித்து, ஓதி, உமக்கே
என் நெஞ்சத்தைப் படைக்கவும்
கடாட்சஞ் செய்யும், கர்த்தரே

ரு—ம் பிரிவு.

சீர்கெட்ட மாந்தர் நிலைமை.

கூகூ பாட்டு. 8.7.4. **99**

"I was born in sin, and in iniquity did my mother conceive me."

துர்க்குணத்தில் உருவாக்கப்பட்டேன், பாவத்தில் என் மாதா என்னைக் கர்ப்பந் தரித்தாள். சங். ருக: ரு.

க யேசுவே! துர்க்குணத்தோடே
நான் பிறந்ததாகையால்,
எந்தக் கேடும் ஆவலோடே
தேடிக்கொண்டேன் சுபாவத்தால்;
என்னிடத்தில்
நன்மையேனுமில்லையே.

உ என்னில் ஆசை எல்லாம் கேடு,
குணம் தீமை சாருமே;
வழிதானும் மாறுபாடு,
ஒன்றும் நன்றாய்ச் செய்யேனே
நீர் கடாட்சம்
செய்தால் அன்றி மாளுவேன்.

ௌ என்னை உமதாவியாலே
நீர் திருப்பிக்கொண்டிடும்;
உம்முடைய அன்பினாலே
என்னில் மாற்றியருளும்.
பாவ சாயல்
நீங்கிவிடச் செய்திடும்.

ச பாவத்தால் நான் இங்கே தாழ
செத்தோனாய்க் கிடக்கிறேன்;
ஞான ஜீவனோடே வாழ
ஏங்கிக் கெஞ்சிக் கேட்கிறேன்.
ஆ! கர்த்தாவே,
தயை தந்துயிர்ப்பியும்.

௱ பாட்டு. 8. 7. 4. **100**

“What is man that he should be clean, and he which is born of a woman that he should be righteous?”

சுத்தனாயிருப்பதற்கு மனுஷன் எம்மாத்திரம்? ஸ்திரியினிடத்திற் பிறந்தவன் நீதிமானாகிறதற்கு எம்மாத்திரம்? யோபு. ௰௫. ௰௪.

க கர்த்தரே! என் சென்மத்தாலே
நான் மிகுந்த பாவிதான்;
யாவும் என்னில் அதினாலே
மாறுபாடாய்ப் போனதாம்.
கெட்ட ஆசை
பெலன்கொண்டிருந்தது.

உ யேசுவே! என்னிலுண்டான
பொய், அநீதம், பெருமை
வேர் அறுக்க ஏற்றதான
வல்ல தேவ கிருபை
என்னில் ஊற்றி,
சீர் அளித்து ரட்சியும்.

ஙு சுத்த ஆவியே! நீர் பட்சம்,
நீதி, தயை, பொறுமை,
சுத்தம், உண்மை, மா இரக்கம்,
கிறிஸ்தின் தேவ சாயலை
என்னில் நாட்டி,
தினமும் வளர்ப்பியும்.

௪ தேவரீரை நான் பின்சென்று
உம்மை மேன்மைப்படுத்த,
சீஷனாக உமக்கென்று
யாவிலும் நான் நடக்க,
இன்ப மாயை
லோகத்துக்கும் சாகவும்.

௫ என்னை உமதாவியாலே
நீர் நடத்தியருளும்;
ஈவைத் தந்து அதினாலே
சிந்தை, செய்கை, யாவையும்
தயவாக
ஆசீர்வாதஞ் செய்திடும்.

௬ இந்த அன்பு சாவுமட்டும்
காண்பியும் இரக்கமாய்;
பின்னர் வாழ்விலே என்றைக்கும்
உம்மை மனப் பூர்த்தியாய்
கீதம் பாட
பாக்கியத்தை அருளும்.

௱௧ பாட்டு. P. M. 101

"We were by nature the children of wrath even as others."

சுபாவத்தின்படி மற்றவர்களைப்போலக் கோபாக்கினைக்குள்ளான வர்களாய் இருந்தோம். எபே. ௨. ௩.

௧ பொல்லாத சித்தம் போகவே
விரும்பினாலும், நிற்கும்,
பிசாசினால் என் உள்ளமே
நல்லாவியைத் தவிர்க்கும்.
நற்சுபாவம் போகக் கெட்டோமே
எதைச் செய்தாலும், தீதாயே
முடிந்து கெட்டுப்போகும்.

௨ கெட்டோன் என்றே அறிந்தபின்
அவர் முன்பாகத் தாழ்ந்து,
ஆ, யேசுவே! நீர் மாண்டதின்
பலத்தினால் நான் வாழ்ந்து
பிழைக்கச் செய்யும், மீட்பரே,
என்றேங்கினால் மெய்யாகவே
இரங்கி நம்மை மீட்பார்.

௩ கர்த்தாவே! உமதன்புக்கு
புகழ் உண்டாவதாக,
அடியார் விசுவாசித்து
பிழைக்கத்தக்கதாக,
இங்கும்முடைய உன்னத
நல் நாமம் மாட்சிமைப்பட,
இராசரீகஞ் செய்யும்.

௪ கர்த்தாவின் சித்தப்படியே
எல்லாருஞ் செய்வோமாக;
பொசிப்பைத் தாரும், கர்த்தரே!
கடன்களை அன்பாக
மன்னித்துத், தீமைக்கேதுவை
விலக்கிப்போட்டுத், தீமையை
நிவிர்த்தி பண்ணும், ஆமென்.

௱௨ பாட்டு. L. M. 102

"*In me, that is in my flesh, dwelleth no good thing.*"

என் மாமிசத்திலே நன்மையானதொன்றும் வாசமாயிருக்கிறதில்லை.
உரோ. எ. ௰௮.

௧ கர்த்தாவே! எந்த நன்மைக்கும்
நீர் காரணர்: என்புத்திக்கும்
மிகுந்த ஈன முண்டு, நீர்
அதை அறிந்திருக்கிறீர்.

௨ சென்மத்தினால் என் நெஞ்சமே
நற்சீரில்லாமல் போயிற்றே;
தகாத ஆசை அதில் தான்
வேரூன்றி, வேகமாய் உண்டாம்.

௩ பிதாவே! உமதாவியால்
இயேசு தாம் மரித்ததால்,
என் நெஞ்சத்திற் பிரகாசியும்,
நற் சித்தத்தைக் கடாட்சியும்.

௪ எல்லாருக்கும் நான் உண்மையை,
நியாயம், நீதி, நேசத்தை
நல் ஆசையோடு காட்ட, நீர்
என் நெஞ்சை ஏவக் கடவீர்.

௫ அஞ்ஞானியை ரட்சிக்கவும்,
துன்மார்க்கனைத் திருப்பவும்,
எப்போதும் நல்ல சித்தமே
இருக்கச் செய்யுங், கர்த்தரே!

௬ அதற்குத் தேவ வசனம்,
அதை உணர்த்தும் ஆவியும்
என் உள்ளத்தில் தரிக்கவே
நீர் தயை தாரும், மீட்பரே!

௱௩ பாட்டு. 8. 7. 4. **103**

"I even I am the Lord, and beside me there is no Saviour."

நாமே யெகோவா, நம்மையன்றி ரட்சகரில்லை. ஏசா. ௪௩. ௰௧.

௧ ரட்சகரில்லாமல் நாங்கள்
மிகவும் நிற்பாக்கியர்;
நன்மையேதும் அற்ற நாங்கள்
கெட்டுப்போன மானிடர்:
ஆ, கர்த்தாவே!
சீரைத் தந்து ரட்சியும்.

௨ நீரிராவிட்டால் பிசாசும்,
தீயுடன் பாதாளமும்,
என்னைச் சாலவும் நடுங்க
பண்ணும் இந்த நெஞ்சமும்,
என்னைக் கெட்டோன்
என்று சொல்லி வாதிக்கும்.

ங இந்தக் கெட்டலோகம் எங்கும்
வைத்த கண்ணி மிகுதி;
தேவரீரில்லாமல் நாங்கள்
தப்பிப்போவதெப்படி?
அது என்னை
இச்சையாலே கலக்கும்.

ச யேசுவே! பெலத்தைத் தந்து,
பாவக் கேட்டை நீக்கிடும்;
உள்ளக் கண்களைத் திறந்து
நேச முகங் காண்பியும்.
ஞான தீபம்
என்னில் தொன்றச் செய்திடும்.

௱ச பாட்டு. 7's. **104**

"How many are mine iniquities and my sins."

என் அக்கிரமங்களும் பாவங்களும் எத்தனை? யோபு. ௰௩. உ௩.

க தேவனே! நான் எத்தனை
பாவ கிர்த்தியங்களை
செய்துவந்தேனென்று, நீர்
தோன்றப் பண்ணக் கடவீர்.

உ பாவத்தாலே கெட்டோனாய்,
தேவரீர்க்குத் தூரமாய்,
வாடிக் கெஞ்சிக் கேட்கிறேன்;
துக்கத்தால் விடாய்க்கிறேன்.

ங நெஞ்சு என்னைக் குத்தவே,
பாவப் பாரம் மிஞ்சவே,
ஆவியுங் கலங்கிற்று;
கண்ணீர் பாய்ச்சலாயிற்று.

ச வெட்கங் கொண்டிவ்வேழையேன்
துக்கமுள்ளோனாய் வந்தேன்;
சுவாமி! என்னை மிகவும்
தேற்றி மன்னித்தருளும்.

௱ரு பாட்டு. L. M. 105

"My sin is ever before me."

என் பாவம் எப்பொழுதும் எனக்குமுன் நிற்கிறது. சங். ௫க. ௩.

க ஆ, கர்த்தரே! மா தயவால்
என்மேல் இரக்கஞ்செய்வீரே;
என் பாதகந் தன் தோஷத்தால்
என்றும் என் முன் நிற்கின்றதே.

உ அன்பாக அதை நீக்குமேன்,
நான் செய்த பாவம் உமக்கே
விரோதமென்றழுகிறேன்;
நீர் தண்டித்தாலும் நீதியே.

௩ நான் ஜென்மத்தால் அடைந்த சீர்
எல்லாம் பொல்லாங்கும் பாவமும்;
நல் உண்மையே விரும்பும் நீர்
அதைத்தானே ஈந்தருளும்.

௪ என் பாவக் குஷ்டரோகத்தை
அகற்றி என்னைக் கழுவும்;
நொறுங்கப்பட்ட ஆவியை
திரும்பவும் உயிர்ப்பியும்.

௫ என் பாவத்தைத் தொலைத்தென்னில்
சுத்தாங்கமான நெஞ்சத்தை
படைத்துக்கொண்டேன், உள்ளத்தில்
அருளும் புது ஆவியை.

௱௬ பாட்டு. 8. 7. 106

"Our transgressions are multiplied before us."

எங்கள் மீறுதல்கள் பெருகியிருக்கின்றன. ஏசா. ௫௯. ௧௨.

க மா பொல்லாங்கைச் செய்துகொண்டு,
பாவக் கேட்டிற் கிடந்தேன்;
நல்ல பாதை விட்டகன்று
உமக்கே விரோதித்தேன்;
கோபத்துக்குப் பயமாக
ஏதுவாயிருக்கிறேன்.

௨ கல் நெஞ்செனக்குள்ப் பிளந்து
அறஞ் செய்தும், ஆகாதே;
கண்ணீர் வெள்ளமாய்ப் புரண்டு
ஓடினாலும், நீங்காதே;
பாவம் போக்கப் பலியாக
சீவன் தந்தும், போகாதே.

௩ நீரோ, தேவ ஆட்டுக் குட்டி!
சிந்தின இரத்தமே
பாவழுக்கைச் சுத்தம்பண்ணி,
ஆக்கினையை நீக்குமே;
அந்த ரத்தம் என்னை அற
சுத்தம்பண்ணச் செய்யுமே.

௱௭ பாட்டு. C. M. 107

"Out of the miry clay."

உளைச்சேற்றினின்று என்னைத் தூக்கினார்: சங். ௪௰. ௨.

௧ மிகுந்த பாவச் சேற்றிலே
அமிழ்ந்தவனானேன்;
விஸ்தார பூதலத்திலே
சகாயத்தைக் காணேன்.

௨ மா தூரமாய் எத்திக்கிலும்
போனாலும், இன்னும் நான்
என் தோஷம் ஆராலாகிலும்
நீங்காமல் நிற்பதாம்.

௩ நானே தள்ளுண்கப் பாத்திரன்,
கெட்டேன் என் பாவத்தால்;
நீரோ மகா தயாபரன்,
நிறைந்தோர் அன்பினால்.

௪ ஆ, கிறிஸ்துவே! என் மோசத்தில்
சகாயராகுவீர்;
தெய்வீக அன்பை நெஞ்சத்தில்
நிறுத்தி, ரட்சிப்பீர்.

ரு அதே என் நெஞ்சில் இருந்தால்
எத்தீங்கும் நேரிட்டும்,
நீர் செய்யும் ஏற்ற பெலத்தால்
முற்றாக நீங்கிடும்.

சு பின்னால் என் தேகம், ஆவியும்
பிரியும் போதிலே,
நான் உம்மைக் கண்டு, என்றைக்கும்
சந்தோஷங்கொள்வேனே.

ாஅ பாட்டு. P. M. **108**

Warning.

எச்சரிப்பு.

க ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? சகோதரரே!
ஆ! வெற்றி சிறந்தோர் பின்னிட்டீர்களே!
பூலோகத்தை விட்டுப் பரத்தில் சேர்வோம்,
எல்லாருஞ் சீர்கொள்ள விழித்திருப்போம்.

உ ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? கர்த்தாவே வந்தார்;
கெட்டோர்களை மீட்க அழைத்தும் நின்றார்;
இளைத்தோரைத் தாங்கிச் சலிப்போராயே
மா ஆறுதல் செய்வார், யேகோவாதாமே.

ந ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? ஆ பாவிகளே!
வளைந்து நெருக்கி கெடுக்க வகை
பார்க்கிறார்கள், அநேகர்; அறிந்தாதலால்
மா சாபம் வாராதோ? நாம் தூங்கிவிட்டால்.

ச ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? குமாரன் வந்தார்,
போதித்து, மரித்து, கெட்டோரைக் கொண்டார்;
இரக்கம் விளங்க, தீர்ப்பாகும், நீதி;
ஒன்றான கர்த்தாவுக்கே என்றும் துதி.

௯௰-ம் பிரிவு.

கிறிஸ்தவனைப்பற்றிப் பாடியது?

௱௯ பாட்டு. 7's. **109**

"Why will ye die?"

சாவவேண்டியதென்ன. எரே. உ௭. ௰௩.

க உங்களைப் படைத்தவர்
சர்வ பிதாவானவர்;
தம்மில் வாழ்ந்து சேவிக்க,
என்றுந் தம்மோடிருக்க,
ஆசைப்பட்டோர் உங்களை
பார்த்து, என் சிநேகத்தை
அற்பம் எண்ணுபவன் ஆர்?
மனந்திரும்பு, என்றார்.

உ உங்களை ரட்சித்தவர்
தேவ சுதனானவர்,
திரு ரத்தஞ் சிந்தினார்,
சிலுவையில் மரித்தார்.
ஆதலாற் சாவீர்கள் ஏன்?
உங்களைச் சாவால் மீட்டேன்
என்று கூறி நிற்கிறார்,
மனந்திரும்பு என்றார்.

௩ உங்களை நேசிப்பவர்
சுத்த ஆவியானவர்,
நயம் பயங் காட்டினார்,
குணப்பட ஏவினார்.
கிருபை வாங்கீர்களோ?
மீட்சியைத் தேடீர்களோ?
என்று ஏங்கிக் கேட்கிறார்,
மனந்திரும்பு என்றார்.

ச ஆத்துமாக்கள்! பாவத்தில்
மரித்தீர்கள், பூமியில்
செத்து, மாயையிலேயோ
கதி தேடுவீர்களோ?
பாவத்துக்குச் சம்பளம்
சாவாகிய நரகம்.
பாவியே! நீ எதுக்காய்,
என்றுஞ் சாகவே சாவாய்?

ளய பாட்டு. 7's. **110**

" *Sinners turn, Why will ye die?*"

பாவிகளே ஏன் சாவீர்கள்?

க பாவி! கேள், ஏன் கெடுவாய்?
கர்த்தர் தாம் இரக்கமாய்
கேட்டுக்கொண்டு நிற்கிறார்,
மோட்ச செல்வந் தருவார்.

உ உன்னைச் சிஷ்டி செய்தவர்,
காத்துக்கொண்டு வந்தவர்,
உன்னை மீட்ட யேசுவே,
காயங் காட்டி நிற்கிறாரே.

ந மீட்கப்பட்ட பாவியே!
தேவ அருட் சீவனை
தள்ளிவிட்டுக் கொடிதாய்
நித்த சாபம் ஏன் கொள்வாய்?

ச சுத்த ஆவியானவர்,
உன்னைச் சுத்தஞ் செய்தவர்,
மோட்சானந்தம் பெறவே
உனக்கருள் ஈவாரே.

ரு பாவி! கேள், நீ தீயிலும்
வெந்தெரிந்து, என்றைக்கும்
வேதனை நிறைந்த சா
ஏன் கொள்வாய்? திரும்பி வா.

௱௰௧ பாட்டு. L. M. 111

"Now is the accepted time."

இப்பொழுதே நற்சமயம். ௨ கொரி. ௬. ௨.

௧ கெட்டோரே! தேவன் சொல்வதை
கேளுங்கள், நல்ல காலத்தை
அறிந்து, ஞானகாரங்கள்
நிறைந்த பந்தி சேருங்கள்.

௨ இப்போது மனஸ்தாபத்தால்
சேர்வீர்களாகில், அன்பினால்
பிதா இரக்கங் காட்டுவார்,
குமாரன் நேசமாய் ஏற்பார்.

௩ தேவாவி உங்கள் மனதில்
கடினம் நீக்கி, ரத்தத்தில்
கழுவிக்கொள்வார் சுத்தமாய்,
நற்சீரை ஈவார் நிறைவாய்.

௪ பிதாச் சுதன் தேவாவியார்
இரங்கி ஏற்றுக்கொள்ளுவார்;
செத்தோர் சீவன் அடைந்தார்கள்
என்று தூதர் களிப்பார்கள்.

௱௰௨ பாட்டு. L. M. 112

"As I live saith the Lord God I have no pleasure in the death of the wicked."

துன்மார்க்கன் தன் துன்னெறியைவிட்டுத் திரும்பிச் சீவிப்பதையே விரும்புகிறேனென்று நித்திய தத்துவத்தைக்கொண்டு சொல்லுகிறேம். எசே. ௩௩. ௰௧.

௧ துன்மார்க்கத்தாரின் சாவை நாம்
தேடாமல், அவர் வாழ்வையே
விரும்புவோம் என்பதைத்தான்
மா தேவன் ஆணையிட்டாரே.

உ ஆ, பாவி! இந்த வார்த்தையின்
அழைப்புக் கேள், மா சுவாமியார்
நீ பாவம் விட்டு, மோட்சத்தின்
வழியைச் சேரக் கேட்கிறார்.

ங இந்நேரமே இவ்வார்த்தையை
நீ ஏற்று, உன்னை தாழ்த்தினால்,
மெய்யான சமாதானத்தை
தேவாவி ஈவார் தயவால்.

ச கர்த்தாவின் தயை பெரிது:
ஆனால் விசாரமின்றியே
நீ போகில், அதின் கணக்கு
கோபத்துக்கேதுவாகுமே.

ாயரு பாட்டு. 6. 4. **113**

"To-day the Saviour calls."

உன் மீட்பர் அழைக்கிறார்.

க உன் மீட்பர் அழைக்கிறார்
வா, இப்போதே;
ஆ, பாவி! அவர் ஆர்?
தயாளரே.

உ உன் மீட்பர் அழைக்கிறார்
கேள், பாவியே!
யேசுவை உற்றுப்பார்,
உன் நேசரே.

ங தன் கையை நீட்டுகிறார்
தஞ்சம் புகு;
ஆ! பழி வாங்குவார்
பாவம் விடு.

ச சுத்தாவி அழைக்கிறார்.
ஆ! தூர்க்காதே;
தட்டி எழுப்புகிறார்
பின்னில்லாதே.

௫ என் யேசு அழைக்கிறார்
வந்திடுவேன்;
தன் கையிற்றூக்குவார்
நான் பற்றுவேன்.

௱௰௪ பாட்டு. C. M. 114

"Rebuke me not in thine anger."

பராபரனே, உமது கோபத்தினாலே என்னைக் கடிந்துகொள்ளாதிரும். சங். ௬. ௧.

௧ கர்த்தாவே! என்னைக் கோபமாய்
விசாரியாதிரும்;
நான் செய்த தீமைக்கேற்றதாய்
சிரிக்கட்டாதிரும்.

௨ நான் சாபத்தைக் காணாமலும்
என்றென்றும் வாழவே,
என் பாவத்தைப் பாராமலும்
மன்னியுங், கர்த்தரே!

௩ ஆரோக்கியத்தை அளியும்,
நோவாய்க் கிடக்கிறேன்;
என் நெஞ்சிற் பாவம் எரியும்,
மனம் நருங்குண்டேன்.

௪ என் சீவ மீட்பராகவே
திரும்பிச் சேர்ந்திடும்;
ஆ! உமதன்புக்காகவே
கர்த்தாவே! ரட்சியும்.

௱௰௫ பாட்டு. C. M. 115

"Come unto me all ye that labor and are heavy laden, and I will give you rest."

வருந்திப் பாரஞ் சுமக்கிற நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாற்றி தருவேன். மத். ௰௧. ௨௮.

௧ உம்மண்டை நான் மா தாழ்மையாய்
பணிந்தேன், யேசுவே!

நீர்பட்ட சாவில் தயவாய்
ஓர் பங்கைத் தாருமே.

உ தள்ளாமல், ஆ! இப்பூச்சியை
கண்ணோக்கி ஏற்றிடும்;
இரக்க அன்பின் சிறகை
விரித்துச் சேர்த்திடும்.

௩ நீரே மகா அடைக்கலம்,
என் கோட்டை, சார்வும் நீர்;
ஏதேனும் புயல் அடித்தும்,
என் தஞ்சம் தேவரீர்.

ச அநேகர் பாவக் காயத்தால்,
நோவாய் உம்மண்டையே
அடைக்கலம் புகுந்ததால்,
சீராய் வாழ்ந்தார்களே.

ரு என் ஸ்வாமி! நானும் ஆவலாய்
சேர்ந்தேன், உம்மண்டையில்;
என் நோவை நீக்கி, பூர்த்தியாய்
நிறுத்தும் சொஸ்தத்தில்.

௱௰௬ பாட்டு. L. M. 116

"*God be merciful to me a sinner.*"

தேவனே, பாவியாகிய எனக்கு இரங்கும். லூக். ௰௮. ௰௩.

க நிற்பந்தமான பாவியாம்
நான் இங்கே தேவரீருக்கே
முன்பாக மா கலக்கமாம்
பயமாய் வந்தேன், கர்த்தரே!

உ இரங்கித் தயை அளித்து,
ஆ! கோபமாயிராதேயும்;
என் பாதகத்தை மன்னித்து,
என் சஞ்சலத்தை நீக்கிடும்.

௩ என் குற்றத்துக்குத் தக்கதாய்
செய்யாமல் தயை புரியும்;
பிதாவே, என்னைப் பிள்ளையாய்
திரும்ப நோக்கியருளும்.

௪ என் நெஞ்சில் திகில் தணியும்,
நீர் என்னைக் கேட்டு ரட்சிப்பீர்;
தெய்வன்பின் ஆற்றல் அளியும்,
ஓர்காலும் என்னைக் கைவிடீர்.

ராயெள பாட்டு. 6 lines 8's. **117**

"Spare me according to the greatness of Thy mercy."

உமது அளவில்லாத தயவின்படி எனக்கிரங்கும். நெகே. ௰௩. ௨௨.

க ஆ, ஸ்வாமி! என்னில் பாவத்தால்
மிகுந்த திகில் ஆயிற்றே;
என் நெஞ்சின் துயரத்தினுல்
நிறைந்த ஏழைப்பிள்ளைக்கே
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

௨ என் கண்ணீர், ஓலம் யாவுக்கும்
மறைந்து துணை செய்யீரோ?
என் பீடை, வாதை, நோவுக்கும்
இரக்கங் காட்ட மாட்டீரோ?
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

௩ என் ரத்தம் ஆருய் வடிந்தும்,
என் புண்ணியம் அவத்தமாம்;
என் சாவு மட்டுஞ் சலித்தும்,
என் பாவம் இன்னும் நிற்குமாம்.
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

௪ "நீ பாவஞ் செய்யவிடுவாய்,
மன்னித்தோம்" என்ருேர் சொல்லையே

எனக்குச் சொல்லும் தயவாய்;
அப்போது வாழ்வேன், கர்த்தரே!
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

௱௰அ பாட்டு. L. M. **118**

Mourning over sin.

பாவத்துக்காகத் துக்கப்படல்.

க என் பாரமான பாவத்தை
அகற்றத் தயை காண்பியும்;
என் ஆத்துமாவின் துக்கத்தை
விலக்கி என்னை ரட்சியும்.

உ என் கர்த்தரே! என் மீட்பரே!
எப்போது உம்மைக் காணுவேன்?
தவித்துக் கேட்டும் உமக்கே
வாராமல் தூர நிற்கிறேன்.

ன என் நெஞ்சுக்குச் சந்தோஷத்தை
அவாவுவேன், என் மீட்பரே!
சிநேகஞ், சாந்தம், ஊக்கத்தை
எனக்குத் தாரும், யேசுவே!

ச கட்டான பாவ பாசத்தை
அறுத்து என்னை ரட்சியும்;
நான் உம்மிற் சேர்ந்து சுத்தத்தை
அடையும்படி அருளும்.

ரு வாரும், கர்த்தாவே! பாவியை
தாமதியாமல்த் தேற்றிடும்;
என் நெஞ்சில் உமதாவியை
சொரியப்பண்ணியருளும்.

௱௰௯ பாட்டு. P. M. 119

"*Godly sorrow worketh repentance to salvation.*"

தேவனுக்கேற்ற துக்கம், இரட்சிப்பைத்தரும் துக்கமில்லாத மனந்திரும்புதலைத் தோற்றுவிக்கும். ௨ கொரி. எ. ௰.

௧ ஆ, கர்த்தரே! இவ்வேளையில்
அடியேனைக் காப்பாற்றும்;
என் பாரமான துக்கத்தில்
என் நெஞ்சை அன்பாய்த் தேற்றும்;
நீர் வல்ல தேவன், உம்மையே
அல்லாமல், பாவம் நீக்கவே
நிறைந்த வல்லோன் யாவன்?

௨ அன்புள்ள யேசு! பாவத்தால்
என் நெஞ்சு கஸ்திப்படும்;
நீர் பாடுபட்டு மாண்டதால்
ரட்சித்தென்மேல் இரங்கும்.
பிதாவிடத்தில் இப்போதும்
என் மத்தியஸ்தராயிரும்,
என் பாரத்தை அகற்ற.

௩ தேவாவி! நீர் மெய் நம்பிக்கை
இரக்கமாய் அளித்து;
என் கண்ணால், தேவ தயவை
நான் பார்க்க, தெளிவித்து;
என் முழு நெஞ்சால் உம்மையும்,
பிறனை என்னைப் போலவும்,
நேசிக்கத் தயை தாரும்.

௪ திரியேக ஸ்வாமி! உமக்கே
துதி உண்டாவதாக;
தெய்வீக சித்தப்படிக்கே
நடக்கத்தக்கதாக,
பிதா, சுதன், தேவாவியும்
அளிக்கும் அன்புந், தயவும்,
அருளும் கூடத் தாரும்.

௱உ௰ பாட்டு. C. M. 120

"*I will come in to him.*"

அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன். வெளி. ௩. உ௰.

க நொறுக்கப்பட்ட நெஞ்சிலே
பிரவேசிப்பேன் என்றீர்;
அவ்வாக்குக்கேற்றதாகவே
என்னில் பிரவேசிப்பீர்.

உ இதில் உமக்கொவ்வாததை
அகற்றி நீக்கிடும்;
உம்மோடு சேரும் நெஞ்சத்தை
கடாட்சஞ் செய்திடும்.

௩ இப்பாவியை எவ்வேளையும்
அன்பாக நோக்குவீர்;
நீர் கிறிஸ்துவின் நிமித்தியம்
என் குற்றம் மன்னிப்பீர்.

ச என் லாபமே! என் யேசுவே!
அழிந்துபோயினேன்;
ஆனாலும் என்னிடத்திலே
இருமென்றேங்குகிறேன்.

ரு அன்பாக என்னை நோக்கினால்,
என் ஆவி வாழுமே;
அதற்கு நீர் தேவாவியால்
என்னை நிரப்புமே.

௱உக பாட்டு. C. M. 121

"*My son, give me thy heart.*"

என் மகனே, உன் நெஞ்சைத் தா, நீதிமொழி. உ௩. உசு.

க என் மகனே! உன்னெஞ்சைத் தா
என்றென்னிற் கேட்டீரே;
ஆ, சுவாமி! நெஞ்சை நான் மகா
அன்பாய்ப் படைப்பேனே.

உ இதை மிகுந்த தயவாய்
எடுத்துக்கொண்டிரும்;
தேவாவிக்கேற்ற ஸ்தானமாய்
முற்றாக மாற்றிடும்.

ந மெய்யாக நான் சுகிக்கவே
இதைப் படைக்கிறேன்;
நீர் என்றும் இதைத் தேற்றவே
பணிந்து கேட்கிறேன்.

௱உஉ பாட்டு. C. M. **122**

"I will take away the stony heart."

கல்லான இருதயத்தை எடுத்துப்போடுவேன். எசே. ௰௧. உ௰.

க கற்போன்ற நெஞ்சத்தை நன்றாய்
திருத்திச், சாலவும்
கண்ணீருடன் உருக்கமாய்
கரையச் செய்திடும்.

உ அதால், அன்புள்ள யேசுவே!
எல்லாரின் மீட்புக்கும்
இறந்த தேவரீருக்கே,
என் நெஞ்சு கீழ்ப்படும்.

ந மன்னிப்புத் தந்து, உள்ளத்தை
நடத்தி ஆண்டிடும்;
கடைசியிற் சுகிர்தத்தை
அளித்திரட்சியும்.

௱உங பாட்டு. 8. 7. 4. **123**

The believer seeking Christ.

விசுவாசி கிறிஸ்துவைத் தேடல்.

க உம்மை முழு நெஞ்சத்தாலே
நேசிப்பேன், என் யேசுவே!
உம்மை நித்தம் வாஞ்சையாலே
பற்றுவேன், என் ஜீவனே!
நீர் அன்பாக
என்னைச் சேர்ந்து கொள்வீரே.

உ தேவரீரே மாந்தர் மீட்பர்,
நாடுவேன் அபேட்சையாய்;
யாவருக்கும் தெய்வ நேசர்,
சேர்வேன் உம்மைப் பூரிப்பாய்;
என்றும் உம்மை
நம்பிக்கொள்வேன் நேசமாய்.

ஙு உம்மைத் தேட வாஞ்சையற்று,
கெட்டோனாக அலைந்தேன்;
உம்மைவிட்டுத் தூரப்பட்டு,
இவ்வுலோகம் நேசித்தேன்;
ஆகில், இப்போ
உம்மைச் சார்ந்து, சேவிப்பேன்.

ச என்னுடைய சீவநாளும்
போற்றுவேன் என் நெஞ்சினால்;
எந்தக் கஸ்தி நேரிட்டாலும்,
உம்மை விசுவாசத்தால்
பற்றிக்கொண்டு,
வெற்றிகொள்வேன் அருளால்.

ருஉச பாட்டு. L. M. **124**

"*Renew a right spirit within me.*"

சுத்த இருதயத்தை எனக்குள்ளே சிருஷ்டித்தருளும். சங். ருக. ம.

க நான் வாஞ்சையாய் என் மனதை
உம்மண்டை ஏற்றி, பாவத்தை
வெறுக்கச் சுத்த நெஞ்சை நீர்
என்னிற் சிட்டிக்கக் கடவீர்.

உ பிசாசினால் இடிந்ததை
சீராக்கி, நீர் என் சித்தத்தை
கேடாய்ப் போகாமல், திடமும்
பெலனுமாக்கி அருளும்.

ஙு கர்த்தாவே! உமதாவியை
கொடுத்து, இந்த நெஞ்சத்தை
பிரகாசிப்பித்து, யாவையும்
திருத்தி, என்னை ஆண்டிடும்

௪ என் சித்தந் துக்கமற்றதாய்,
உமக்கிசைந்த பத்தியாய்,
நடக்க நித்தம் நித்தமும்
தேவாவியைக் கடாட்சியும்.

௱உ௫ பாட்டு. 7's. 125

Penitence (Blind Bartimeus.)

உத்தம மனஸ்தாபம்.

௧ ஆ! இரங்கும், யேசு ஸ்வாமி!
தாவீதின் குமாரனே!
கண் குருடன், துன்பவாளி,
பர்த்திமியு கேட்டானே.

௨ ரத்நம், தங்கம், கல்வி, என்னும்
லோக ஆஸ்தி வேண்டாமே;
கண்திறந்து, பார்வை தாரும்,
நேசமுள்ள யேசுவே!

௩ நெஞ்சம் ஏங்கி, இட்ட சத்தம்
சனம் கேட்டுக், கோபமாய்
அவனைக் கடிந்து கொண்டும்,
கூப்பிட்டான், விடாமையாய்.

௪ யேசு நின்று, கண் கடாட்சம்
செய்யப், பார்வை பெற்றோனாய்
சோதிகண்டு, நேசத்தோடும்
பின்சென்றானே, களிப்பாய்.

௫ கண் இல்லாத மாந்தர் யாரும்
சொஸ்த சீர் அடையவே
நேசம், பத்தி, ஆவலோடும்
சேரப்பண்ணும், யேசுவே!

௱உ௬ பாட்டு. 8. 7. 126

"*If I may but touch His garment I shall be whole.*"

இவருடைய வஸ்திரத்தைமாத்திரந் தொட்டால், சொஸ்தம் அடையலாம். மத். ௯. உ௧.

௧ ஆ! இவ்வேழைக்கும் இரங்கும்,
தெய்வ பரிகாரியே!

என்னைப் பாரும், என்னில் எங்கும்
நோவும், ரோகமும் உண்டே.
பாவக் குஷ்டம் முற்றும் மாற்ற
என் மேல் கையை வைத்திடும்;
என்றுமுள்ள சொஸ்தமாக்க
நீர் கடாட்சங் காண்பியும்.

உ உம்முடைய வஸ்திரத்தின்
ஓரம் தொடவே வந்தேன்;
நீர் ரட்சிக்கும் மா பெலத்தின்
சத்துவத்தை நம்புவேன்.
மீட்போமென்ற தேவ வாக்கை
அன்பால்ப் பொங்கிச் சொன்னீரே;
ஆ, கர்த்தாவே! தேவ தயை
தந்து என்னை மீட்பீரே.

௩ ஆமென், சுவாமி! ஏழைச் செபம்
கேட்டு, சுத்தம் பண்ணுவீர்;
என்னை நோக்கிக்கொண்டிரக்கம்
செய்து, சேர்த்துக்கொள்ளுவீர்.
அத்தால் நித்தம் நித்தமாக
தோத்திரஞ் செலுத்துவேன்;
உமக்கே புகழ்ச்சியாக
தூதரோடே போற்றுவேன்.

௱௨௭ பாட்டு. P. M. 127

"*Lord, to whom shall we go?*"

ஆண்டவரே, ஆரிடத்திற்குப் போவோம்? யோவா. ௬. ௬௮.

க என்னை யேசுவே!
உம்மிடத்திலே
சேரச்சொல்லும், ஏற்றுக்கொள்ளும்,
யேசுநாதரே!

உ தாழ்வில் சென்மித்தீர்,
பெத்லகேமில் நீர்
ஏழைக்காக, ஏழையாக,
வந்து சென்மித்தீர்.

௩ தேவ வாக்கியம்
என் நட்சத்திரம்;
கிறிஸ்தைக் காட்டும் நல்லுவாத்தி
தேவ வாக்கியம்.

௪ உமக்கேங்கிறேன்
காட்சி தாருமேன்;
ஆவலோடும், பத்தியோடும்
உமக்கேங்கிறேன்.

௫ தேவ மைந்தனே!
நல்ல மீட்பரே!
உம்மை நாடும் நெஞ்சு வாழும்,
தேவ மைந்தனே!

௱உ௮ பாட்டு. L. M. **128**

"Whosoever drinketh of the water that I shall give him shall never thirst."

நான் கொடுக்கிற நீரைக் குடிப்பவன் எவனே, அவன் ஒருபொழுதுந் தாகமடையான். யோவா. ௪. ௧௪.

௧ மெய்த் தாழ்மையான யாவர்க்கும்
நிறைந்த ஞானம், செல்வமும்
கொடுக்கும் யேசுக்கிறிஸ்துவே!
அநாதி சீவ சோதியே!

௨ உம்மேலே தாகம் அடைவோன்
சீவூற்றின் தண்ணீர் குடிப்போன்;
குடிப்பவன் ஓர் போதும் நீர்
பூலோகம் ஆசியான் என்றீர்.

௩ ஆ, கர்த்தரே! உம்மண்டைக்கு
வாஞ்சித்துச் சேர்ந்த ஆட்டுக்கு
தந்திடும், இந்தத் தண்ணீரும்
சுத்தாவியால் நிரப்பிடும்.

௪ நீரே என் மேய்ப்பர், ஆண்டவர்,
இரத்தஞ் சிந்தி மீட்டவர்;
அதாலே ஏழை அடியேன்
நம்பிக்கையோடிரக்கிறேன்.

ரு அருளும், யேசு! பூர்த்தியாய்,
நான் என்றும் வாழும்படிக்காய்,
என் ஆசை ஆற, ரம்மியம்
சீலூற்றாய் தோன்றக் கற்பியும்.

௱உகூ பாட்டு. 8. 7. **129**

Christ the source of justification and blessedness.

நாம் நீதிமான்களாவதற்கும், மற்றெல்லா நன்மைகளுக்கும்
கிறிஸ்துநாதர் ஒரே காரணர்.

க யேசுவே! எல்லா வரங்கள்
நிறைவாய் உம்மில் உண்டே;
தேவரீரின் மூலம் நாங்கள்
சுத்தோராகக் கூடுமே.
தாழ்மையான சிந்தை, சாந்தம்,
மற்ற நன்மைகள் எல்லாம்
உம்முடைய மா இரக்கம்
வாங்கிக்கொண்ட பலனும்.

உ நாம் தெய்வீக சாயலான
சிஷ்டியுள்ளோராக, நீர்
தாழ்ச்சியற்ற சுத்தமான
மாந்தர் சாயல் தரித்தீர்;
உம்மை மாத்திரம் முன்னிட்டு,
கர்த்தனை நாம் சேருவோம்;
சிலுவையிலே மரித்த
உம்மால் நீதியர் ஆவோம்.

ஙு நீர் அடைந்த நீதியன்றி
சீரில்லாமல் போன நாம்,
வேறென்னத்தைச் சார்ந்து, நம்பி,
மோசமின்றிப் பற்றலாம்?
கர்த்தரே! நான் உள்ளமட்டும்
இதைச் சார்ந்து கொள்ளவே,
நீரே வந்து, சற்சகாயம்
செய்து, தங்கும் என்னிலே.

௱௩௰ பாட்டு. C. M. 130

"Unto you that believe He is precious."

விசுவாசிகளாகிய உங்களுக்கு அது அருமையாயிருக்கிறது.
௧ பேது. ௨. ௭.

௧ நன் மீட்பர் ஆட்டுக்குட்டியே!
நீர் எங்கள் விருப்பம்;
நீர் கொண்ட திரு நாமமே
மெய்வாழ்வைக் கொடுக்கும்.

௨ உமது வார்த்தை இன்பமாய்
செவியில் ஏறவே;
அதால் மகா மகிழ்ச்சியாய்
சேர்வோம் உம்மண்டையே.

௩ பூலோகத்தில் சாமட்டுக்கும்
நீர் எங்கள் சிந்தனை;
பூலோகம் வானம் அழிந்தும்,
உமக்கு வந்தனை.

௪ புயலாய் தோன்றுந் துன்பத்தில்,
நாம் உம்மை நோக்குவோம்;
கண் பூக்கும் சாவின் வேளையில்,
நாம் இன்னும் போற்றுவோம்.

௫ பரத்தின் சேனையோடேயும்,
மேகத்தின் வழியாய்
நீர் தோன்றும் போதவ்வேளையும்,
வாழுவோம் கெம்பீரமாய்.

௱௩௰௧ பாட்டு. C. M. 131

"Thou knowest that I love thee."

நான் உம்மில் அன்பாயிருக்கிறதை அறிந்திருக்கிறீர். யோவா. ௨௧. ௰௫.

௧ அடியேனுக்கு, யேசுவே!
நீர் செய்த தயை தான்,
நான் உம்மை நம்பும்படிக்கே
நிறைந்த அருளாம்.

உ மகா உயர்ந்த விதமாய்
நீர் எனக்கும்மையே,
அளவில்லாத நேசமாய்
அருளிச் செய்தீரே.

௩ உம்மிலே நான், நல் மீட்பரே!
இனி என்றென்றைக்கும்
தரித்திருக்க, என்னிலே
நீருந் தரித்திடும்.

௪ அப்போது உம்மைச் சேவித்து,
அன்போடே நடப்பேன்;
பின்னாலே மோட்சம் அடைந்து,
என்றென்றும் வாழுவேன்.

௱௩௨ பாட்டு. 8. 7. 4. **132**

"Ye are not your own, for ye are bought with a price."

நீங்கள் உங்களுக்குரியவர்களல்ல, கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறீர்கள். க கொரி. ௬. ௨௰.

க தேவரீரின் சாவினாலே,
தாழ்ச்சியற்ற ரட்சிப்பு
நான் அடைந்துகொண்டதாலே
நித்தம் என்னை உமக்கு
பெலியாக
பூரிப்போடே ஒப்பிப்பேன்.

உ சீரில்லாத என்னைப் பார்த்து,
வந்து பேயின் வல்லமை
செயத்தோடே நீர் முறித்து,
நித்த சீவ வாசலை
நீர் திறந்து,
கொண்டதாலே தோத்திரம்.

௩ இப்போ நான் களிப்புக்கொண்டு,
பூர்த்தியாகப் பூரிப்பேன்;
என் மாற்றானை நீரே வென்று,

தாழ்த்தினாலே, அடியேன்
நீர் என் ராசா
என்று சொல்லிச் சேவிப்பேன்.

ச இன்று முதல் நான் தெரிந்து
பற்றும் பேரெல்லாம் நீரே;
என்னை நீர் ஆராய்ந்தறிந்து,
உண்மையுள்ளோனாகவே
உம்மில்த் தங்க
ஊக்கந் தந்து, காத்திடும்.

௱௩௩ பாட்டு. 7. 6. **133**

Christ the believer's treasure.

கிறிஸ்து விசுவாசியினுடைய பொக்கிஷம்.

க அநேகர் ஆசை கொள்ளும்
பொருளை வாஞ்சியேன்;
கர்த்தாவின் வார்த்தை, சொல்லும்,
மெய் நன்மை தேடுவேன்.
என் பொக்கிஷம் பரத்தில்
எழுந்த கிறிஸ்துவே;
அங்கே அவரிடத்தில்
செல்வமெல்லாம் உண்டே.

உ என் யேசுவை நான் பற்றி,
தொடர்வேன் ஆவலாய்.
என் சாபத்தை அகற்றி,
ரட்சிப்பார் பூர்த்தியாய்.
நான் தப்ப எனக்காக
இரத்தஞ் சிந்தினார்;
எனக்குச் சீவனாக
செயித்தெழும்பினார்.

௩ என்னை அன்பாய் ரட்சித்த
மகா கர்த்தாவுக்கே,
இனி ஸ்தோத்திரஞ் செலுத்த
மிகுந்த ஞாயமே.

பூரிப்படைந்தோனாக
  நான் போற்றத், தேவரீர்
என் நெஞ்சத்தை அன்பாக
  எழுப்பக் கடவீர்.

௱௩௪ பாட்டு. S. M. **134**

"I will seek Him whom my soul loveth."

என் பிராணநேசனைத் தேடுவேன். உன்னதகீதம். ௩. ௨.

க கர்த்தாவாம் யேசுவே!
இவ்வேழை அடியேன்
உமக்குச் சொந்தமாகவே
என் நெஞ்சை ஒப்பித்தேன்.

உ என் ஆவி உம்மைத்தான்
என்றென்றும் வாஞ்சிக்கும்;
உம்மில் என் நம்பிக்கை உண்டாம்,
நீர் என்னை ஏற்றிடும்.

௩ நான் வாழும்படிக்காய்
இரத்தஞ் சிந்தினீர்;
ஆ, யேசு! உமக்கேற்றோனாய்
நீர் என்னை ஆக்குவீர்.

ச பூலோக சிந்தையும்
இனி நான் அறியேன்;
நீர் பரத்தின் மா பொக்கிஷம்,
நான் உம்மைத் தேடுவேன்.

௱௩௫ பாட்டு. C. M. **135**

"When Thou saidst seek ye my face, my heart said, thy face Lord, will I seek."

நமது முகத்தைத் தேடுங்களென்று நீர் சொல்ல, என் இருதயம், பராபரனே, உமது முகத்தைத் தேடுவேனென்றது. சங். உ௭. ௮.

க என் உள்ளம் தேவரீருக்கே
  அன்பாய் ஒப்பிக்கிறேன்;
விடாத வாஞ்சையுடனே
  நான் உம்மைத் தேடுவேன்.

௨ நீரே என்னில் நல் நம்பிக்கை,
சுத்தன்பும், பூரிப்பும்
உண்டாகும்படி, ஆவியை
என்மேல் சொரிந்திடும்.

௩ இவ்வண்ணமாய் நல் ஈவுகள்
நீர் தந்தால் தயவாய்,
எல்லாச் சன்மார்க்கக் குணங்கள்
நிலைக்கும் ஊக்கமாய்.

௪ தேவன்பின் சாயல் தரித்து,
நன்மையில் வர்த்திப்பேன்;
மென்மேலும் உம்மை அறிந்து,
உமக்கொப்பாகுவேன்.

௱௩௰௬ பாட்டு. L. M. **136**

Christ welcomed.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல்.

௧ கர்த்தாவே! வாழ்க! பாவியை
நீர் கைவிடாமல், இத்தனை
தாழ்வாய் என்னண்டை வந்தது,
அதீதமான தயவு.

௨ மா மேன்மையான யேசுவே!
மெய் ஆஸ்தியான உம்மையே
நான் பற்றிக்கொள்ள, என்றைக்கும்
என் நெஞ்சில் தங்கியருளும்.

௩ மெய் ஞானம் தாரும், அறிவில்
என் சுபாவ பெலவீனத்தில்
பலம் உண்டாக்கியருளும்,
தேவன்பின் சுவாலை வளர்க்கும்.

௪ அதால் நான் நித்தம் பூரிப்பாய்
உம்மிலே வாழ்ந்து, நிறைவாய்
பூலோக வாழ்வை வெறுப்பேன்,
கதியாம் உம்மைப் பாடுவேன்.

ராகஎ பாட்டு. 8. 8. 6. **137**

"*Christ is all and in all.*"

கிறிஸ்துவே சகலருக்குள்ளும் சகலமுமாயிருக்கிறார்.
கொலோ. ௩. ௰௧.

௧ ஆ, பாவிகளின் மீட்பரே!
அன்பான யேசுக்கிறிஸ்துவே!
இவ்வேழையேனை நீர்
உம்மில் விளங்கும் இன்பமாய்,
நிறைந்த தேற்றஞ் செய்வோராய்,
அன்பாகத் தேற்றுவீர்.

௨ எல்லாவற்றையும் செய்தவர்,
எத்தீங்கும் நீக்கச் சமர்த்தர்,
என் ஆண்டவர் நீர் தாம்;
என் நம்பிக்கை, என் ரட்சிப்பும்,
என் சீவன், சொஸ்தம், களிப்பும்
உம்மாலேயே உண்டாம்.

௩ நீர் சோதி தந்தால் ஒழிய,
மெய்ஞ்ஞானம் சுத்தம் அடைய
ஏலாதவனுவேன்;
நீர் மீட்புச் செய்தால் அன்றியே,
அச்சீவன், கிரீடம், வாழ்வையே
ஓர் பொழுதுங் காணேன்.

௪ ஆ, சுவாமி! தயை காண்பித்து,
என் புத்திக் கண்ணைத் திறந்து,
நான் என்றும் வாழவே
என் குஷ்டம் நீக்கி, நீதியை
தரித்து, என்னில் ஆவியை
சீவூற்றுண்டாகவே.

௱௩௮ பாட்டு. 8. 7. **138**

"The chastisement of our peace was upon Him."

நமக்குச் சமாதானத்தைத் தருந் தண்டனை அவர்மேல் வந்தது.
ஏசா. ௫௩. ௫.

க யேசுவே! உம்மால் உண்டான
தெய்வ அன்பை என்றைக்கும்
நான் ருசிக்க ஏற்றதான
பாக்கியத்தைத் தந்திடும்.
உம்முடைய ரத்தத்தாலே
பாவம் நீக்கி நிறைவாய்,
உம்முடைய சாவினாலே
சீவன் தாரும் தயவாய்.

உ இந்தத் தயிலம் என்னிலுள்ள
நோவைச் சொஸ்தப்படுத்தும்;
இது என்னில் உண்மையுள்ள
அன்பின் சீரை வளர்க்கும்.
இந்த ரத்தம் என்றும் என்னை,
எந்தக் கேடு மோசமும்
நேரிட்டாலும், தப்பப்பண்ணி
வாழ்வில் தேற சித்திக்கும்.

௩ எனக்கும்மைத் தயவாக
தந்தீர், ஆட்டுக்குட்டியே!
உமக்கென்னைச் சொந்தமாக
நானும் ஒப்புவித்தேனே,
நீர் இப்போது என்னிடத்தில்
வந்து, என்னை ஆண்டிடும்;
பின்பு மோட்சானந்த வாழ்வில்
உம்மண்டைக்குச் சேர்த்திடும்.

௱௩௯ பாட்டு. S. M. 139

"Blessed is he whose transgression is forgiven."

கட்டளை மீறுதல் மன்னிக்கப்பட்டும் பாவம் மறைக்கப்பட்டுமிருக்கிறவனே வாழ்வுடையவன். சங். ௩௨. ௧.

௧ தன் குற்றம் நீங்கலாய்
தேவருள் பெற்றவன்,
கர்த்தாவின் தயையுள்ளோனாய்
என்றென்றும் வாழ்பவன்.

௨ தான் செய்த பாவங்கள்
ஆற்றாத பாரந்தான்;
ஆனால் தன் நடை, குணங்கள்
மன்னிப்பைக் காட்டுமாம்.

௩ குற்றம் மறைத்ததால்,
மா துயரைப் பட்டேன்;
அதை அறிக்கை செய்ததால்,
மன்னிப்பை அடைந்தேன்.

௪ நல்லோர்கள் யாவரும்
கர்த்தாவைச் சேரலாம்;
பாவத்தை விட்ட தீயோரும்
நற்சீரைக் கொள்ளலாம்.

௫ துன்மார்க்கனுக்கையோ!
வேதனை வருமே;
தேவனை நம்புவோனுக்கோ,
மா தயை உண்டாமே.

௬ பத்தர்களே! அன்பாய்
மகிழ்ச்சி கொள்ளுங்கள்;
நல் நெஞ்சில் செம்மையுள்ளோராய்
களித்துக் கூறுங்கள்.

௱சஉ பாட்டு. 7's. **140**

"*Christ the Saviour.*"
கிறிஸ்துநாதரே மீட்பர்.

க காயப்பட்ட மீட்பரே!
வாதைப்பட்ட யேசுவே!
தேவரீரின் பக்கத்தால்
வந்த சலம் ரத்தத்தால்,
பாவதோஷம் பெலனும்
நின்று என்னை ரட்சியும்.

உ தேவரீர் நீர் மாத்திரம்
வேண்டிய அடைக்கலம்;
பிராயச்சித்தம் செய்தவர்,
நீதியையும் தந்தவர்;
புண்ணியம் நிறைந்த நீர்
பாவத்தோஷம் நீக்குவீர்.

ங நான் மகா நிர்ப்பாக்கியன்;
பாவத்தாலே கெட்டவன்;
ஆகையால் என் கர்த்தரே!
உம்மைச் சார்ந்தோனாகவே
தாழ்மையோடே நோக்குவேன்,
என்றும் நம்பிச் சேருவேன்.

ச மீட்பரே! நீர் ரட்சியும்,
நீதி போர்வை தந்திடும்;
சொஸ்தம் செல்வம் கொடுத்து,
பாவக் கறை அழித்து,
அன்பைப் பெலப்படுத்தும்.
நம்பிக்கையும் நிறுத்தும்.

ரு செல்லும் இந்தக் காலத்தில்,
ஆவி விடும் நேரத்தில்,
தீர்ப்பைக் கேட்க நிற்போனாய்,
ஈற்றின் நாளில் தெளிவாய்
உம்மைக் காணும் என்னையே,
காத்துக்கொள்ளும், யேசுவே!

௱சக பாட்டு. P. M. 141

"*I will pardon all their iniquities.*"

அவர்களுடைய எல்லாப் பாவங்களையும் மன்னிப்போம். எரே. ௩௩. ௮.

க தாழ்வில் இருந்து கூப்பிட்டும்,
என் சத்தங் கேட்டன்பாக
என் அழுகை எல்லாத்துக்கும்
செவி கொடுப்பீராக.
கர்த்தாவே! பாவமானதை
நீர் மன்னியாமல் நீதியை
பார்த்தால், ஆர் நிற்கக்கூடும்?

உ மன்னிப்பை எவனுகிலும்
தன் புண்ணியங்களாலே
அடையான்: உம்மை யாவரும்
தாழ்வான மனதாலே
தேடி, நம்பிக்கையுடனே
வந்தால், மா தயவாகவே
மன்னிக்கிறீர், கர்த்தாவே!

௩ நான் யேசுவைக் கண்ணோக்கிறேன்,
என் புண்ணியம் அபத்தம்;
தேவன்பையே நான் நம்புவேன்,
அதற்கு வாக்குத்தத்தம்
மெய்யான தேவ வார்த்தையில்
உண்டாகுமே, என் மனதில்
அதைப் பதிப்பீராக.

௱சஉ பாட்டு. C. M. 142

"*The blood of Jesus Christ cleanseth us from all sin.*"

யேசுக்கிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது. க யோவா. க. எ.

க என் தயவுள்ள யேசுவே!
எல்லாரின் மீட்புக்கும்
நீர் சிந்தின இரத்தமே,
நிறைந்த காரணம்.

உ மன்னிப்புண்டாக்கி, உள்ளத்தை
சீராக்கும்; உம்மையே
நான் பற்றிக்கொள்ளுந் திடனை
அளியுங், கர்த்தரே!

௩ உம்மாலுண்டான நீதியின்
சுத்தங்கி போடுமேன்;
அதால் மாசற்றுச் சுவாமியின்
முன்பாகவே நிற்பேன்.

௪ இங்கென்னைத் தீயோர் கெட்ட சீர்,
துன்மார்க்கம், மோசமும்
சூழ்ந்தாலுஞ், சுவாமிக்கென்னை நீர்
நற்பத்தனுக்கிடும்.

௱௪௩ பாட்டு. P. M. **143**

"Thou hast redeemed me, O Lord God of Truth."

சத்தியதேவனாகிய பராபரனே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர்.

சங். ௩௧. ௫.

க யேசு கர்த்தரே!
தேவரீரையே
என்னை மீட்ட நேசராக
நான் அறிந்த நன்மைக்காக,
உள்ளமே எல்லாம்
துள்ளிப் பூரிப்பாம்.

உ முந்தித் தீமையாய்
நீச மார்க்கமாய்
பேயைப்பற்றி, பிறகாலே
ஆசையோடே போனதாலே,
இப்போ அடியேன்
கசந்தழுவேன்.

௩ என்னிலுள்ளது
தேவரீருக்கு
சாயலாவதே, என் அந்தம்

என்றென் சீவன் பரியந்தம்
உம்மை என்றைக்கும்
நான் பின்பற்றவும்.

ாசச பாட்டு. C. M. **144**

"Leaving us an example that we should follow his steps."

நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி எங்களுக்கு ஒரு திருஷ்டாந்தத்தைக் காட்டினார். க பேது. உ. உக.

க மிகுந்த தாழ்மையானவர்,
மா சாந்த கர்த்தரே!
என்றென்றும் இன்பவாசகர்,
அன்புள்ளவர் நீரே.

உ அன்பால் நிறைந்து, ஏழையாய்
மெய்ப் போதம் பண்ணினீர்;
என் மேல் இரங்கித் தயவாய்
மெய் மார்க்கம் காண்பித்தீர்.

ங பேரின்பஞ் சேரும் பாதையில்
நான் சேரும்படிக்கே,
மகா திஷ்டாந்தமாய் அதில்
போனீர், என் சுவாமியே!

ச நான்தான் போராடி நிலைத்து
செயிக்கச் சீஷனாய்,
நீர் செயப் பாதை காண்பித்து,
வென்றீர் என் கர்த்தராய்.

ரு இதுக்காய்ச் சுவாமி, ஆவலாய்
இவ்வேழை அடியேன்,
தெய்வாவி செய்யும் பெலத்தால்
நிரம்ப வாஞ்சிப்பேன்.

சு இரக்கமான யேசுவே!
என் வேண்டலைக் கேட்பீர்;
நான் வென்று என்றும் நிற்கவே
நீர் ஊக்கம் அருள்வீர்.

௱சரு பாட்டு. 8. 7. **145**

"Let him take up his cross and follow me."

தன் சிலுவையை எடுத்துக்கொண்டு நம்மைப் பின்பற்றக்கடவன்.
மத். ௰சு. உச.

க சிலுவை சுமந்தோனாக
உம்மைப் பற்றி வருவேன்;
ஏழைப் பரதேசியாக
மோட்ச ஸ்தலந் தேடுவேன்.
உற்றார், மேன்மை, ஆஸ்தி, கல்வி,
முன்னோர் சொல்லும் ஞானமும்,
மேன்மை இல்லையென்று சொல்லி
வர, என்னையே இழும்.

உ உமக்கேற்ற பாடுபட்டோன்
நஷ்டப்பட மாட்டானே;
உமக்கென்று சீவன் விட்டோன்
சாகாச் சீவன் பெற்றானே.
உம்மை அப்பா, பிதாவென்று
சொல்லி என்றும் வாழுவேன்;
கஸ்திப்பட்டுஞ், சாவும் வென்று
விண் கிரீடம் தரிப்பேன்.

௩ நெஞ்சமே! உன் மேன்மை எண்ணு,
வருஞ் செல்வம் நோக்கிப்பார்;
மோட்ச சாயல் இங்கே கொண்டு,
உன் சுதந்திரத்தைக் கார்.
கொஞ்சவேளைக்குட் பறந்து,
யேசுவண்டை சேருவேன்;
தேவ தூதரோடே நின்று,
என்றென்றைக்குந் துதிப்பேன்.

௱சசு பாட்டு. L. M. 146

"My sheep hear my voice and follow me."

என் ஆடுகள் என் குரலுக்குச் செவிகொடுக்கின்றன: நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகளும் என்னைப் பின்செல்லுகின்றன. யோவா. ௰. ௨௭.

க தலைவரான கிறிஸ்துவே!
நீர் இட்ட மார்க்கப் பாதையே
ஈனம் நிறைந்த அடியேன்
பின்சென்று உம்மைப் பற்றுவேன்.

௨ நீரே மெய்மார்க்கம் போதித்தீர்,
தப்பற்றோராக நடந்தீர்;
நீர் தெய்வமான வெளிச்சம்;
உம்மால் என் பாதை விளங்கும்.

௩ பின் செல்பவன் உம்மாலேதான்
சற்குணனாக நடப்பான்;
மெய்வழி உம்மைத் தப்பினோர்
வாடாக் கிரீடம் அடையோர்.

௪ ஆ, கர்த்தரே! எச்சோகமும்,
எப்பீடை, பாடும் சொரிந்தும்,
நான் உம்மைச் சாரப் பூர்த்தியாய்,
நீர் ஊக்கம் தாரும் தயவாய்.

௱சஎ பாட்டு. 6. 4. 147

"A good hope through grace."

அனுக்கிரகத்தினால் உத்தம நம்பிக்கை. ௨ தெச. ௨. ௰௬.

க இயேசுக் கிறிஸ்துவே!
என் ஆறுதல், நீரே
என் ரட்சகர்;
நீர் பட்ட சாவினால்
ரட்சிப்படைந்ததால்,
என் நப்பிக்கைக்கெல்லாம்
நீர் காரணர்.

௨ அநேக குறைவும்
எனக்குண்டாயினும்,
நான் நம்புவேன்;
நீர் இட்ட பெலியில்
என் பங்குண்டாகையில்,
நோ சாவிலும் உம்மில்
நான் ஆலிப்பேன்.

௩ நீரே இரத்தத்தால்
வெற்றி சிறந்ததால்,
இவ்வேழையேன்
பேய்க்கூட்டம் மூர்க்கமாய்
பாய்ந்தாலும், வீரமாய்
எதிர்த்துச், சிறப்பாய்
செயங்கொள்வேன்.

௱சஅ பாட்டு. 7's. 148

"*Though He slay me yet will I trust in Him.*"

அவர் என்னைக் கொலைசெய்தாலும், நான் அவர்மேல் நம்பிக்கையா யிருப்பேன். யோபு. ௰௩. ௰௫.

க ஆஸ்தி, சீவனும் எல்லாம்
கர்த்தர் ஈந்த தத்தமாம்;
இந்த ஈவை மீளவும்
எடுத்தாலும், பாக்கியம்;
பாடித் துதி பண்ணுவேன்,
நன்றியோடே பூரிப்பேன்.

௨ கர்த்தர் தயை கொடுத்தார்,
முன்பு தீமை நீக்கினார்;
இப்போ என்னைத் தண்டித்தும்,
தாங்கும் அன்பும், துணையும்
மோசமின்றிச் செய்வாரே,
என்று நம்பிக்கொள்வேனே.

௩ துன்பப் பாரம் வெள்ளமாய்
மோதினாலும், தயவாய்

ஆண்டுகொள்ளுங் கருத்தர்,
யாவற்றிற்குஞ் சமர்த்தர்
என்று சொல்லி, யாவிலும்
நம்பிக்கொள்வேன் என்றைக்கும்.

௱சசகூ பாட்டு. C. M. 149

"God is my salvation, I will trust and not be afraid."

தேவனே என் இரட்சிப்பு, நான் அவரை நம்பிப் பயப்படேன்.
ஏசா. ௰உ. உ.

க கர்த்தாவுக்குட் சந்தோஷமாய்
இரு நிதானனே!
உன்னை மிகுந்த திட்டமாய்
விசாரிப்பாருண்டே.

உ அவர் கொடுத்த வார்த்தையை
நீ நம்புவாயானால்,
நிரப்புவார் உன் நெஞ்சத்தை
மகா சந்தோஷத்தால்.

ஙூ உன் ரட்சகர் உன் வன்மையாய்
இருந்து ஆளுவார்;
உன் வேண்டலுக்குத் தக்கதாய்
பலத்தையே ஈவார்.

ச ஓர்வேளை உன் சரீரக்கண்
அதைக் காணுமற்போம்;
நம்பிக்கையான மனக்கண்
அதைத் தரிசிக்கும்.

ரு மிகுந்த சோதியாகவே
உன்னிற் பிரவேசிப்பார்;
சிறந்த மா தலத்திலே
உன்னை நடத்துவார்.

சூ அவர் செயித்தாராகையால்,
நீயுஞ் செயங்கொள்வாய்;
அவரிடத்தில் அன்பினால்
சிறப்பாய்ப் பூரிப்பாய்.

௧௫௰ பாட்டு. 8. 7. 4. **150**

"Lead me in the way everlasting."

நித்திய வழியிலே என்னை நடத்தும். சங். ௱௩௯. ௨௪.

௧ பாதை காட்டும், மா யேகோவா!
பரதேசியான நான்
பலவீனன், அறிவீனன்,
இவ்வுலோகங் காடுதான்.
வானுகாரம்
தந்து, என்னைப் போஷியும்.

௨ சீவ தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமே;
தீப மேக தம்பங் காட்டும்,
வழியில் நடத்துமே;
வல்ல மீட்பர்,
என்னைத் தாங்கும், யேசுவே!

௩ சாவின் அந்தகாரம் வந்து,
என்னை மூடும் நேரத்தில்,
சாவின்மேலும் வெற்றி தந்து,
என்னைச் சேர்க்கும் மோட்சத்தில்,
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்.

௧௫௧ பாட்டு. 8. 7. 4. **151**

"Set your affections on things above."

மேலானவைகளையே சிந்தித்துக்கொள்ளுங்கள். கொலோ. ௩. ௧.

௧ மோட்ச மண்டலத்திலுள்ள
மாட்சிமை என் ஊதியம்;
கிறிஸ்து என்னும் நேசமுள்ள
ரட்சகர் என் பொக்கிஷம்.
மோட்சலோக
நன்மையே என் ஆறுதல்.

உ மானிடர் மண்ணுஸ்தியாலே
தங்களைத் தேற்றட்டுமேன்;
நான் என் நெஞ்சை யேசுவாலே
தேற்றி விண்ணை நோக்குவேன்.
ஆஸ்திபோகும்,
நீரோ என்றும் நிற்கிறீர்.

ரு கிறிஸ்துவால் எனக்குயர்ந்த
ஆஸ்திகள் உண்டாயிற்று;
விக்கினங்களால் நிறைந்த
லோக ஆஸ்தி எதுக்கு?
கிறிஸ்துநாதர்
என்றுமுள்ள பொக்கிஷம்.

ச அந்த மோட்ச மண்டலத்தில்
நான் என் பங்கடையவே,
நீர் தான் இவ்வனுந்தரத்தில்
நீங்கிடாச் சகாயரே.
நான் என்றைக்கும்
உம்முடன் இருப்பேனே.

௱ருஉ பாட்டு. 7.6. 152

"*Trust in the Lord and do good.*"

கர்த்தரை நம்பியிருந்து நன்மைசெய். சங். ௩எ. ௩.

க கர்த்தர் என் பக்கமாகில்,
ஏன் பயப்படுவேன்;
உபத்திரம் உண்டாகில்,
மன்ருடிக்கொள்ளுவேன்.
அதால் என்மேலே வந்த
பொல்லா வினை எல்லாம்
செயிக்கப்பட்டிருந்த
மாற்ருன் போலாகுமாம்.

உ என் நெஞ்சின் அஸ்திவாரம்
மேலான கர்த்தரே;

அதாலே பத்தர் யாரும்
நிசங்கொள்வார்களே.
அவர் என் சொஸ்தம், சீவன்,
என் பெலனும் எல்லாம்;
நானே மா பெலவீனன்,
ஒன்றுமில்லாதவன்.

௬ என் உள்ளமே களிக்கும்,
துக்கிக்க வேண்டுமோ?
கர்த்தர் என்மேல் உதிக்கும்
பகலோன் அல்லவா?
பரத்தில் வைக்கப்பட்ட
அனந்த பூரிப்பே,
என் ஆவிக்குப் பலத்த
திடன் உண்டாக்குமே.

௱ருரு பாட்டு. L. M. **153**

Rejecting the world and loving Christ.

லோகத்தைத் தள்ளிக் கிறிஸ்துவை நேசித்தல்.

க அழிந்து போகும் செல்விக்கை,
மயக்கமான மகிமை,
சீரற்றதாலே நான் நாடேன்,
என் யேசுவைச் சிநேகிப்பேன்.

உ என் பொன்னும், கதி, செல்வமும்
என்றென்றும் நிற்கும் பொக்கிஷம்;
நான் தேடும் பொருள் அவரே,
நான் வாஞ்சிக்கும் மகிழ்ச்சியே.

௩ பூலோகமும், தன் இச்சையும்,
சதையின் மேன்மை, அழகும்
வடிந்தழிந்து அற்றுப்போம்,
எல்லாம் மண்ணுகக் காண்கிறேம்.

௪ ஆனால் என் நேச ஆண்டவர்,
ஆன்மாவின் சீவரட்சகர்,
என்றென்றுமாக இருப்பார்,
ஓர்போதும் என்னைக் கைவிடார்.

௱௫௪ பாட்டு. 7's. **154**

"I will love thee, O Lord, my strength."

என் பலமாகிய பராபரனே, நான் உம்மை நேசிப்பேன். சங். ௰அ. க.

௧ என் கர்த்தாவே! உம்மைத்தான்
முழு நெஞ்சத்தாலே நான்
வாஞ்சை கொண்டு நித்தமும்,
லோக வாழ்வை குப்பையும்,
நஞ்சுமாக எண்ணுவேன்,
உம்மையே சிநேகிப்பேன்.

௨ தேவரீரில் வாழ்வெல்லாம்
பூர்த்தியாகவே உண்டாம்;
உம்மை வாஞ்சை கொள்வோனாய்,
உண்மையான நேசமாய்
சேர்வோனுக்கு, தேவரீர்
அந்த வாழ்வைக் கொடுப்பீர்.

௩ ஆறுதலும், பூரிப்பும்,
சீவனும், மகிழ்ச்சியும்
உம்மால் தானே என்றைக்கும்
குறைவின்றிக் கிடைக்கும்;
நீரே அன்பின் காரணர்,
நேசமாம் தயாபரர்.

௪ அன்பின் ஊற்றே! தேவரீர்
என்னைப் பார்க்கக் கடவீர்;
தேவ அன்பைச் சிஷ்டித்து,
ருசிபார்க்க அளித்து,
அதால் என்னை முழுதும்
தேவரீர் அண்டைக்கிழும்.

௱௫௫ பாட்டு. C. M. 155

"As Christ also hath loved us and given himself for us," &c.

கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த நைவேத்தியமாகவும், பலியாகவும் ஒப்பித்து நம்மை நேசித்ததுபோல, எபே. ௫. ௨.

க என் ரட்சகர் எல்லாருக்கும்
மகா தயாபரர்;
எக்கீர்த்தி, கனம், துதிக்கும்
மிகுந்த பாத்திரர்.

௨ என் பெற்றோர், வீட்டார், நேசராய்
இருந்தும், யேசுதாம்
யாரையும் பார்க்க ஆழமாய்
இருக்கும் நேசவான்.

௩ நான் வாடாக் கிரீடம் தரிக்க
மா தாழ்மை காட்டினார்;
தேவன்பையே விவரிக்க
எக்கஸ்தியும் பட்டார்.

௪ பிதாவின் சாயல் தரித்தும்,
மகா அன்புடனே
நிஷ்டூர வெட்கச் சாவுக்கும்
அடங்கிப் பட்டாரே.

௫ ஆ, யேசு! இதை நினைத்து,
இத்தாழ்மை அடியேன்
யாவிலும் உம்மை வாஞ்சித்து,
பின்பற்றி நேசிப்பேன்.

௱௫௬ பாட்டு. P. M. 156

"The Lord direct your hearts unto the love of God."

தேவனில் அன்புவைக்கவும், கிறிஸ்துவைப்போலப் பொறுமையாயிருக்கவும் கர்த்தர் உங்கள் இருதயத்தை நடத்தக் கடவர். ௨ தெச. ௩. ௫.

க கர்த்தாவே, என் பிரார்த்தனை
நீர் கேட்டிரக்கமாக,

மேலான தேவ நேசத்தை
என் நெஞ்சில் செய்வீராக.
நீர் நேச மணவாளனே,
என்பேரில் பட்சம் வைத்தீரே,
ஆ! என்னை அன்பாய்ச் சேரும்.

உ சேர்வோம் என்றீர், இவ்வேளையில்
அவ்வாக்கை நிறைவேற்றும்;
நீர் காண்பித்த மா நேசத்தில்
நற்பங்கைத் தந்து தேற்றும்.
அப்போது நித்தம் நித்தமாய்,
தெய்வன்பின் சாயல் பெற்றோனாய்,
நடப்பேன், அன்பின் சுவாமி!

ரு எனக்கும், தேவரீருக்கும்
இனிப் பிரிதல் இல்லை;
நீர் என் பத்தாவும், நேசரும்,
நானும் நீர் மீட்ட பிள்ளை;
ஆ! தேவரீரின் நேசத்தில்
நான் தேற, நீர்தாமே என்னில்
என்றென்றும் வாசம்பண்ணும்.

ருள பாட்டு. S. M. **157**

"Set your heart and your soul to seek the Lord your God."

நீங்கள் உங்கள் தேவனாகிய பராபரனைத் தேடும்படி, உங்கள் இருதயத்தையும், உங்கள் ஆத்துமத்தையும் ஸ்திரப்படுத்துங்கள்.
க நாளா. உஉ. ௰௯.

க ஒப்பற்ற நன்மையே,
நான் உம்மை நேசிப்பேன்;
விடாத வாஞ்சையுடனே
நான் உம்மைத் தேடுவேன்.

உ உமக்குத் தூரமாய்
நான் நிற்கும்போதெல்லாம்,
என் நெஞ்சத்தில் விடாமையாய்
மா சஞ்சலம் உண்டாம்.

௩ அதால் உம்மண்டையில்
நான் சேர்வேன் நித்தமும்,
எக்கஸ்தி நேரிட்டும், உம்மில்
நான் சார்வேன் முழுதும்.

௪ ஆ, அன்பின் கர்த்தரே!
நீர் என்னை நோக்குவீர்;
நீர் தந்த அன்பின் சுவாலையே
மழுங்கக் கைவிடீர்.

௱௫௮ பாட்டு. L. M. 158

"In whom are hid all the treasures of wisdom and knowledge."

ஞானமும் அறிவுமாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கும் கிறிஸ்துவுக்கும். கொலோ. ௨. ௩.

க வாழ்வில் சிறந்த வேந்தரே!
நேசம் நிறைந்த யேசுவே!
இக்கட்டை நீக்கும் தேவரீர்
என் தஞ்சமாயிருக்கிறீர்.

௨ நீர் கொண்டிருக்கும் மகிமை,
இராசரீக ஆளுகை,
சிங்காசனமும், மேன்மையும்,
மாளாமல் என்றும் நிலைக்கும்.

௩ ரூபொப்பில்லாத அழகு,
எல்லார்க்கும் வேண்டும் பூரிப்பு,
நற்செல்வம், பொக்கிஷம் எல்லாம்
எல்லையில்லா உம்மிலுண்டாம்.

௪ என் முழு நெஞ்சத்தாலே ஏன்
நிறைந்த உம்மை வாஞ்சியேன்?
ஆ! வந்து யேசு நிறைவாய்,
என்னை நிரப்பும் நேசமாய்.

௫ நான் இங்கே தங்கும் தினமும்
நல் நம்பிக்கையும், நேசமும்
வேரூன்றும்படி, நீர் தாமே
என் நெஞ்சை ஆளும், யேசுவே!

ாருகூ பாட்டு. 8. 7. **159**

"Herein is love, not that we loved God," &c.

நாம் தேவனிடத்தில் அன்பாயிருக்கிறதினால் அல்ல, அவரே நம்மில் அன்புகூர்ந்து, ௧ யோவா. ௪. ௰.

௧ தேவ அன்பும், மோட்ச வாழ்வும்
பூமியில் வந்தானதே;
பூரிப்போடே வாழ், என் நெஞ்சம்!
அன்பின் ஊற்றைக் கண்டாயே.
யேசுவே! நீர் மா இரக்கம்,
சுத்த அன்பாய்த் தோன்றுவீர்;
மீட்சி தாரும், பாரத் துக்கம்
பட்ட நெஞ்சில் தங்குவீர்.

௨ உமதன்பின் ஆவி தாரும்,
எங்கள் நெஞ்சம் பூரிப்பாய்
உம்மிற் சார, நீரே வாரும்
சுத்தநேச வழியாய்.
பாவ ஆசை எல்லாம் நீக்கி,
எங்களை இரட்சியும்;
விசுவாசத்தைத் துவக்கி,
நிறைவேறச் செய்திடும்.

௩ ஏழைத் தொண்டரை நீர் பாரும்,
நாங்கள் உமதாலயம்;
எங்கள்மேலே கண் கடாட்சம்
வைத்து, தயை தந்திடும்.
என்றும் உம்மைத் தோத்திரித்து,
வானோர்போலச் சேவிப்போம்;
குறையற்ற அன்பைப் பெற்று,
ஒழியாமல் துதிப்போம்.

௪ கறை, குற்றமற்று நாங்கள்
சுத்த சிஷ்டியாகவே;
தேவபத்தி, தேவ சாயல்
பெற்ருேராகத் தோன்றவே;
நாங்கள் மோட்ச கரை ஏறி,
வானோராகும் வரைக்கும்
தேவ சாயலுக்கு மாறி,
தேறும்படி அருளும்.

௱௬௰ பாட்டு. L. M. 160

"Thou knowest that I love Thee."

நான் உம்மில் அன்பாயிருக்கிறதை நீர் அறிந்திருக்கிறீர்.
யோவா. ௨௧. ௰௫.

௧ நான் நித்தம் உம்மை உள்ளத்தால்
சிநேகிப்பேன், என் யேசுவே!
நான் நித்தம் உம்மை வாஞ்சையால்
பின்பற்றுவேன், என் மீட்பரே!

௨ என் நேசரே! ரட்சிப்புக்கு
உதித்த தேவ மைந்தனே!
முன் உம்மைச் சேர்ந்திராதது
எனக்குத் துன்பமாயிற்றே.

௩ உம்மைப் பற்ருமல் வீணுய்
பொல்லாங்கைச் செய்து சுற்றினேன்;
பரத்தை அல்ல, ஆவலாய்
இகத்தைத் தேடிப் பற்றினேன்.

௪ இப்போது நான் வணக்கமாய்
நடப்பதற்குத், தேவரீர்
என்னைத் திருப்பி, தயவாய்
பிதாவிடத்தில் சேர்க்கிறீர்.

௫ இதே இரக்கம்! மா தயை!
அன்புள்ள உம்மைப் போற்றுவேன்;
ஆ, யேசுவே! என் நெஞ்சத்தை
உமக்கன்பாய்ப் படைக்கிறேன்.

௱சுக பாட்டு. C. M. 161

"Rejoice in the Lord."

நீங்கள் கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள். பிலி. ௩. ௨.

க பாதாளம், மண், விண் யாவிலும்
மேலான யேசுவே!
உமக்கு மாந்தர், பேய்களும்
நடுங்குவார்களே.

உ உமது நாமம் பாவிக்கு
நிறைந்த வாழ்வு தான்;
பயத்தை நீக்கி, நன்மைக்கு
தீமையை மாற்றுமாம்.

௩ சிறையுற்றோரின் விலங்கை
இயேசு தகர்ப்பார்;
பெலனில்லோர்க்கும் பெலத்தை
கொடுத்துத் தாங்குவார்.

௪ என் சொஸ்தம், சீவன், சாவிலும்
யேசுவைப்பற்றுவேன்;
அவரின் பேர் எல்லாரிலும்
துதித்துப் போற்றுவேன்.

௱சுஉ பாட்டு. C. M. 162

"And they sung a new song saying, Thou art worthy to open the seals thereof, for Thou wast slain," &c.—

அடிக்கப்பட்டு உமது இரத்தத்தால் கோத்திரத்தார், பாஷைக்காரர், இராச்சியத்தார், தேசத்தாராகிய இவர்கள் அனைவரிலும் நின்று எங்களைத் தேவனிடத்தில் மீட்டுக்கொண்டு, வெளி. ௫. ௯.

க மாளாத எந்தச் செல்வமும்
நிறைந்த யேசுவே!
தெய்வன்பின் மா சமுத்திரம்,
சீவூற்றுந் தான் நீரே.

௨ சிரேஷ்ட தேவ தூதர்கள்
பிரகாச சேனையாய்,
உமக்கு நித்த கீதங்கள்
சொல்வார்கள் தாழ்மையாய்.

௩ சொல்வார்களே; ஆ! ரட்சிப்பை
அடைந்த அடியார்,
இடைவிடாத கீதத்தை
களிப்பாய் ஏன் செய்யார்?

௪ நமக்கிரங்கி ரத்தத்தால்
தீவினையைத் தீர்த்தீர்;
நீர் கொண்டிருந்த நேசத்தால்
விண் வாசல் திறந்தீர்.

௫ புத்திக்கெட்டாதிந்நன்மைக்காய்
நல் மீட்பர், உமக்கே
என் நெஞ்சத்தால் விடாமையாய்
துதிப்பைச் செய்வேனே.

௱௬௩ பாட்டு. S. M. 163

"Serve the Lord with gladness."

மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள். சங். ௱. ௨.

௧ அன்புள்ள நேசரே!
எல்லாருங் கூடுங்கள்;
மகிழ்ச்சியாக கர்த்தாவுக்கே
சங்கீதம் பாடுங்கள்.

௨ கர்த்தாவின் மார்க்கத்தில்
தவிப்பு இல்லையே;
அதே தவிக்கும் நெஞ்சத்தில்
மகிழ்வுண்டாக்குமே.

௩ அதை விட்டோடினோர்
துக்கிக்க நியாயமே;
கர்த்தாவை அன்பாய்ப் பற்றினோர்
களிக்க ஏற்குமே.

௪ விஸ்தார லோகத்தை
விசாரித்தாள்பவர்,
மின், காற்று, மா கடல்களை
நடத்திக்கொள்பவர்.

௫ இவ்வல்ல தேவனே
நமக்கு தந்தையார்;
பிள்ளைகள்போல நம்மையே
பரத்தில் ஏற்றுவார்.

௬ அங்கே மகிழ்ச்சியாய்
அவரில் பூரிப்போம்;
அங்கே அனந்தகாலமாய்
சுத்தோர்கள் ஆகுவோம்.

௭ அங்கே எழும்புமுன்,
நினைக்கும்பொழுதே,
அம்மாட்சிமை இந்நெஞ்சத்துள்
சந்தோஷஞ் செய்யுமே.

௮ இவ்வண்ணமாக நாம்
இவ்வையகத்திலே
மகிழ்ச்சியாகப் பாடலாம்,
கலக்கம் இன்றியே.

௱௬௪ பாட்டு. C. M. **164**

"Lord, lift Thou up the light of thy countenance upon me."

பராபரனே, உமது முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணும். சங். ௪. ௬.

நம்முடைய எல்லா நீரூற்றுகளும் உன்னில் இருக்கின்றன. சங். ௮௭. ௭.

௧ என் களிப்புக்குக் காரணம்,
என் செல்வச் சீவனே;
பகலில் நீர் என் மகிமை,
ராவில் என் சோதியே.

௨ இருட்டிலே நீர் தோன்றினால்,
என் நெஞ்சு பூரிக்கும்;
நீர் காலைவெள்ளி ஆனதால்,
என்னிற் பிரகாசியும்.

௩ தன் தயை யேசு காண்பித்து,
நீ சொந்தமேயென்றால்,
என் ஆத்துமஞ் சந்தோஷித்து,
நிறையும் வாழ்வினால்.

௪ நரகத்துக்குஞ், சாவுக்கும்
அஞ்சாமலிருப்பேன்;
தேவன்பும், விசுவாசமும்
சிறகாய்ப் பறப்பேன்.

௱௬௫ பாட்டு. S. M. 165

"O! magnify the Lord with me, and let us exalt his name together."

என்னோடே யெகோவாவின் மகிமையை விளங்கப்பண்ணுங்கள்;
நாம் ஏகமாய் அவர் நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவோம்
வாருங்கள். சங். ௩௪. ௩.

க வாருங்கள் பத்தரே,
ஒன்றித்துக் கூடுங்கள்;
மா ஓசையான கீதமே
களிப்பாய்ப் பாடுங்கள்.

௨ நெஞ்சுள்ள சஞ்சலம்
நம்பிக்கை ஆகுமாம்;
மெய்வேத சாரம், பத்தியும்
கிலேசம் பண்ணுதாம்.

௩ யெகோவா தஞ்சமே,
என்றைக்கும் பாலிப்பார்;
மரணம் வரும் நாளிலே
மோட்சத்தில் ஏற்றுவார்.

ச அங்குள்ள மீட்பரை
காண்போம்; அச்சாயலில்
மாறி, ஆனந்தச் சுத்தத்தை
அடைவோம் மோட்சத்தில்.

ரு பூலோக வாசியாய்
சஞ்சாரியாயினும்,
நம்பிக்கை நேசவழியாய்
அச்செல்வங் கிடைக்கும்.

சா ஆனந்த இன்பத்தில்
நீராடக், கதியாய்
சியோனின் மலைபோகையில்,
துதிப்போம் களிப்பாய்.

எ வாருங்கள், தோழரே!
இக்கட்டு நேரிட்டும்,
யெகோவா காட்டும் வழியே
மேல் வாழ்வில் முடியும்.

௱சாசா பாட்டு. C. M. 166

"Whom have I in heaven but Thee?"

பரமண்டலத்தில் உம்மையன்றி எனக்கு வேறுயார்? சங். எங. உரு.

க என் தேவனே! என் செல்வமே!
நீர் நித்த மாட்சிமை;
விஸ்தார வையகத்திலே
நீரே என் வாஞ்சனை.

உ இவ்வானமும், இப்பூமியும்
மிகுந்த அற்பமே;
இவைகளில் ஒன்றாகிலும்
உமக்கொப்பில்லையே.

ங உலோக ஆஸ்திகளெல்லாம்
என் சொந்தமாகிலும்,
நீரே என்னில் இராவிட்டால்,
என் நெஞ்சு நோய்ப்படும்.

ச அது நிமித்தம் கர்த்தரே!
உம்மைக் கொடுத்திடும்;
நீர் நிறைவான ஆஸ்தியே,
நீரே சமஸ்தமும்.

௱கூஎ பாட்டு. L. M. 167

"The Lord is my strength, and my song, and is become my salvation."

பராபரனே என் வல்லமை, என் பாட்டு, என் ரட்சிப்புமானுர்.
சங். ௱மஇ. மச.

க என் ஆறுதல், என் கன்மலை,
என் வாழ்வுமான கர்த்தனை
அல்லாமல், விண் மண் யாவுமே
நல்தேற்றஞ் செய்யமாட்டாதே.

உ மேலான செல்வம் அவரால்
உண்டாகுமென்றறிந்ததால்,
அவரிடத்தில் என்றைக்கும்
எனக்கு பூர்த்தி கிடைக்கும்.

ங பிசாசு என்னைச் சபித்தும்,
கர்த்தாவின் அன்பும் தயவும்
கிடைப்பதால், கெலித்தோனுய்
நான் பாடுவேன் சந்தோஷமாய்.

ச மேல் லோக வாழ்வை நினைத்து,
அதின் நற்சாரம் ருசித்து,
கண்ணுர நான் தெரிசிப்பேன்,
அருளினுலே களிப்பேன்.

௱கூஅ பாட்டு. S. M. 168

"Rejoice in the Lord always."

கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷப்படுங்கள். பிலி. ச. ச.

க என் சீவனுகிய
அன்புள்ள கர்த்தரே!
ஆ! தேவரீா விட்டோனுய்
பிழைக்கமாட்டேனே.

உ உமது பெலத்தால்
எல்லாம் உண்டாயிற்று;
நீர் செய்யும் மா இரக்கத்தால்
எல்லாம் நிறைந்தது.

௩ ஆ, உம்மைக் கர்த்தரே!
எப்போதுந் தேடுவேன்;
ஆ, உம்மைநோக்கி, யேசுவே!
நான் என்றுஞ் சிந்திப்பேன்.

ச நீர் இங்கே இருக்கில்,
அதே என் செல்விக்கை;
நீர் இங்கிராத வேளையில்
மிகுந்த அழுகை.

ரு உமது பட்சமே
மிகுந்த களிப்பாம்;
எனக்கும்மாலே தேவனே!
கதி கிடைக்கலாம்.

௱௬௯ பாட்டு. C. M. 169

"He that glorieth, let him glory in the Lord."

மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன். க கொரி. க. ௩௧.

க கர்த்தாவே! நாங்கள் பூமியில்
இருக்கும் நாள், நீரே
நேசத்தைக் காட்டி, எங்களில்
தரித்திருப்பீரே.

உ உம்மோடே பேசி இக்கட்டை
நோவையும் மறப்போம்;
நீர் இங்கேயாகில், துன்பத்தை
இன்பமென்றெண்ணுவோம்.

௩ கர்த்தாவே! என்னில் தங்கியே
சந்தோஷப்படுத்தும்;
என் உள்ளம் என்றும் உமக்கே
இணங்கச் செய்திடும்.

௪ உம்மண்டைக்கென்னை அழைத்தீர்,
கேட்டும்மை நாடுவேன்;
அன்பாய் என்னோடே பேசுவீர்,
அப்போதே களிப்பேன்.

௫ உள்ளளவும் நான் தினமும்
உம்மோடே நடப்பேன்;
பூமியில் நீர் என் செல்வமும்,
பரத்திற் பூரிப்பேன்.

௱எ௰ பாட்டு. S. M. **170**

"I will pour out on them the spirit of grace and supplication."

நான் கிருபைக்கும், விண்ணப்பத்துக்கும் ஏற்ற ஆவியை ஊற்றுவேன். சகரி. ௰௨. ௰.

௧ வேண்டலின் தாகத்தை
என் நெஞ்சில் அருளும்;
பூலோக கெட்ட பாசத்தை
அகற்றி நீக்கிடும்.

௨ பூலோக சிந்தையால்
கலக்கம் அடையேன்;
விண்லோகம் தேவ அன்பினால்
நான் பற்றித் தேடுவேன்.

௩ எனக்குத் தஞ்சமாய்
விரைந்து வந்திடும்;
நான் அலையாதபடியாய்
நிலைக்கப்பண்ணிடும்.

௪ தேவன்பின் பாசத்தால்
கட்டுண்டு என்றைக்கும்;
உம்மை என் முழு நெஞ்சத்தால்
பின்பற்றச் செய்திடும்.

௱எக பாட்டு. L. M. 171

"Ask and it shall be given unto you."

வேண்டிக்கொள்ளுகிற எவனும் வாங்கிக்கொள்ளுகிறான். மத். எ. எ.

க நான் தேவரீரை வாஞ்சையாய்
மன்றாடும்போது, நீர் அன்பாய்
என் வேண்டல் கேட்டிரங்குவீர்,
நிறைந்த திர்ப்த்தி கொடுப்பீர்.

உ இதால் நான் சாகுமட்டுக்கும்
என் ஆவி உம்மைச் சார்ந்திடும்;
என் இச்சைக்கு விரோதிப்பேன்,
கருத்துமாய்ப் போராடுவேன்.

ங இதால் என் பத்தி, ஊக்கமும்,
தெய்வன்பும் நிறைந்திருக்கும்;
இளைத்துப்போம் என் நெஞ்சுக்கு
கசப்பும் இன்பம் ஆவது.

ச இதால் சாத்தானை செயித்து,
கெலித்தோனாக ஆலித்து,
நல் நம்பிக்கை கொண்டிருப்பேன்;
நிறைந்த ரட்சை காணுவேன்.

௱எஉ பாட்டு. P. M. 172

Ephes. 3: 14-21.

எபே. ௩. ௰ச—உக.

க பூலோகம், வானம், யாவிலும்
உண்டாயிருப்பதான
சிறந்த கூட்டத்தாருக்கும்,
அன்புள்ள தந்தையான
அளவில்லாத தயவும்,
முடிவில்லாதிரக்கமும்
நிறைந்த மா கர்த்தாவே!

உ நாம் உம்மை நோக்கி, உம்மண்டை
மிகுந்த தாழ்மையோடே
பணிந்தோம்; முழங்கால்களை
முடக்கிப் பத்தியோடே
செய்யும் விண்ணப்பம் ஏதென்றால்,
நாம் சுத்த தேவ ஆவியால்
பெலன் அடையப்பண்ணும்.

ஙு மெய் விசுவாசம் உள்ளத்தில்
பெலத்துப் போவதாக;
அதாலே கிறிஸ்து எங்களில்
குடியிருப்பதாக.
தேவன்பில் நாங்கள் ஊன்றவும்,
அதின் விசாலம், நீளமும்
அறியவும் நீர் தாரும்.

ச ஆ! எங்கள் சிறு புத்தியை
கடந்து போவதான
இரட்சகரின் நேசத்தை
அறியும் தெளிவான
உணர்வைத் தந்து, நீர் உம்மால்
உண்டாம் சம்பூரணத்தினால்
சபை நிரப்பிக்கொள்ளும்.

ரு நாம் எண்ணி வேண்டல்பண்ணவும்,
மகா அதிகமாக
நமக்குள் நன்மை பூரிக்கும்
பெலத்தின்படியாக
முடிக்கவல்ல தேவனும்,
இரக்கமாம் சகாயரும்
அடியார்க்கு நீர்தாமே.

சா அன்பாக நீர் விசாரிக்கும்
சமஸ்த சபையோரும்,
இயேசுமூலம் என்றைக்கும்
எல்லா யுகங்கள் தோறும்

வணக்கமும், புகழ்ச்சியும்,
கனமும், தோத்திரங்களும்
சொல்வார்களாக, ஆமென்.

௱எ௩ பாட்டு. 7's. 173

Prayer to Christ for mercy.

கிறிஸ்துவை நோக்கி இரக்கத்துக்காக வேண்டுதல்.

க தாழ்ந்த லோகப் பள்ளத்தில்
நான் அலைந்து போகையில்,
செல்வம், கல்வி, மேன்மையும்
நெஞ்சாற்றுதே கொஞ்சமும்.
பாதை எங்கே? மாளுவேன்,
செல்வம் கல்வி, மேன்மை ஏன்?
மீட்சி எங்கே? தேவரீர்
பாரும், ஆ! இரங்குவீர்.

உ இரங்குவீர், ஆ! பாவி நான்
குஷ்டரோகியானவன்;
சிலுவையின் அடியில்
வந்து நின்று பார்க்கையில்,
சீனாய் மலை உச்சியாய்
தேவ நூல் முழக்கமாய்
சாபங் கூற, அடியேன்
ஏங்கி உம்மைப் பற்றுவேன்.

௩ பாவி! கேள், ஆ! இங்கே பார்;
உன்னைத் தேடி வந்ததார்?
மனஸ்தாபத்துடனே
என்னை நம்பு, பாவியே!
யேசுவே! என் நம்பிக்கை
பெலன்கொள்ளச் சிலுவை
தோன்றச் செய்யும், வருவேன்,
கூடும்—வேண்டும்—நம்புகிறேன்.

௱எச பாட்டு. L. M. 174

"I wait for the Lord, my soul doth wait and in his word do I hope."

நான் பராபரனைக் காத்திருக்கிறேன், என் ஆத்துமம் காத்திருக்கின்றது.
சங். ௱௩௰. ௫.

க கர்த்தாவே! ரட்சித்தலுக்காய்
சேர்ந்தென்னை நோக்கியருளும்;
என் புத்திக்கண்களுக்கன்பாய்
நீர் உம்மை வெளிப்படுத்தும்.

உ அவாவுகொண்டும்மண்டையில்
சீரற்றோனாய்ச் சமீபித்தேன்;
வேறொன்றத் தேவசாயலில்,
அருள் மேல் தாகம் வைக்கிறேன்.

௩ சாஷ்டாங்கமாக விழுந்து,
பணிந்துகொள்ளும் எனக்கே
செங்கோலை நீட்டி, தயவு
விளக்கும், அன்பின் கர்த்தரே!

ச இரத்தஞ் சிந்தி மீட்ட நீர்
இவ்வேழையைத் தள்ளாதிரும்;
என் சத்தங் கேட்டிரங்குவீர்,
என் ஆசை நிறைவேற்றிடும்.

௱எரு பாட்டு. C. M. 175

"The meek will He guide in judgment, and the meek will He teach his way."

சாந்தமுள்ளவனை நியாய வழியிலே நடத்துகிறார்; சாந்த முள்ளவர்களுக்குத் தமது நெறியைப் போதிக்கிறார். சங். உ௫. ௯.

க தாழ்ந்தோரைச் சேர்க்கும் ராசாவே!
உம்மண்டை சேர்கிறேன்;
அன்பின் ஊற்றென்னும் உம்மையே
அவாவாய்ப் பார்க்கிறேன்.

௨ நான் உமக்கேற்கும் பாதையில்
நீர் என்னை நடத்தும்;
நீர் போதிப்பித்த உண்மையில்
அன்போடு நிறுத்தும்.

௩ என் சீவனுள்ள மட்டுக்காய்
என் பங்காயிருப்பீர்;
மெய், ஞானம், புத்தி, சோதியாய்
என்னில் பிரகாசிப்பீர்.

௪ ஓர் ஐயமற்றுச் சாவிலும்
நான் உம்மில் வாழவே,
நீர் தாங்கிக்கொண்டு தேற்றிடும்,
சா வென்ற மீட்பரே!

௱எ௬ பாட்டு. L. M. **176**

"Him that cometh unto me, I will in no wise cast out."

என்னிடத்தில் வருபவனை நான் ஒருபொழுதும் தள்ளேன். யோ.௬.௩௭.

௧ கதியாம் யேசுக் கிறிஸ்துவே!
என் ஆத்துமாவின் சீவனே!
உம்மண்டை சேரும் யாருக்கும்
நீர் கோட்டை, தஞ்சம், ஊக்கமும்.

௨ ஈனம் நிறைந்த அடியேன்
மா தேவரீரை வேண்டுகிறேன்;
என்மேல் கடாட்சம் வைத்தோராய்,
என் கேட்டை நீக்கும் தயவாய்.

௩ பொல்லாத லோகம், சாத்தானும்
பாவத்தின் மாயை காண்பிக்கும்;
என் துணையான தேவரீர்!
நான் இவை வெல்லக் கற்பிப்பீர்.

௪ அலைந்த ஆட்டின் மேய்ப்பரே!
அலைந்த அடியேனையே
கடாட்சம் செய்து, தினமும்
சன்மார்க்கன் ஆக்கியருளும்.

௱எஎ பாட்டு. 6. 4. **177**

Prayer to the Saviour.

கிறிஸ்து மீட்பனை வேண்டுதல்.

௧ அருள் நிறைந்தவர்
பூரண ரட்சகர்;
தேவரீரே
செபத்தைக் கேட்கவும்,
தோஷத்தை நீக்கவும்,
உம்மண்டை சேரவும்
அருள்வீரே.

௨ பத்திக்கு ஆவலை,
நெஞ்சுக்குப் பலத்தை
கொடுக்கும் நீர்,
மரித்த யேசுவை
மதிக்கும் எண்ணத்தை
உண்டாக்கும் அனலை
எழுப்புவீர்.

௩ பூமியில் துக்கமும்,
சஞ்சலம் மோதியும்
அதிகமாய்;
இரவிற் பகலும்,
சலிப்பிற் களிப்பும்,
துன்பத்தில் இன்பமும்,
தாரும் அன்பாய்.

௪ மரிக்கும் காலத்தில்
கலக்கம் நேரிடில்,
ஆண்டவரே!
என்னைக் கைதூக்கியும்,
ஆறுதல் புரிந்தும்,
மோட்சத்தில் ஏற்றிடும்
அன்புடனே.

௱௭௮ பாட்டு. C. M. 178

"In his favor is life."

அவர் தயையோ சீவனைத் தரும். சங். ௩௰. ௫.

க கர்த்தாவே! நீர் அளிப்பது
பேரின்ப சாரம்தான்;
நீர் காட்டும் தேவ தயவு
மெய்யான செல்வமாம்.

உ பரத்தின் மன்னா அதிலே
ருசித்துப் பார்க்கிறேன்;
என் நெஞ்சமிர்தம் அதுவே
வேறொன்றும் வாஞ்சியேன்.

௩ அதால் வளர்க்கப்பட்டோனாய்,
மெய் ஞானம், பூரிப்பும்,
ஆனந்தமும் தாராளமாய்,
என் நெஞ்சில் பிறக்கும்.

ச குணம் அடைந்து, அதினால்
துரிச்சை நீங்குவேன்;
அதில் நிறைந்த பலத்தால்
பேரின்பம் அடைவேன்.

௱௭௯ பாட்டு. 7's. 179

Luke 7: 37, 38.

லூக். ௭. ௩௭—௩௮.

க யேசுவண்டை பயமின்றி
வந்து நின்ற மரியாள்
பரிமள தைலம் பூசி,
பாதம் மயிரால் துடைத்தாள்:
அவள் செய்த மேனாயாக,
நானும் ஏழைப் பாவியாய்
வந்து, கண்ணீர் சொரிவாக,
பற்றுவேன் மா தாழ்மையாய்.

உ நாயனே! கடாட்சஞ்செய்ய
என் நிர்ப்பந்தம் நீக்கிடும்;
உம்மிடத்தில் வந்து கேட்க
நான்தானே அபாத்திரன்.
தஞ்சமற்ற கெட்ட பாவி
மீட்சியின்றி அலைந்தேன்;
நயமெங்கே என்று தாவி,
உம்மிடத்திற் கெஞ்சுகிறேன்.

௩ ஏதும் பீடத்தால் விழுந்தும்
உண்ண, எனக்கிடுமே;
ஏக்கம் நீங்கத் தயைசெய்யும்,
நேச பாவ நாசரே!
சிலுவை சுமந்துவந்து,
உம்மையே விடாமையாய்
நோக்கி, நம்பியே பின்சென்று
காத்துக்கொள்வேன் ஆவலாய்.

௱அம பாட்டு. L. M. 180

"I follow after, if that I may apprehend that for which also I am apprehended of Christ Jesus."

எதினிமித்தங் கிறிஸ்து யேசுவினாலே பிடிக்கப்பட்டேனோ, அதையே பிடித்துக்கொள்ளத் தொடருகிறேன். பிலி. ௩. ௰உ.

க உம்மண்டை சார்ந்த ஏழையை
கர்த்தாவே! நோக்கி ஊக்கத்தை
நீர் தந்து, என்னை முழுதும்
திருத்தமாகச் செய்திடும்.

உ என் சித்தம், நெஞ்சு உமக்கு
விரோதமாகி, நன்மைக்கு
கீழ்ப்பட்டிராமல், சுபாவமாய்
அலைந்துபோகும் தீமையாய்.

ங நான் தேவரீரை நேசித்தும்,
என் நெஞ்சத்தாலே பற்றினும்,
அதோடே கூட என்னிலே
மிகுந்த களங்கம் உண்டே.

ச ஆ, ஸ்வாமியே! கடாட்சித்து
நல் ஈவை அன்பாய் அளித்து,
என் கெட்ட இச்சைக்கென்னை நீர்
விலக்கி நீங்கலாக்குவீர்.

ரு நீரே கற்பிக்கும் ஈவினால்
நற்சீர் அடைந்து, அதினால்
மேன்மேலும் தாழ்மை அடியேன்
தெய்வீக சிந்தைக்கொப்பாவேன்.

௱அக பாட்டு. C. M. 181

Divine assistance desired.

தேவாவியின் உதவியை ஆசித்தல்.

க எப்போதழைப்பீர் யேசுவே!
நான் உம்மை நித்தமும்
களிப்பாய்த் தரிசிக்கவே,
தயை ஈந்தருளும்.

உ நீரும் மா சுத்த ஆவியே,
நான் என்றும் அலைவாய்
போகாதபடி, என்னிலே
இறங்கும் நிறைவாய்.

ங எனக்குக் காட்டி வழியை,
கிருபை காண்பிப்பீர்;
போர் செய்யும் ஏற்ற வல்லமை
கொடுக்கக்கடவீர்.

ச கர்த்தாவே, உன்னதத்திலே
இருந்து பாருமேன்;
நற்சாவைத் தாரும், யேசுவே!
உம்முடன் வாழுவேன்.

௱அ௨ பாட்டு. C. M. 182

"*Show me thy ways, O Lord; teach me thy paths.*"

பராபரனே, உம்முடைய நெறிகளை எனக்குத் தெரியக்காட்டும்; உம்முடைய பாதைகளைப் போதித்தருளும். சங். ௨. ௪.

௧ கர்த்தாவே! என்னை வழியில்
சீர்படச் செய்திடும்;
சீயோன் மலைக்குப் போகையில்,
பெலன் தந்தருளும்.

௨ உபாதி, தொல்லை, துன்பமும்
நேரிட்டு வருகில்,
உமது ஆவி தினமும்
ஆள என் நெஞ்சத்தில்.

௩ நான் விட்ட இனத்தாரையும்
வைதீக வழியாய்
நடத்தி, அவர்களையும்
ஈடேற்றும் தயையாய்.

௱அ௩ பாட்டு. C. M. 183

"*Pass the time of your sojourning here in fear.*"

இங்கே தங்குமளவும் உங்கள் காலத்தை பயத்தோடே கழியுங்கள். ௧ பேது. ௧. ௰எ.

௧ உள்ளான தேவ பயமும்,
தீமையை வெறுத்தே
விரோதிக்கிற குணமும்,
என் வாஞ்சையானதே.

௨ ஆங்காரமும் துராசையும்
எழும்பும்போது, நான்
அவை அடக்குங் காரணம்
அன்போடே பயமாம்.

௩ இனி நான் என்றும் உம்மையே
விடாதபடி, நீர்
பிள்ளைக்குத் தரும் பயமே
எனக்குக் கொடுப்பீர்.

௪ நான் உம்மை விடும் நேரத்தில்
அன்பாகக் கண்டியும்;
மெய்த் துக்கத்தை என் மனதில்
எழுப்பியருளும்.

௱அ௪ பாட்டு. 8. 7. 4. **184**

"Create in me a clean heart."

சுத்த இருதயத்தை எனக்குள்ளே சிருட்டித்தருளும். சங். ௫௧. ௰.

௧ யேசுவே! நீர் பிதாவோடும்
என்னை வந்திரட்சியும்;
பரிசுத்த ஆவியோடும்
என்னில் வந்து, என்றைக்கும்
வாசம் பண்ணி,
சீரைத் தந்து காத்திடும்.

௨ ஆத்துமாவுக்கின்பமான
உம்முடைய வார்த்தையை
நம்ப, நீரே ஊக்கமான
நல்ல விசுவாசத்தை
எனக்கீயும்,
தயவுள்ள யேசுவே!

௩ மோட்ச பாதை இன்னதென்று
உம்முடைய வார்த்தையால்
கேட்ட நானே அதிற் சென்று
போவதற்கு, நீர் அன்பால்
என்னை நோக்கி,
ஆவியைக் கடாட்சியும்.

௪ என்னை மீட்ட நீர் முன்னாலே
விண்ணுக்கேறிப் போனீரே;
நானும் உம்மைப் பிறகாலே
சேர வாஞ்சை கொண்டேனே;
ஆ, கர்த்தாவே!
அன்புகூர்ந்து சேர்த்திடும்.

௱அரு பாட்டு. 8. 7. **185**

The First Psalm.

முதலாம் சங்கீதம்.

௧ தீயோர் சொல்வதைக் கேளாமற்
பாவத்துக்கு விலகி,
பரிகாசரைச் சேராமல்
நல்லோரோடே பழகி,
கர்த்தர் தந்த வேதம் நம்பி,
வாஞ்சை வைத்து, அதைத்தான்
தினந்தோறும் ஓதும் ஞானி
என்றும் வாழும் பாக்கியவான்.

௨ நதியோரத்தில் வாடாமல்
நடப்பட்டுவளர்ந்து,
கனி தந்து, உதிராமல்
இலை என்றும் பசந்து,
காற்றைத்தாங்கும் மரம்போல
அசைவின்றி நிற்கிறான்;
அவன் செய்கை யாவும் வாய்க்க
ஆசீர்வாதம் பெறுவான்.

௩ தீயோர் பதர்போல் நில்லாமல்
தீர்ப்பு நாளில் அழிவார்;
நீதிச் சபையிற் சேராமல்
வெட்கி நைந்து அழிவார்.
இப்போ பாவி மகிழ்ந்தாலும்,
பாவபலன் நாசந்தான்;
இங்கே நல்லோன் அழுதாலும்
கர்த்தர் வீட்டில் வாழுவான்

௱அகூ பாட்டு. L. M. 186

"I will draw all men unto me."

எல்லாரையும் நம்மிடம் இழுத்துக்கொள்வோம். யோவா. ௰உ. உஉ.

க ஆ, இயேசுவே! நாம் வானத்தில்
உயர்த்தப்பட்டிருக்கையில்,
எல்லாரையும் நம்மண்டையே
இழுத்துக்கொள்வோமென்றீரே.

உ என் நெஞ்சத்தை இழுக்கையில்,
அது இக்கெட்ட லோகத்தில்
உள்ளானதை அரோசிக்கும்;
ஆனந்த நன்மை வாஞ்சிக்கும்.

ங தராதலத்தில் உம்முடன்
சிலுவையைத் தாங்காதவன்
உம்மோடு விண்ணில் வாழ்ந்திரான்;
சகிப்பவன் சந்தோஷிப்பான்.

ச மகா தலத்தில் தேவரீர்
என் வாசஸ்தலம் விதித்தீர்;
உம்மோடே என்றும் வாழவே
ஆ! என்னை அங்கே சேர்க்கவே.

௱அஎ பாட்டு. 8. 7. 187

"Strive to enter in at the straight gate."

ஒடுக்கமான வாசல்வழியாய்ப் பிரவேசிக்க மிகவும் பிரயாசப்படுங்கள். லூக். ௰ங. உச.

க தேவன் ஈயும் தயை தேட
நற் போராட்டம் பண்ணுவாய்;
ஆவி பாரமற்று ஏற
பந்தயத்தைப் பெறுவாய்.

உ மோட்ச வாசல் மா இடுக்கம்,
தாழ்மையாகி உட்படு;
சீவ மார்க்கமே நெருக்கம்,
லோக நேசத்தை விடு.

௩ நல்ல சேவகத்தைப் பண்ணி,
ராச்சியத்தை நோக்குவாய்;
பேய் எதிர்த்தால் பயமின்றி
நின்று, ஏகிக்கொள்ளுவாய்.

௪ வேண்டுதலினால் போராடி,
யேசுக்கிறிஸ்தின் தயவு
காணுமட்டும் நீ மன்றாடி,
ஆவலாகக் கூப்பிடு.

௫ கர்த்தர் உன்னைத் தயவோடே
ஏற்றுக்கொண்ட பிறகு,
பாவம் உன்னிலே வேரோடே
செத்ததென்றெண்ணிரு.

௬ தப்பும்படியாக ஓடு,
ஆத்துமாவே! தீவிரி;
பாரத்தை இறக்கிப்போடு,
தெய்வ சொல்லைக் கவனி.

௱அஅ பாட்டு. 7's. 188

Prayer for grace to resist spiritual enemies.

ஆவிக்குரிய சத்துருக்களை எதிர்த்துநிற்குங் கிருபையை வேண்டுதல்.

௧ ஏழைப் பாவியான நான்
கெட்ட சீர் உள்ளானவன்;
சென்ம ஆசை முழுதும்
எந்தக் கேடும் சார்ந்திடும்.
ஆ, கர்த்தாவே! தேவரீர்
என்னைச் சொஸ்தம் ஆக்குவீர்.

௨ ஆவலாக என்றைக்கும்
சாத்தான் என்னை ஆசிக்கும்;
சூட்சி செய்யும் மாற்றானாய்
நின்று பார்க்கும் வேகமாய்,
ஆ, கர்த்தாவே! அதுக்கே
தப்பக் கண்ணைத் தாருமே.

௩ லோகத்தின் துன்மார்க்கமும்
என்றும் என்னை எதிர்க்கும்;
ஞான தீப சுவாலையை
நூக்க வைக்கும் கண்ணியை
நீக்க, ஆ! என் தேவரீர்
சோதியாகத் தோன்றுவீர்.

௱அகூ பாட்டு. P. M. 189

"Fight the good fight of faith, lay hold on eternal life."

விசுவாசத்தின் நற்போராட்டம்பண்ணு, நித்திய சீவனைப் பிடித்துக் கொள். க தீமோ. சு. ௰உ.

க என் யேசுவே! என் சத்தத்தை
கேட்டன்பாய் என்னைப் பாரும்;
மெய் விசுவாசப் பத்தியை
பொழிந்து வந்து காரும்.
மெய்ப் பத்தனாக உம்மில்தான்
நிலைத்து, உண்மையாக நான்
நன்றாய்ப் பின்செல்வேனாக.

உ போராட ஊக்கமற்றோனை
நீர் பார்த்து, ஊக்கம் தந்து,
என்னால் ஆகாத வெற்றியை
கற்பிக்கக் கிட்டிவந்து,
உம்மாலே சோதனையிலே
விழாமல் நிற்க, ஏழைக்கே
ஒத்தாசை செய்வீராக.

௩ என் வாழ்வு, தாழ்வு, யாவிலும்
என் நெஞ்சை உம்மை விட்டு
பிரிக்கவே ஒட்டாதேயும்;
பொற் கிரீடத்தைத் தரித்து,
உம்மோடே வாழ என்றைக்கும்,
இப்போதிறங்கி முழுதும்
நீர் ரட்சியும், நீர் காரும்.

ஈகூ௰ பாட்டு. 8. 8. 6. **190**

"We wrestle not against flesh and blood, but against principalities and powers, &c.

மாமிசத்தோடும் இரத்தத்தோடுமல்ல, ஆகாயமண்டலத்திலுள்ள,—
எபே. ௬. ௰௨.

க கர்த்தாவே! உம்மை நம்பினேன்,
நீர் என் அடைக்கலம் என்றேன்,
அன்பான தேவரீர்
என்னண்டை வந்திவ்வேளையில்
சகாயந் தந்து, ஆபத்தில்
ரட்சிப்பைக் கற்பிப்பீர்.

உ எத்திசை நான் திரும்பினும்,
எக்கிர்த்தியத்தைப் புரிந்தும்,
பிசாசாம் என் மாற்றான்
உபாயம் பண்ணித் திரிந்து,
ஓர் சிங்கம்போலக் கெர்ச்சித்து,
விழுங்கப்பார்க்கிறான்.

௩ ஒத்தாசை நீர் செய்யாவிட்டால்,
தீதால் நிறைந்த லோகத்தால்
என் நெஞ்சு ஒருங்கும்;
நான்தான் தரிக்கும் சுபாவமும்,
அதின் சீர்கெட்ட ஆசையும்,
என் மோசம் பெருக்கும்.

ச என் கேடகம், என் கன்மலை,
என் ஊக்கம், சீவன், நம்பிக்கை,
ரட்சிக்கும் கர்த்தரே!
நான் இந்தப் போரில் நிற்கவும்,
போராட்டம்பண்ணி வெல்லவும்
ஒத்தாசை செய்வீரே.

௱கூக பாட்டு. 8. 7. **191**

"They were strangers and pilgrims upon earth."

பூமியிலே பரதேசிகளும் யாத்திரைக்காரருமாயிருந்தார்கள்.
எபிரே. ௰க. ௰௩.

க பரதேசியாய் நடக்க
புறப்பட்ட தினமே,
ஆசீர்வாதமுள்ளதாக
எண்ணிக்கொள், என் மனமே!

உ சுவிசேஷஞ் சொன்ன தூதன்
நீண்ட தயையுள்ளவன்;
இல்லாவிட்டாற் படுசூதன்
மோசத்தில் விழுத்துவான்.

௩ உற்றார், பெற்றார், தேசம்விட்டு,
கதியாய் நான் ஓடுவேன்;
பின் பாராமல் எட்டிமுந்தி
நித்ய சீவன் பற்றுவேன்.

ச கண்ணீர் இன்பமாக மாற
பயமின்றி வெல்லலாம்;
ஆசாபாசம் யாவும் போக
தேவ சாயல் பெறலாம்.

௱கூஉ பாட்டு. P. M. **192**

"Be thou faithful unto death, and I will give thee a crown of life."

மரணபரியந்தம் நீ உண்மையாயிரு; அப்பொழுது நாம் சீவ கிரீடத்தை உனக்குத் தருவோம். வெளிப்படுத்தல். உ. ௰.

க கர்த்தாவுக்குண்மையாயிரு,
நீ நித்தம் பாவமான
எல்லாத்துக்கும் விரோதித்து,
அவருக்கேற்றதான
நல் எண்ணம், வாக்கு, கிர்த்தியம்
காண்பிப்பதால், மெய்ப்பாக்கியம்
நிச்சயமாய் உண்டாகும்.

உ கர்த்தாவுக்குண்மையாயிரு,
அவரின் தயை அன்பும்
அஞ்ஞான மார்க்கத்தாருக்கு
உன் உண்மையால் விளங்கும்.
பகைஞரும் கீழ்ப்படிந்து
இயேசுவை, ஆராதித்து
மா ரட்சிப்பைக் காண்பார்கள்.

௩ கர்த்தாவுக்குண்மையாயிரு,
நீ சாகும் நாள்மட்டுக்கு
ஓய்வின்றியே பரத்துக்கு
உன் கால் நேராய் நடத்து.
கேடான சிந்தை பேய்களை
வென்றோர்களே மேல் கிரீடத்தை
அணிந்துகொள்ளுவார்கள்.

௱௯௩ பாட்டு. 8.7.4. **193**

"The God of peace shall bruise Satan under your feet shortly."

சமாதானத்தின் தேவன் சீக்கிரத்தில் உங்கள் கால்களின்கீழே சாத்தானை நசுக்குவார். உரோ. ௰௬. ௨௰.

க யேசு கர்த்தரே, பிசாசை
எங்கள் கால்களின் கீழாய்
நீர் நசுக்கி, உம்முடைய
ஆட்டுக்கூட்டத்துக்கன்பாய்
ஊக்கம் தந்து
ஆறுதலைச் செய்திரும்.

உ நல்ல பாதையில் நடக்க
அன்பாய் எங்களை நீரே
கைகொடுத்தணைத்துக்கொள்ள
கண்கடாட்சஞ் செய்வீரே.
எந்த மோசம்
தோன்றினாலும், ரட்சியும்.

௩ அன்பினாலே ஏவப்பட்டு
உம்மைப் பற்றிக்கொள்ளவும்,
உமதர்வியின் பலத்தை
பெற்று என்றும் நிற்கவும்,
நீர் இரக்கம்
காட்டிக்கொண்டு காத்திடும்.

௪ அதினாலே எங்கள் நெஞ்சும்
எங்கள் வாயும் நித்தமே
உமக்கேற்ற வாழ்த்தல் சொல்லும்,
உம்மைப் பாடும், யேசுவே!
அதே எங்கும்
தோன்றும்படி கற்பியும்.

૧௯௪ பாட்டு. C. M. 194

"And they overcame him by the blood of the Lamb, and by the word of their testimony."

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வாக்கியத்தினாலும் அவனை மேற்கொண்டார்கள். வெளி. ௰௨. ௰௧.

௧ இக்கட்டும் சாவும் யேசுவால்
செயிக்கப்பட்டதே;
நமக்கு அந்தச் செயத்தால்
ரட்சிப்புண்டாகுமே.

௨ பிசாசு நம்மை வாதிப்பான்
என்றேங்கியாயினும்,
உண்டாகும் நடுக்கமெல்லாம்
அதாலே நீங்கிடும்.

௩ செயித்த அவர் நம்மிலும்
மென்மேலும் செயிப்பார்;
தம்மண்டை சேர்ந்த யாரையும்
சந்தோஷமாய்க் காப்பார்.

௪ பிசாசின் விஷக் கண்ணிக்கும்
நாம் பயமாயிரோம்;
இயேசுவால் எத்தீமைக்கும்
நாம் தப்பி வெல்லுவோம்.

௱௯௫ பாட்டு. L. M. **195**

"To him that overcometh will I grant to sit with me in my throne even as I overcame," &c.

நான் செயம்பெற்றவனாய், என் பிதாவோடே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறபிரகாரம்,—வெளி. ௩. ௨௧.

க செயித்த கர்த்தர் யேசுதாம்,
அவர் அடைந்த வாழ்வெல்லாம்,
சாகாத சீவன், பூரிப்பும்,
நமக்கென்றைக்கும் கிடைக்கும்.

௨ எப்பயம் நோவும் யேசுவால்
முற்றுக நீங்கிக்கொள்வதால்,
பயத்தை விட்டகற்றுவோம்,
சந்தோஷமாய்ப் போராடுவோம்.

௩ சாமட்டும் மெய்யில் நின்றனன்
போராட்டம்பண்ணி வென்றவன்,
வானோரின் சங்கஞ் சேருவான்,
தன் மீட்பரோடே வாழுவான்.

௪ வெற்றி சிறந்த தேவரீர்
நாம் வெல்லப் பாதை காண்பித்தீர்;
நீர் வென்றவண்ணம் நாங்களும்
வென்றேறத் தயை அருளும்.

௱௯௬ பாட்டு. 8. 7. 4. **196**

"There shall be no more death, neither sorrow, nor crying."

இனிமரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை. வெளி. ௨௧. ௪.

க கொஞ்ச நாளாய்ப் பாடுபட்ட
பின்பு மோட்ச வாழ்விலே,
துன்பம் நோவு யாவும் அற
மேன்மையோடிருப்பேனே.
நெல் விளைந்த
பின் அறுப்புண்டாகுமே.

௨ மோட்ச வாழ்வு இங்கிராது,
அங்கேதான் இருக்குமே;
இங்கே துன்பம் நீங்கிடாது,
அங்குண்டாகும் இன்பமே
அங்கே என்றும்
கர்த்தனை நான் காணுவேன்.

௩ ஆதலால் என் நோவும் சாவும்
நான் சகிப்பேனுகவே;
யேசுதாமே துன்பம் யாவும்
அன்பினுற் சகித்தாரே.
அங்கென்றைக்கும்
கிறிஸ்துவுடன் தங்குவேன்.

௱கூள பாட்டு. 8.7.7. **197**

"Having a desire to depart and be with Christ which is far better."

பிரிந்து கிறிஸ்துவினிடத்தில் இருக்கும்படி மிகவும் விரும்புகிறேன்; இதுவே அதிக நலம். பிலி. க. ௨௩.

௧ மண்ணுலான இந்தத் தேகம்
மண்ணுக்கே திரும்பவும்
கொண்டுபோகும் ஏற்ற காலம்
சேர்வதே என் விருப்பம்,
தேகம் விட்டந்நேரமே
உம்மைக் காண்பேன், யேசுவே!

௨ பாடுகள் எல்லாம் முடிந்து
கண்ணீர் ஓட ஒழியும்;
பாவத் தேகத்தால் நெரிந்த
ஆவி விட்டுப் பறக்கும்.
தேகம்விட்டந்நேரமே
உம்மைக் காண்பேன், யேசுவே!

௩ காவல் வீடாம் இந்தக் கூடு
விட்ட அந்த நிமிஷம்
செல்வங்கள் பொழிந்த வீடு
சேர்வதே, ஆ! பாக்கியம்;
சேரும் போதந்நேரமே
உம்மைக் காண்பேன், யேசுவே!

௪ மோட்ச மண்டலத்திலுள்ள
சேனையோடே இருப்பேன்;
என்றும் நிற்கும் மேன்மையுள்ள
இன்ப வாசகனாவேன்
ஆகும்போது யேசுவே,
கீதம் சொல்வேன் என்றுமே.

௱௯அ பாட்டு. L. M. 198

"At Thy right hand are pleasures for evermore."

நித்தியமான பேரின்பம் உமது வலப்பாரிசத்தில் உண்டு.
சங். ௰௬. ௰௧.

௧ மரணத்தாலே செல்வமும்
அளவில்லாத மேன்மையும்
எனக்குண்டாவதாலே நான்
மரிக்கும்போதே மோட்சவான்.

௨ அப்போது சேர்ந்த ஆத்துமம்
தூதர்களோடே பாக்கியம்
நிறைந்த பரதீசிலே
களிக்கும் என்றும், கர்த்தரே.

௩ அங்கே சேர்ந்தோரின் பாக்கியம்
மா உறுதி, மா பத்திரம்;
பரத்தின் நன்மை என்றைக்கும்
இருக்கும் இன்பந் தந்திடும்.

௪ விரும்பப்பட்ட சீவனே,
என் ஆவி நாடுஞ் செல்வமே,
உம்மால் எப்போதும் பூரிப்பேன்,
எப்போது அங்கே சேருவேன்?

௱கூகூ பாட்டு. P. M. 199

"We shall be ever with the Lord."

நாம் சதாகாலமுங் கர்த்தரோடே இருப்போம். ௧ தெச. ௪. ௰எ.

க என் சீவனே என் நெஞ்சத்தை
எப்போது பூர்த்தியாலே
நிரப்பி மோட்சானந்தத்தை
எப்போது அன்பினாலே
கொடுப்பீர்? அதைக் காணவும்,
பரத்தின் நன்மை சேரவும்,
நான் ஏங்குகிறேன் கர்த்தாவே.

உ நீர் என்னிலும் நான் உம்மிலும்
என்றென்றும் வாசம்பண்ண
சம்பந்தமாக்கி இணைக்கும்
நல் நேரத்தை நான் காண
அவாவுகொண்டிருக்கிறேன்,
அதற்கும் எதிர்பார்க்கிறேன்,
மகா அன்புள்ள சுவாமி!

ஙு எப்போது என்னை உம்மண்டை
சேர்ப்பீர் என் ஆசையாக
தவித்துக்கொண்டிவ்வேழையை
சந்தோஷிப்பிப்பீராக.
வெளிப்படும், ஆ! யேசுவே,
பூலோகம் விட்டு உம்மோடே
இருப்பது என் வாஞ்சை.

ச தீவர்த்தியை நான் சோடித்தேன்,
உம்மைச் சந்திக்க வர
அதைப் பிடித்திருக்கிறேன்
இதோ குறைச்சல் அற,
தேவாவி தந்த எண்ணெயால்
நிரப்பப்பட்டுப்போனதால்
துலக்கச் சுவாலைகொள்ளும்.

உ௱ பாட்டு. 7.6.7. 200

"I desire to depart and be with Christ."

பிரிந்து கிறிஸ்துவினிடத்தில் இருக்கும்படி மிகவும் விரும்புகிறேன்.
பிலி ௧. ௨௩.

௧ நெஞ்சமே, விழித்திரு,
பரத்தைத் தேடிவா;
கெட்டழிந்து போவது
பேரின்பந் தருமா?
வெள்ளி, பூமி, சந்திரன்,
சூரியனும் அழிய;
நெஞ்சமே களிப்புடன்
பரத்தில் நீ பற.

௨ நீர் ஆழத்தை, தீ ஆதித்தன்
தேடும் இயல்பாய்;
சிட்டி யாரும் பரத்திற்
கர்த்தாவைப் பணிவாய்
தேடும்போல், ஆ! நெஞ்சமே,
மீட்பனை நீ தேடினுல்
முத்தியாகும் உனக்கே
கர்த்தாவின் அருளால்.

௩ தூதரோடிராசாவாய்
இயேசு வருகில்,
உன்னைப் புதுச் சிட்டியாய்
சேர்ப்பாரே பரத்தில்.
துன்பம், துக்கம், பாவமும்
விட்டொழிந்து போவதே;
சுத்தம், செல்வம், மோட்சமும்
உன் சொந்தமாகுமே.

உ௱க பாட்டு. P. M. 201

"In thy presence is fulness of joy; at thy right hand, there are pleasures for evermore."

உமது சமுகத்தில் பூரண ஆனந்தம் இருக்கின்றது; நித்தியமான பேரின்பம் உமது வலப்பாரிசத்திலுண்டு. சங். ௰௬. ௰௧.

க சந்தோஷங் கொள், என் ஆவியே,
மாசற்று என்றென்றைக்கும்
அனந்த கர்த்தருடனே
ஆனந்தமாய்ப் பிழைக்கும்,
அனந்தமில்லாக் காலந்தான்
சமீபமாயிருக்குமாம்;
நீ தூக்கங்கொள்வதென்ன?

உ மா மேன்மையான கிரீடத்தை
அப்போ தரித்துக்கொள்வேன்;
வாழ்வால் நிறைந்து யேசுவை
கண்ணார நானுங் காண்பேன்.
என் மீட்பருக்கு என்றைக்கும்
துதியும் தோத்திரங்களும்
அப்போதென்னால் உண்டாகும்.

௩ எல்லா வானோர்களோடேயும்
நான் அவரைக் கொண்டாடும்
அக்காலமோ எப்போ வரும்?
என் ஆவி அதை நாடும்.
விருப்பம் மா பெரியது,
இங்கே தவிக்கும் எனக்கு
அதின்மேல் வாஞ்சையுண்டு.

ச ஆகில் நான் இன்னுங் கொஞ்சநாள்
இம்மண்ணிலே தரிக்க
உமக்குச் சித்தமேயானால்,
நான் உம்மைத் தரிசிக்க

ஆயத்தம் பண்ணும்படிக்காய்
நீர்தாமே, கர்த்தரே, அன்பாய்
என்னை எழுப்பிக்கொள்ளும்.

உ௱உ பாட்டு. L. M. 202

"And the angels stood round about the throne."

தேவதூதர் யாவரும் சிங்காசனத்தையும்,—வெளி. எ. ௰க.

க பிதாவின் வலப்பக்கமாய்
குமாரன் வீற்றிருக்கிறார்;
பரத்தின் சேனை ஓசையாய்
ஆரம்பத்தோடே துதிப்பார்.

உ தூதர்கள் சுத்தோர் யாவரும்
மா கோடாகோடி லக்கமாய்
சிங்காசனத்தைச் சுற்றிலும்
வணங்குவார்கள் பணிவாய்.

௩ கர்த்தாவே, நானும் மோட்சத்தில்
சென்றும்மைக் கண்டு களிப்பேன்,
எப்போது வந்து சோதியில்
என்றைக்கும் உம்மைத் துதிப்பேன்?

ச அச்சோதி சாயல் செல்வமும்
அடைந்திருந்து பாடுவேன்;
பேரின்ப வாழ்வில் என்றைக்கும்
களிப்போடே வணங்குவேன்.

ரு நான் சஞ்சரிக்கும் லோகத்தில்
தியானம் ஆசை, இதுவே;
பின்வந்தும்மோடே முத்தியில்
இருக்கச்செய்யும், யேசுவே.

உ௱௩ பாட்டு. C. M. **203**

"I will behold thy face in righteousness; I shall be satisfied when I awake with thy likeness."

நானோ நீதியோடே உமது முகத்தைத் தரிசிப்பேன்; நான் உமது சாயலையுடையவனாக விழிக்கும்பொழுது திருத்தி அடைவேன். சங். ௰எ. ௰ரு.

க சாவுக்கநேகர் பயந்தும்
நான் பயமாயிரேன்;
ரட்சிப்பின் மா அடைக்கலம்
புகுந்து ஆறுவேன்.

உ என் யேசுவே என் சீவன் நீர்,
என் நம்பிக்கை எல்லாம்;
என் சாவில் என்னைக் கைவிடீர்,
நான் வெல்லச் செய்வீராம்.

௩ சாவின் மா வெள்ளங் கடந்து
உம்மண்டை சேர்ந்தோனாய்,
ஆசித்த ஆறல் அடைந்து,
வாழ்வேன் ஆனந்தமாய்.

௪ இக்கட்டு, பேய், சாவும் உம்மால்
முற்றாக நீங்கிடும்;
கண்ணார அன்பின் காட்சியால்
என் நெஞ்சு பூரிக்கும்.

ரு பேரின்ப ஆற்றிற் குடித்து
ஆருட்டம் நீங்குவேன்;
சுத்தாங்காமிர்தம் ருசித்து
கேடற்று ஆலிப்பேன்.

சு நீர் இன்பமென்று தழுவி,
என் ஆவி என்றைக்கும்
சிறந்து வாழ்ந்து வழுத்தி,
உம்மாலே நிரம்பும்.

உ௱௪ பாட்டு. 7's. **204**

"Who are these arrayed in white robes and whence came they?"

வெள்ளங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யாவர்? எங்கேயிருந்து வந்தார்கள். வெளி. எ. ௰௩.

க வெள்ளை அங்கி தரித்து
சுடர் ஒளியுள்ளோர் ஆர்?
தேவனை ஆராதித்து
பூரிப்போர் களிப்போர் ஆர்?
சிலுவையே எடுத்து,
யேசுவின் நிமித்தமே
யுத்தம்பண்ணிப் பொறுத்து
நின்று வெற்றிகொண்டோரே.

உ மா துன்பத்தில் இருந்து
வந்து விசுவாசத்தால்
தேவநீதி அணிந்து
சுத்தமானோராதலால்
ஓய்வில்லாமற் கர்த்தனை
கிட்டி நின்று சேவிப்பார்;
கர்த்தர் பார்த்துச் சுத்தனை
சேர்ந்து ஆசீர்வதிப்பார்.

௩ இப்போ செயங்கொண்டோராய்
மேலே சோதனைப்படார்;
தீமை நீங்கிச் சுத்தோராய்
தாகம் பசி அறியார்.
மத்தியான உட்டணம்
இனிப்படமாட்டாதே;
பூர்த்திகொண்ட பாக்கியம்
தேறி ஓங்கும் நித்தமே.

௪ தேவ ஆட்டுக்குட்டியும்
யாவரையும் போஷிப்பார்;

சீவ மரக்கனியும்
சீவ நீரும் அளிப்பார்.
துக்கந் துன்பம் அழித்து
குறை யாவும் நீக்குவார்.
கண்ணீரையுந் துடைத்து
அன்பினால் நிரப்புவார்.

உ௱௫ பாட்டு. C. M. **205**

"*And I saw a new heaven and a new earth,*" *&c.*

பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையுங் கண்டேன்.—
வெளிப்படுத்தல். உ௧. அதிகாரம்.

௧ யெருசலேம், என் ஆலயம்
ஆசித்த வீடிதே;
நான் அதைக் கண்டு பாக்கியம்
கிடைக்கும் பொழுதே,

௨ பொற் தளம் வைத்த வீதியில்
உலாவி வருவேன்;
பளிங்காய்த் தோன்றும் தலத்தில்
நின்று வணங்குவேன்.

௩ சபை விடாத கூட்டமாய்
நிற்கும் அம்மோட்சத்தார்,
யேசுவைப் போற்றிக் களிப்பாய்
ஓய்வின்றிப் பாடுவார்.

௪ நானும் அங்குள்ள கூட்டத்தில்
சேர்ந்தும்மைக் காணவே
வாஞ்சித்து, லோக துன்பத்தில்
களிப்பேன், யேசுவே.

௫ யெருசலேம் என் ஆலயம்,
என் செல்வம், வாழுவேன்
நான் ஆவலித்தடைக்கலம்
எப்போ கண்டடைவேன்?

உ௱௬ பாட்டு. C. M. **206**

"Thou hast been our dwelling place in all generations."

தலைமுறை தலைமுறையாக நீரே எங்களுக்குப் புகலிடம். சங். ௯௰. ௧.

௧ கர்த்தாவே, அடியாருக்கும்
அடைக்கலமானீர்;
சகாயஞ் செய்யுந் தஞ்சமும்
என்றைக்கும் பாலிப்பீர்.

௨ நாங்கள் உமது நிழலால்
மகிழ்ச்சி அடைவோம்;
உமது கையை நீட்டினால்
அஞ்சாமல் நடப்போம்.

௩ மலைகள் தோன்று முன்னமே
அநாதி காலமும்
யெகோவாவாயிருந்தீரே;
இருப்பீர் என்றைக்கும்.

௪ உமக்காயிரம் வருஷம்
ஓர் நாளுக்கொக்குமே;
ஓர் யுகமும் ராச்சாமமும்
கடவுளுக்கொன்றே.

௫ சாவுக்குரிய மானிடர்
நிலைக்கவேமாட்டார்;
உலர்ந்த பூவைப்போலவர்
ஒழிந்துபோகிறார்.

௬ கர்த்தாவே, அடியாருக்கும்
அடைக்கலமானீர்;
சகாயஞ் செய்யுந் தஞ்சமும்
என்றைக்கும் பாலிப்பீர்.

உ௱எ பாட்டு. L. M. 207

Prayer for support in death.

மரணநேரத்தில் தன்னை ஆதரிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளல்.

க ஆ! யேசுவே, இப்பள்ளத்தை
நான் விடும்போதென் வாதையை
குறுக்கிப் பேயின் சூதையும்
விலகப்பண்ணியருளும்.

உ சாவுக்குட் போகும் வேளையில்,
என் ஆவியை உம்மண்டையில்
நீர் சேர்த்துத் தீர்வைமட்டுக்கும்
இளைப்பு ஆறச் செய்திடும்.

௩ நடுக்கமான அந்த நாள்
நடுக்கமற்றுக் கிறிஸ்துவால்
எழுந்திருந்து பூரிப்பாய்
நான் நிற்கத் தாரும் தயவாய்.

ச அவ்வண்ணமாகும்படிக்கு
இப்போதும் தயை அளித்து,
நான் செய்த பாவம் யாவுக்கும்
மன்னிப்புண்டாகக் கற்பியும்.

ரு முடியுமட்டும் பொறுப்பாய்
நான் காத்திருந்து அன்புமாய்
தரிக்க, நீர் என் நெஞ்சிலே
திடத்தைத் தாரும் யேசுவே!

உ௱அ பாட்டு. S. M. 208

"For me to die is gain."

நான் மரிப்பது லாபம். பிலி. க. உக.

க என் சீவன் கிறிஸ்துவே,
அதாலே எனக்கு
என் சா ஆதாயமாகுமே;
நெஞ்சே மகிழ்ந்திரு.

உ நான் யேசு வசமாய்
சேர்ந்தென்றும் வாழவே,
மகா மகிழ்ச்சியுள்ளோனுய்
பிரிந்து போவேனே.

௩ சாவுக்குள்ளான நான்
என் நோவு முடியும்
மாளாத சீவன் யேசுவால்
அப்போதே கிடைக்கும்.

உ௱க௯ பாட்டு. 8.7.7. **209**

"Willing rather to be absent from the body and present with the Lord."

சரீரத்தைவிட்டு நீங்கவும் கர்த்தருடன் சேர்ந்திருக்கவும் அதிக விருப்பமாயிருக்கிறோம். உ கொரி. ரு. அ.

க எனக்காகக் காயப்பட்ட
உம்மைப் பற்றிக்கொள்ளுவேன்;
இப்படி நான் முடிவற்ற
சீவனில் பிரவேசிப்பேன்.
அங்கே தூதரோடேயும்
உம்மில் வாழ்வேன் நித்தமும்.

உ கண்ணின் பார்வை செவி மூச்சு
பேச்சுமற்றுப்போயினும்,
சாவின் வன்மைக் கீழ்ப்படிந்து
புத்திதான் மயங்கினும்,
சீவன் சோதி தேவரீர்
என்னை மோட்சம் ஏற்றுவீர்.

௩ லாசருவின் மரணத்தில்
நீர் கற்பித்தபடியே,
தேவதூதர் என்னிடத்தில்
வந்து ஏந்தச் செய்வீரே.
அப்போ நொந்த அடியேன்
ஊழிகாலம் ஆலிப்பேன்.

உ௱ய பாட்டு. L. M. 210

Christ our support in death.

மரணகாலத்தில் கிறிஸ்துநாதர் துணை.

க என் யேசுவே, தயாபரா,
என் மீட்புக்காகவே எல்லா
உபாதியோடுஞ் சாவையே
அடைந்துகொண்ட கர்த்தரே!

உ ஆரோக்கியமில்லாதோனாய்
கிடக்கும் இந்தப் பாவிக்காய்
நீர் பட்ட வாதை நோவையும்
நினைத்திரங்கியருளும்.

௩ என் பார்வையும், என் கேள்வியும்,
என் வாயிலான சத்தமும்
எல்லாம், இல்லாமற் போகையில்
என் மூச்சொடுங்குங் காலத்தில்;

ச அறிவில்லாமற் போவதால்,
நரர் துணை வீணாகையால்;
நீர் வந்து என் இக்கட்டிலே
சகாயராகும், யேசுவே!

ரு தலையுடன் இணைந்தவன்
என்றைக்கும் பிரியாதவன்;
நீர் எனக்காய் மரித்ததே
என் நம்பிக்கைக்கு முத்திரை.

உ௱யக பாட்டு. S. M. 211

Prayer for support in death.

மரணநேரத்தில் தன்னை ஆதரிக்கவேண்டுமென்று
வேண்டிக்கொள்ளல்.

க நான் பேச்சுமற்றோனாய்
கிடக்கும்பொழுதே,
என் நெஞ்சைத் தாங்க நீர் அன்பாய்
கண்ணோக்கும், கர்த்தரே!

உ என் ஆவி மெலிந்து
குறையும்போதென்னில்
வினைக்கள் எல்லாம் அறுந்து
கலேந்துபோகையில்,

௩ அப்பொழுது உம்மால்
உண்டாகும் நன்மையும்
நல் நம்பிக்கையும் ஆவியால்
என்னில் பொழிந்திடும்.

௪ நான் உம்மை நேசமாய்
பிடித்தும்முடனே
நான் வாழ உமக்கேற்றோனாய்
சேர்க்கும், யேசுவே!

உ௱௰உ பாட்டு. 7. 6. **212**

Confidence in death.

மரண நேரத்தில் நம்பிக்கைகொள்ளல்.

க அகல் துன்மார்க்கமான
பொல்லாத லோகமே,
என் ஆத்துமாவுக்கான
தலம் நீ அல்லவே,
கர்த்தாவின் மோட்சத்துக்கு
எதிர் கொண்டேகிறேன்.
என் நேச யேசுவுக்கு
முன்பாக வாழுவேன்.

உ என் காரியங்களுக்கு
சகாயர் யேசுவே,
என் துஷ்ட ரோகத்துக்கு
அவர் மருந்துமே.
என் நோவை ஆற்றிவந்து
திடனைச் செய்திரும்,
சந்தோஷ சாவைத் தந்து
அன்பாயிரட்சியும்.

௩ என் நெஞ்சில் உம்முடைய
சுகுர்த நாமமே
திகிலெல்லாம் மறைய
விளங்கும் யேசுவே.
அவஸ்தையில் நீர் கிட்ட
இருந்தென்நேரமும்
மரத்திலே மரித்த
உருபம் காண்பியும்.

௪ என் ஆவிக்கே அன்பாக
என் பயம் விலக்கும்;
எப்போதும் நேசமாக
கையேந்தி ரட்சியும்.
இவ்வண்ணஞ் செய்வீராகில்
இக்கட்டைத் தாண்டுவேன்;
வருத்தமான சாவில்
உம்மிற் சந்தோஷிப்பேன்.

௫ பின்னாலே மோட்சத்திலும்
குறைக்கும் நீங்கலாய்
விடாத களிப்பிலும்
நிறைந்த சுத்தமாய்,
விண்ணோர்கள் கூட்டத்தோடே
என்னை அழையுமேன்;
அங்கும்மை நல்லோரோடே
என்றைக்கும் போற்றுவேன்.

உ௱௰௩ பாட்டு. 7's. **213**

"He will swallow up death in victory."

அவர் மரணத்தைச் செயித்து விழுங்குவார். ஏசா. உ௫. ௮.

க தோழனே, உன் சீவன் போம்,
நாம் எல்லாரும் மாளுவோம்;
சீவனுள்ளோன் சாவுக்கே
தப்பிக்கொள்வான் இல்லையே.

௨ ஆதலால், உன் சாவிலே
வாக்கு நடை நெஞ்சிலே
பாடில்லாமல் நன்மையை
காணுமட்டாய் நீ நினை.

௩ கிறிஸ்தின் சாவுமாத்திரம்
நோவை நீக்கும் காரணம்;
கிறிஸ்துநாதர் நீதிமான்,
தப்பில்லாத மீட்பராம்.

௪ உன்னுடைய நீதியே
எவ்விதமும் அற்பமே;
கிறிஸ்தின் நீதி பூரணம்,
அதுவே உன் வஸ்திரம்.

௫ பாவஞ் சாபந் துஷ்ட பேய்
கிறிஸ்தின் கீழ் விழுந்ததே;
யேசுவாலே மாத்திரம்
தோன்றுமே மகா சயம்.

௬ இப்படி நீ சாவையே
நோக்கி, ஆ! உன் கூர் எங்கே?
என்றுரைத்துச் சாந்தமாய்
சாவை வென்று ஏறுவாய்.

௨௱௰௪ பாட்டு. 7's. **214**

Unity with Christ, our confidence in death.

கிறிஸ்துநாதரோடே ஐக்கியப்படல், மரணநேரத்தில் எங்கள் நம்பிக்கைக்குக் காரணம்.

௧ என்னை மீட்ட ரட்சகர்
சாவின் கூர்மை நீக்கினர்;
மோட்சத்திலே நிற்கிறார்,
எனக்காக வேண்டுகிறார்;
பயம் இப்போ எனக்கேன்?
கிறிஸ்து மூலம் வெல்லுவேன்.

௨ நம்பிக்கையின் பந்தத்தால்
கிறிஸ்துவண்டை சேர்ந்ததால்,

அவர்க்குள்ளே பத்தனாய்
அன்பால் கட்டப்பட்டோனாய்,
சாவால் நானும் கிறிஸ்துவும்
ஒன்றே ஆவோம் நித்தமும்.

௬ இந்தத் தேகக் கூடெல்லாம்
மண்ணாய்ப் போகும் ஆகில், நான்
தீர்ப்புச் சொல்லும் நாளிலே
இந்தத் தேகத்துடனே
மூட்டப்பட்டோனாய் நிற்பேன்,
என்னை மீட்டோரைக் காண்பேன்.

உ௱௰௫ பாட்டு. 8. 7. 4. 215

"I will praise Thee, O Lord, with my whole heart."

பராபரனே, நான் பூரண இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்.
சங். ௯. ௧.

௧ என்னில் நூறு வாயும் நாவும்
உண்டானாலும், தயவாய்
கர்த்தர் செய்த நன்மை யாவும்
கூறிப்போற்ற ஞாயமாய்
என்னிடத்தில்
ஏற்ற திராணி இல்லையே.

௨ வானம் மட்டுக்கே என் சத்தம்
எட்டி, வாஞ்சையுடனே
போற்ற என்னிலுள்ள ரத்தம்
பொங்கினாலும் நித்தமே,
இன்னும் என்னால்
ஏற்ற நன்றி ஆகாதே.

௩ ஆ! கர்த்தாவே, அன்பாய் வந்து,
நீரே ஏற்கும் கீதத்தை
நான் செலுத்தச் சத்தி தந்து,
ஏவி, இந்த நெஞ்சத்தை,
மந்த குணம்
முற்றும் நீங்கச் செய்திடும்.

௪ அப்போ லோக மாய்கை விட்டு
நாவும் பேசும் அளவாய்,
நீர் என் பங்கென்றே துதித்து
கீதம் சொல்வேன் பூரிப்பாய்,
வாய் அயர்ந்தும்
உள்ளத்தாலே போற்றுவேன்.

உ௱௰௬ பாட்டு. 8. 8. 6. **216**

"I will sing praise to my God while I have my being."

என் பிராணன் இருக்கும்வரைக்கும் என் தேவனைப் பாடுவேன்.
சங். ௱௪௬. உ.

௧ நான் சீவனுள்ள வரைக்கும்,
சாவால் என் சீவன் போயினும்,
கர்த்தாவைப் போற்றுவேன்;
என் சீவன் எண்ணம் உள்ளமும்
மோட்சமும் நிற்கும் அளவும்,
விடாமல் துதிப்பேன்.

௨ விண் மண் பாதாளம் என்றிவை
உண்டாக்கின மா கர்த்தனை
வணங்கும் பத்திமான்,
தெய்வீக உண்மை நிசமாய்
என்றைக்கும் நிற்கும் என்றதாய்
தப்பாமல் காணுவான்.

௩ கண் கெட்டோர்க்குப் பார்வையை,
இளைத்தோருக்கும் பெலத்தை,
என் தேவன் கொடுப்பார்;
சீர்கெட்டோருக்கு ரட்சிப்பு
திக்கற்றோருக்கும் தயவு
என்னேசர் கற்பிப்பார்.

௪ நான் சீவனுள்ளவரைக்கும்,
சாவால் என் சீவன் போயினும்,
கர்த்தாவைப் போற்றுவேன்;
என் சீவன் எண்ணம் உள்ளமும்,
மோட்சமும் நிற்கும் அளவும்,
விடாமல் துதிப்பேன்.

உாயிஎ பாட்டு. P. M. 217

"Magnify the Lord with me, let us exalt his name together."

என்னோடே பராபரனுடைய மகிமையை விளங்கப்பண்ணுங்கள்; நாம் ஏகமாய் அவர் நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவோம் வாருங்கள். சங். ௩௪. ௩.

க கர்த்தாவே, உம்மைத் துதிப்பேன்,
மகா மகிழ்ச்சியாக
என்றைக்கும் உம்மைப் போற்றுவேன்
நித்தமும் பணிவாக
என் ஆத்துமம் என் தேகமும்
உம்மை நன்றாகத் துதிக்கும்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி!

உ ஆ! கேளும், நான் என் துன்பத்தில்
கர்த்தாவைக் கெஞ்சிக்கொண்டேன்;
அப்போது ஏற்ற வேளையில்
மகா ரட்சிப்பைக் கண்டேன்.
இதற்கென் நாவே, கீதஞ் சொல்,
என்னோடெல்லாரும் பாடுங்கள்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி!

௩ கர்த்தா ஓர்போதுந் தமது
சனத்தைக் கைவிடாரே;
கண்ணோக்குமாய்க் கடாட்சித்து,
சகாயமாக்குவாரே.
இருளில் இடற ஒட்டார்,
பிதாவைப்போலத் தாங்குவார்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி!

௪ பூலோகத்தாரின் ஆறுதல்
துணையும் அன்பும் கூட
அழியும்போது, ஏழைகள்
திரும்பக் களிகூர
தேவன்பும் மகா தயவும்
சம்பூரணத்தைக் கொடுக்கும்;
கர்த்தாவுக்கே புகழ்ச்சி!

உ௱௰அ பாட்டு. C. M. **218**

"Which hope we have as an anchor of the soul sure and steadfast, &c."

அந்த நம்பிக்கை ஆத்துமத்துக்கு நிலையும், உறுதியுமான நங்கூரம் போலத் திரைச்சீலைக்குட்படுகிறதாயிருக்கிறது. எபி. சு. ௰கூ.

க பரத்திலே சுதந்தரம்
 எனக்குண்டாம் என்றே
அறிந்ததாலே நடுக்கம்
 இல்லாமற் போயிற்றே.

உ என்னில் பசாசு மூர்க்கமாய்
 வந்தாலும், பாடுவேன்;
உலோகம் யாவுங் கோஷ்டமாய்
 எழும்பினும், நிற்பேன்.

ஈ விசாரம் யாவும் கூட்டமாய்
 என்னைப் பிடிக்கிலும்,
பேரின்பம் நோக்கி, களிப்பாய்
 என் நெஞ்சம் மகிழும்.

ச இளைப்படைந்த ஆத்துமா
 அங்குள்ள வாழ்விலே
நீராடி நித்தமும் மகா
 மகிழ்ச்சி கொள்ளுமே.

உ௱௰கூ பாட்டு. 8. 7. 4. **219**

"I will give you rest."

நான் இளைப்பாறுதல் செய்வேன். மத். ௰க. உஅ.

க சீர்கெட்டோரை மீட்ட யேசு
 இளைத்தோரை ஆற்றும் நீர்,
இந்த நெஞ்சில் சாந்தஞ் செய்து
 தாங்கிக்கொள்ளும் தேவரீர்,
  அடியேனை
 உள்ளமட்டும் பாலிப்பீர்.

உ தேவனுக்குத் தூரமாக
இங்கும் அங்கும் ஓடினேன்;
விண்ணில் மண்ணை வாஞ்சையாக
தேடிக்கொண்டு அலைந்தேன்.
இன்றுமுதல்
உம்மை நம்பிப் பற்றுவேன்.

௩ லோக மாயை, சொந்த இச்சை
இவை விட்டேன் முழுதும்;
நீரே செல்வம், நீட்டும் கையை
பேழைக்குள்ளே சேர்த்திடும்.
எளியோனின்
நெஞ்சைத் தேற்றிக் காத்திடும்.

௪ சாந்தமுள்ள ஈவைப் பெற்று
நெஞ்சிற் சுத்தமுள்ளோனாய்
உம்மில் பிரியாமல் நின்று
தேறச்செய்யும் தயவாய்;
அப்போ அன்பில்
மூழ்கிக்கொள்வேன் என்றுமாய்.

உஉ0 பாட்டு. C. M. **220**

"He satisfieth the longing soul, and filleth the hungry soul with goodness."

அவர் தாகமுள்ளவனைத் திருத்தியாக்கி, பசியுள்ளவனை நன்மையினாலே நிரப்பினார். சங். ௱௭. ௯.

க என் நெஞ்சின் தாகந் கர்த்தரால்
நன்றாகத் தீர்ந்திடும்;
அவர் நிறைந்த அருளால்
என் ஆவி பூரிக்கும்.

உ நான் இங்கே தங்கும் காலத்தில்
அவரின் சோதியே,
என் நெஞ்சின் சுய இருட்டில்
பிரகாசமாகுமே.

ங அதால் உண்டாகும் இன்பத்தை
அஞ்ஞானி உணரான்;
அதின் உயர்ந்த மகிமை
நாஸ்திகன் அறியான்.

ச மெய்ப் பத்தனுக்குமாத்திரம்
அன்புள்ள தேவரீர்,
அதின் மேலான பாக்கியம்
விளங்கப்பண்ணுவீர்.

ரு ஆ! சுவாமி, நீர் கடாட்சித்து,
மென்மேலும் எனக்கே
மேலான இந்தத் தயவு
விளங்கச் செய்வீரே.

உஉக பாட்டு. L. M. 221

"Why art thou cast down, O my soul?"

என் ஆத்துமாவே, நீ ஏன் விசனப்படுகிறாய். சங். சஉ. ருு.

க என் நெஞ்சே, ஏன் விசாரமாய்
நம்பாமல் துக்கங் கொள்ளுவாய்?
எல்லாரையும் விசாரித்து
ஆண்டோரை நம்பிக்கொண்டிரு.

உ என் கர்த்தர் என்னைக் கைவிடார்,
என் நெஞ்சின் நோவை அறிவார்;
இக்கட்டிலே தயாபரர்
சகாயஞ் செய்துகொள்பவர்.

ங நீர் என் பிதா, என் துணை நீர்,
இவ்வேழையேனைக் கைவிடீர்;
வேறாறுதல் இகத்திலே
மண்ணானவனுக்கில்லையே.

ச பரத்திலுள்ள பிதாவே,
என் கேட்டை நீர் விரும்பீரே;
என் துன்பம் துக்கம் யாவையும்
இரக்கமாய் விசாரியும்.

உ௨௨ பாட்டு. L. M. 222

"God is our refuge," &c.

தேவனே நமக்குப் புகலிடம். சங். சகூ. க.

க பூலோக செல்வத்தைப் பாரேன்,
அநித்தியத்தை நான் நாடேன்;
நான் பற்றிக்கொள்ளும் ஆண்டவர்
என் செல்வத்தின் ஊற்றானவர்.

உ என் ஆவி தேகம் இவைக்கும்
நெருக்கம் பாரமாகியும்;
நான் மோட்ச வாழ்வை நோக்க நீர்
கடாட்சம் செய்யக்கடவீர்.

ங இக்கட்டினால் என் மனதில்
கிலேசங்கொண்ட காலத்தில்,
மோட்ச தலத்தைத் தேடவும்
அதிற் சேரவும் அருளும்.

ச ஓர் நேசன் சென்றுபோகையில்,
நான் துக்கப்பட்டும், மோட்சத்தில்
நானும் சென்றால் பிரவேசிப்பேன்
என்றென்னை ஆற்றித் தேற்றுவேன்.

உ௨ங பாட்டு. C. M. 223

"The prince of peace."

சமாதானப் பிரபு. ஏசா. கூ. கூ.

க என் புண்ணியத்தின் பலத்தால்
யாதொன்றையும் பெறேன்,
என் மீட்பர் யேசு, அவரால்
சமஸ்தம் அடைவேன்.

௨ என் இன்பம் துணை நம்பிக்கை
என் மீட்பும் அவரே;
அவர்க்குள் எந்தக் கிருபை
நற்கொடையும் உண்டே.

௩ கர்த்தாவின் கோபத்துக்குள்ளாய்
நான் பயம் அடைந்தும்,
என் மீட்பர் சாவின் மார்க்கமாய்
மெய்ச்சாந்தம் கிடைக்கும்.

௪ என் குறை நீக்க அவர்தாம்
ஒன்றுன வல்லவர்;
அவர் என் கலக்கம் எல்லாம்
அகற்றச் சமர்த்தர்.

௫ அதாலே அவரண்டையில்
என் நெஞ்சை ஒப்பித்தேன்;
கண்ணூன்றி என்றும் அவரில்
நான் நம்பிக்கை கொள்வேன்.

௬ என் சமாதானப் பிரபு
இம்மானுவேலே நீர்,
இவ்வண்ணம் நம்பத் தயவு
அளிக்கக் கடவீர்.

௨௨௪ பாட்டு. 7.6. **224**

" *The Lord is on my side, I will not fear.*"

யெகோவா என் பட்சத்திலிருக்கிறுர், நான் பயப்படேன்.
சங். ௱௰௮. ௬.

௧ கர்த்தாவை நம்புவானை
ஓர்போதுங் கைவிடார்;
கெட்டோரின் தாறுமாறை
வீணுக்கிப் போடுவார்.
சன்மார்க்கனைப் பலத்த
கையால் தயாபரர்
ரட்சித்துத் தாழ்ச்சியற்ற
அன்பாய் விசாரிப்பார்.

உ கர்த்தாவின் சித்தத்துக்கு
கீழ்ப்பட்டடங்குவேன்;
அப்போது சீவனுக்கு
எதிர்கொண்டேகுவேன்.
லௌகீக வாழ்வின் பாதை
செல்லேன், இயேசுவை
பின்பற்றி இங்கே வாதை
சகிப்பதே நன்மை.

ந என்மேலே பாரமாக
வரும் இக்கட்டிலே
பராபரன் அன்பாக
என்னோடிருப்பாரே.
பொறுக்கில் நல்ல ஈவை
நான் அவராற் கேட்பேன்;
அவ்விதமாய் இக்கட்டை
சகித்து வெல்லுவேன்.

ச என் யேசுவை நான் பற்றி
இருக்கிறேன், அவர்
என் சாபத்தை அகற்றி
விலக்கும் ரட்சகர்.
நான் தப்ப எனக்காக
இரத்தஞ் சிந்தினார்;
அத்தன்மை உண்மையாக
ஆர் என்னை நேசிப்பார்?

உஉரு பாட்டு. L. M. **225**

"Return to thy rest, O my soul."

என் ஆத்துமாவே, பராபரன் உனக்கு நன்மை செய்தார்; ஆதலால் நீ உன் ஆறுதலுக்குத் திரும்பு. சங். ளயசு. எ.

க தேவன்புக்காய்த் தவிக்கிறேன்,
அதில் அனந்த வாழ்வுண்டாம்;
அதாலே பூர்த்தி அடைவேன்
அதே நான் மேவும் இன்பமாம்.

௨ நீர் அதைக் காட்டுவீராகுல்,
இகத்தில் மோட்சம் தோன்றுமே;
என் பாரம் நீங்கும் அதினுல்,
என் ஆவி சீராய் வாழுமே.

௩ பூலோகம் என்னைப் பகைத்தும்,
அதால் நான் துக்கமாயிரேன்;
அதின்பம் துன்பம் காண்பித்தும்,
ஓர்காலும் அதை நான் நம்பேன்.

௪ என் ஆவிக்கான இன்பம் நீர்,
பகைஞர் கோபம் விருதா;
நரர் கைவிட்டும் நிற்கிறீர்,
நான் பிள்ளை, நீரே என் பிதா.

௨௨௬ பாட்டு. C. M. **226**

"He is their strength in time of trouble."

ஆபத்துக்காலத்தில் அவரே அவர்கள் பெலம். சங். ௩௭. ௩௯.

க ஆ! யேசுவே, பூலோகத்தில்
என் ஆறுதல் நீரே;
எத்துன்பம் வந்தும் நான் உம்மில்
நம்பிக்கை வைப்பேனே.

௨ பூமியில் உம்மைத்தவிர,
ஓர் காலும் அடியேன்
என் துன்பப் பாரம் நீக்கிட
சகாயனைக் காணேன்.

௩ நான் இந்தப் பார துக்கத்தால்
கலங்கிப் போயினும்;
நீரோ கண்ணோக்கங் காண்பித்தால்
என் நெஞ்சு பூரிக்கும்.

௪ துன்பம் நிறைந்த தொண்டனை
கண்ணோக்கும், நேசரே,
நெரிந்த இந்த நெஞ்சத்தை
சந்தோஷிப்பிப்பீரே.

உஉஎ பாட்டு. 8. 7. 4. **227**

"We glory in tribulations also."

உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம். உரோ. ரு. ௩.

க வாழ்க, சிலுவையே, வாழ்க
பாரமற்ற பாரமே!
நீ வந்தால் இணக்கமாக
உன்னை ஏற்றுக்கொள்வேனே.
கர்த்தராலே
நீ அனுப்பப்பட்டது.

உ இந்த நிந்தை, லச்சையல்ல,
இது வெட்கமல்லவே;
சோதனை பொல்லாங்குக்கல்ல,
நீதிக்காக வந்ததே.
யேசுநாதர்
நிந்தைப்பாடு பட்டாரே.

௩ சிலுவையின் கீழ்த் தவிக்கும்
தம்முடையவர்களை
யேசுநாதர் ஆதரிக்கும்
அன்பிரக்கம் எத்தனை?
துன்பகாலம்
நீதிமானுக் கின்பமாம்.

௪ கர்த்தரைப் பின்செல்வோமாக,
சிலுவையின் தோழரே!
கர்த்தரை மகிழ்ச்சியாக
தோத்திரிப்போமாகவே.
கர்த்தர் தாமே
அன்புடன் மரித்தாரே.

ரு லோகம் நம்மை மா இகழ்ச்சி
பண்ணிச் சங்கரிக்கவே;
கர்த்தராலே மா மகிழ்ச்சி
ஆறுதல் கிடைக்குமே.
அதற்காக
நாயனுக்கே தோத்திரம்

உஉஅ பாட்டு. 8.7. **228**

"The ship was tossed with waves."

படவு அலைகளால் அலைவுபட்டது. மத். ௰௪. உ௪.

க கொந்தளிக்குங் கடலேறும்
கப்பல் ஆடி ஆடிப்போம்;
காற்றுச் சீறிச் சீறி வீசும்,
பாய்கிழிந்து போயினும்,
யேசு சுவாமி, நீரே வந்து
கப்பலோட்டியாயிரும்;
காற்றமைத்து, வழி தந்து,
கரையேறச் செய்திடும்.

உ கப்பலேறிப் போவோருக்கு
வரும் மோசம் பயமும்,
மின்முழக்கம் சூறைகல்லு,
உமக்கெல்லாந் தெரியும்.
காரிராவிற் பிரகாசம்,
உட்டணத்தில் மேகமே;
யாவையும் நடத்தும் ராசன்,
சாவிலும் என் சீவனே.

௩ நெஞ்சம் உம்மை எண்ணியெண்ணும்,
இன்பந் துன்பம் வருகில்,
சீவன் உம்மில் வாசம்பண்ணும்,
லோக மோட்ச யுகத்தில்.
யேசு சுவாமி, நீரே வந்து,
கப்பலோட்டியாயிரும்;
காற்றடக்கி, வழி தந்து,
கரையேறச் செய்திடும்.

௪ வாசம்பண்ணும் உலகத்தில்
அங்கும் எங்கும் அலைவேன்;
கஸ்திப்பட்டு, உம்மிடத்தில்
தஞ்சமென்று ஓடுவேன்.

தேகக் கப்பல் மோதிப்போகில்,
சேதமின்றிச் சேருவேன்;
மோட்சம் பெற்று, உம்மிடத்தில்
அக்களிப்பாய்த் துதிப்பேன்

உஉகூ பாட்டு. C. M. **229**

"We look not at things which are seen, but at things which are not seen."

காணப்பட்டவைகளை அல்ல, காணப்படாதவைகளை நாம் நோக்கியிருக்கையில் இலெகுவானதும்—உ கொரி. ச. ௰௭.

க பரத்தைச் சேரும் பாதையில்
துன்பம் உண்டாயினும்;
கர்த்தாவுக்கேற்ற வேளையில்
நோ யாவும் நீங்கிடும்.

உ பரத்தை நோக்கிச் சோதனை
சகிக்கும் பத்திமான்,
மெய்மார்க்கத்துக்கத்தாட்சியை
எவர்க்கும் காண்பிப்பான்.

௩ பரத்தை நோக்கி யோசேப்பு
தாவீது முதலோர்
வருந்தி, நொந்து, சகித்து,
மேல் கிரீடம் அடைந்தோர்.

ச பரத்தை நோக்கி யேசுதாம்
மா நிந்தனைப்பட்டார்;
பிலாத்துக்கீழ் இக்கட்டெல்லாம்
சகித்ததால் வென்றார்.

ரு பரத்தை நோக்கி வருத்தம்
நெஞ்சே, நீ சாங்கமாய்
சகிப்பதாலே மாத்திரம்
பொன் முடி சூட்டுவாய்.

உ௱௩௰ பாட்டு. 7. 6. **230**

"Cast thy burden on the Lord."

உங்கள் கவலையை எல்லாம் அவர்மேற் சுமத்திவிடுங்கள்.
க பேது. ரு. எ.

க உன் நெஞ்சிலே உண்டான
விசாரம் யாவும் நீ
கர்த்தாவின் உண்மையான
கரத்துக்கொப்புவி.
விண் மண்ணை ஆண்டிருக்கும்
மகா தயாபரர்.
உன் காரியங்களுக்கும்
வழி உண்டாக்குவார்.

உ செயம் அடைந்து வாழ,
கர்த்தாவைப் பிள்ளைபோல்
நீ நம்பி மனதார
பணிந்து பற்றிக்கொள்.
உன் கவலைகளாலே
பயம் உண்டாக்குவாய்;
பொறுத்துப் பத்தியாலே
நீ வேண்டிக்கொள்ளுவாய்.

௩ நீ பத்தியை விடாமல்
பொறுத்திருக்கையில்,
கர்த்தர் நீ நினையாமல்
இருக்கும் நேரத்தில்,
உன் துக்கத்தையகற்ற
வெளிச்சங் காண்பிப்பார்;
நீ நன்மைக்காகப் பட்ட
சலிப்பை நீக்குவார்.

௪ கர்த்தாவே, எங்களுக்கு
எல்லா இக்கட்டிலும்
இரட்சை ஈவதற்கு
சமீபமாயிரும்.

எல்லாரையும் நடத்தும்,
பரத்துக்கேறிப்போம்
கரையிலே கடத்தும்,
அப்போது வாழுவோம்.

உநக பாட்டு. P. M. 231

"My soul, wait thou upon God, for my expectation is from Him."

என் ஆத்துமாவே, நீ தேவனைமாத்திரங் காத்துக்கொண்டிரு.
சங். சுஉ. ரு.

க என் நெஞ்சமே, கர்த்தாவுக்கு
எல்லாம் ஒப்பிப்பாயாக;
வரும் இக்கட்டும் உனக்கு
முடியும் லாபமாக.
விண் மண்ணைச் சிஷ்டித்த கர்த்தா
அன்பால் நிறைந்த உன் பிதா
தண்டித்தும் கோபமில்லை.

உ பிதாவின் தயை நிச்சயம்;
என் துன்பம் கஸ்தி ஏவும்,
ஓர் வெள்ளமாய் உண்டாயினும்
அச்சோதனையிலேயும்
மெய்யான விசுவாசத்தால்
உறுதிகொண்டு நிலைத்தால்,
நல் மீட்பைக் காண்பிப்பாரே.

ந என்னாலே நான் உண்டானேனோ?
என் தேகம் ஆவி யாவும்
கர்த்தா கொடுத்தார் அல்லவோ?
என் சொஸ்தம் ஊணும் தாவும்,
என் ஜென்மம் முதல் இம்மட்டும்
அவரின் அன்பும் தயவும்
விடாமல் தந்ததாமே

௪ ஆ! கர்த்தரே, நான் முழுதும்
உமக்காதீனமாக
இருப்பதால், நீர் யாவுக்கும்
நற்சீரைச் செய்வீராக.
அப்போது என்ன நேரிட்டும்,
நான் உம்மைக் காணுமட்டுக்கும்
என் ஆவி ஆறல்கொள்ளும்.

உ௩உ பாட்டு. L. M. **232**

"Humble yourselves, therefore, under the mighty hand of God, that He may exalt you in due time."

ஆதலால் ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்பொருட்டு அவருடைய வலக்கரத்தின்கீழ் அடங்குவீர்களாக.
௧ பேது. ரு.௬.

௧ கர்த்தாவின் சித்தம் நல்லது,
அதில் ஒருங்குந் தயவு
ஓர் கடலென்று பத்திமான்
அமைவதாலே அறிவான்.

௨ இக்கட்டும் துன்பம் யாவுக்கும்
அடங்கி, அன்பும் பத்தியும்
அடைந்தோரைக் கர்த்தர் பார்ப்பார்,
ஒத்தாசையையுங் காட்டுவார்.

௩ என் ஆண்டவரின் ஆளுகை,
என் ஆறுதல் என் நம்பிக்கை;
என் பாக்கியமும் அவர்தாம்
என் தஞ்சம் கேடகமுமாம்.

௪ என் பாதை இருள் அடைந்தும்,
என் துக்கத்தில் நான் அமிழ்ந்தும்,
ஏதாகிலும் முறையிடேன்,
ஒவ்வொன்றிலும் அடங்குவேன்.

ரு கொந்தளிக்கும் மா கடலை
அடித்து வீசும் புயலை
அமைதல் பண்ணும் ஆண்டவர்
என் நேசத் தந்தையானவர்.

சு நான் பற்றிக்கொள்ளும் கருத்தா
அனாதிமுதல் என் பிதா;
என் தலைமயிரும் எண்ணினார்,
ஓர்போதும் என்னைக் கைவிடார்.

உஙங பாட்டு. 8. 8. 6. **233**

"Fear thou not, for I am with thee; be not dismayed, for I am thy God."

நீ பயப்படவேண்டாம், நாம் உன்னுடனே இருக்கிறோம்; நீ கலங்காதிரு, நாம் உன் தேவன். ஏசா. சக. ம.

க அஞ்சாதிரு, என் நெஞ்சமே,
துன்னாளில் தயை செய்வோமே,
உன் கர்த்தர் என்கிறார்;
இக்கட்டில் திகையாதிரு
தகுந்த துணை உனக்கு
தப்பாமல் காண்பிப்பார்.

உ தாவீதும், யோபும், யோசேப்பும்
சன்மார்க்கத்தார் அநேகரும்
கர்த்தாவின் சித்தமாய்
வதைந்து நொந்தும், பத்தியில்
வேரூன்றி, ஏற்ற வேளையில்
வாழ்ந்தார்கள் பூர்த்தியாய்.

௩ கருத்தாய்த் தேவ தயவை
எப்போதும் நம்பும் பிள்ளையை
சகாயர் மறக்கார்;
நற்பத்தி வேராய் உண்டானால்,
இரக்கம் அன்பு இவையால்
அணைத்துப் பாலிப்பார்.

௪ என் நெஞ்சமே, மகிழ்ந்திரு,
பேய், லோகம், துன்பம் உனக்கு
பொல்லாப்பைச் செய்யாதே;
இம்மானுவேல் உன் மாளிகை,
அவர்மேல் வைத்த நம்பிக்கை
ஓர்போதும் மாளாதே.

௨௩௪ பாட்டு. C. M. 234

"*Thy will be done.*"

உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது. மத். ௨௬. ௪௨.

௧ கர்த்தாவின் சித்தம் நல்லது,
விவேகமாகவே
விளங்கிடுஞ் செயலுக்கு
அடங்கவேண்டுமே.

௨ இக்கட்டிலும் ரட்சிப்பாரே,
மந்தாரம் போக்குவார்;
மிகுந்த ஊக்கமாகவே
இரு: அருள் செய்வார்.

௩ கர்த்தாவின் சித்தம் நல்லது,
கெடுக்கமாட்டாரே;
தகப்பன் தான் தன் பிள்ளைக்கு
கேடொன்றும் செய்யாரே.

௪ இதை அறிந்து, அவரை
எப்போதும் நம்புவேன்;
மாறாத அவர் நேசத்தை
விடாமல் போற்றுவேன்.

௫ கர்த்தாவின் சித்தம் நல்லது,
சந்தோஷ நாளிலும்,
என்னைத் திருத்த நெஞ்சுக்கு
உண்டாகுந் நோவிலும்.

ரு அவருக்கு நான் அடங்குவேன்,
பலத்த தேவனுர்
இருட்டை நீக்கிச் சோதியே
விளங்கப்பண்ணுவார்.

உஙரு பாட்டு. P. M. 235

"We know that all things work together for good to them that love God."

தேவனில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மையாய் முடியு மென்றறிந்திருக்கிறேம். உரோ. அ. உஅ.

க கர்த்தாவின் ஞானம் லோகத்தில்
எல்லாத்தையுஞ் சீராக
நடத்திக்கொள்வதாகையில்,
எனக்கு நன்மையாக
நான் படும் துன்பம் துக்கமும்
நேரிடும் எந்தச் செயலும்
என்றென்றுமாய்ப் பலிக்கும்.

உ கர்த்தாவுக்கேற்ற வேளையில்
என் ஆபத்து முடியும்;
அப்போ கசந்த உள்ளத்தில்
இருந்த நோ அழியும்.
பொறுப்பதாலே நிலையாய்,
என் துக்கம் பாடும் நிசமாய்
சந்தோஷமாக மாறும்.

ங என் கர்த்தர் பாக்கியம் தந்தால்,
களிப்பேன் நன்றியாக;
கஸ்தியை வரப்பண்ணினல்
சகிப்பேன் பொறுப்பாக.
பிழைப்புக்கும் இறப்புக்கும்
எனக்குண்டாகும் ஒவ்வொன்றும்
கர்த்தாவின் சித்தமாகும்.

உஙசா பாட்டு. L. M. 236

"A faithful man shall abound with blessings."

நேர்மையான மனுஷன் மிகுந்த ஆசீர்வாதங்களை அனுபவிப்பான்.
நீதிமொழிகள். உஅ. உ0.

க கர்த்தாவுக்குண்மையாயிரு,
உன் ஞானஸ்நானம் நினைத்து
அவரின் உடன்பாட்டுக்குள்
நீ போனாய் என்றறிந்துகொள்.

உ கர்த்தாவுக்குண்மையாயிரு,
அவர்க்கொழுங்காய் அமைந்து,
சீராய் நடக்கும் எவர்க்கும்
மேலான நேசம் கிடைக்கும்.

ங கர்த்தாவுக்குண்மையாயிரு,
அதாலே தானும் உனக்கு
இக்கட்டில் துணை காண்பிப்பார்,
கசந்த நெஞ்சை ஆற்றுவார்.

ச கர்த்தாவுக்குண்மையாயிரு,
அப்போது அவர் தயவு
உன் உள்ளம் வாழக் காணுவாய்,
தெய்வன்பின் சாந்தங் கொள்ளுவாய்.

ரு கர்த்தாவுக்குண்மையாயிரு,
நற்சீஷனாக அவர்க்கு
படிவதால் நற்சீர் எல்லாம்,
உனக்கோபாங்கமாய் உண்டாம்.

சு கர்த்தாவுக்குண்மையாயிரு,
ஓர்காலும் பின் வாங்காதிரு;
சாமட்டும் நின்று வென்றவன்
மேல் முடி சூட்டப்படுவான்.

உ௩எ பாட்டு. L. M. 237

Patience under Affliction.

துன்பங்களைப் பொறுமையோடே சகித்தல்.

க இவ்வுலகில் உன் மீட்பர்போல்
நீ துன்பத்தைச் சகித்துக்கொள்.
பொல்லாங்குண்டாகும் வேளையில்
பெலன் தரித்தெதிர்த்து நில்.

உ வென்றோனுக்காக மோட்சத்து
கிரீடமே வைத்தாயிற்று.
பொல்லாத மார்க்கமுள்ளவன்
இகழ்ச்சிகொண்டு நீங்குவான்.

௩ இரக்கமுள்ள யேசுவே!
நான் மோட்ச ராச்சியத்திலே
உம்மோடிருக்க, என்றைக்கும்,
என்னில் தரித்திரட்சியும்.

உ௩அ பாட்டு. 8. 7. 4. 238

Prayer in Affliction.

துன்பகாலச் செபம்.

க என் இதையமே! களித்து
உன் உபாதியை மற,
இங்கே நோவையே சகித்து,
கஸ்தியால் மயங்கின
உன்னை யேசு
மோட்சத்துக் கழைக்கிறார்.

உ என் பராபரனை நோக்கி
நித்தம் நித்தங் கூப்பிட்டேன்.
நாயன் என் இக்கட்டைப்போக்கி
ஆதரிக்கக் கெஞ்சினேன்.
மீட்பர் சாவை
பார்த்தமர்ந்து சகித்தேன்.

௩ கர்த்தரே! அன்பாய் விளங்கும்
சோதியே பிரகாசியும்.
ஏசுவே! என்மேலிரங்கும்.
தூரத்திற் செல்லாதிரும்.
நான் சுகிக்க,
என்னைக் காத்துக்கொண்டிரும்.

உ௩௯ பாட்டு. L. M. 239

"*God resisteth the proud, but giveth grace unto the humble.*"

அகர்தையுள்ளவர்களைத் தேவன் விரோதித்து, தாழ்ந்த சிந்தை யுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். யாக். ௪. ௬.

க விண் மண் யாவுக்கும் கர்த்தரே,
வானோர் வணங்கும் ராசாவே,
என் தாழ்மையிலே என்னை நீர்
அன்பாய்க் கண்ணோக்கக்கடவீர்.

உ நான் தேவரீருக்கே முன்பாய்
மா நீச பூச்சி தூளுமாய்
இருந்தும், அன்பும் தயவும்
என்மேல் இறங்கக் கற்பியும்.

௩ எல்லாரும் அன்பின் சாயைக்கீழ்
பயமில்லாமல் வாருங்கள்
என்றேற்றவாக்கைத் தாழ்மையேன்
இப்போதும் நம்பிச் சேர்கிறேன்.

௪ ஒப்பற்ற மேன்மையுள்ள நீர்
என் ஏழை வேண்டலைத் தள்ளீர்;
பிதாவைப்போல எனக்கும்
பிதாவின் தயை காண்பியும்.

உசம பாட்டு. 8.7.4. 240

"Blessed are the poor in spirit, for theirs is the kingdom of heaven."

ஆவியில் எளிமையுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்; பரமராச்சியம் அவர்களுக்கே உரியது. மத்தேயு. ரு. ௩.

க மறுசென்மமாய்ச் சென்மித்து,
தெய்வ அபிஷேகத்தை
பெற்றுத் தாழ்மையைத் தரித்து,
ஓய்வில்லாமல் யேசுவை
பார்த்துக்கொண்டு
சார்வோரே, மெய்ப்பாக்கியர்.

உ சொந்தப் பெருமை தேடாமல்
பெற்றதே கர்த்தாவினுல்
ஈவென்றுப்புதல் இல்லாமல்
ஏழையான சிந்தையால்
எண்ணிக்கொள்வோர்,
தங்கள் தாழ்வில் பாக்கியர்.

௩ பத்திக்கேற்ற துக்கமாக
தாழ்வாய் எந்த நேரமும்
செய்த பாவங்களுக்காக
வெட்கி மனதாரவும்
துக்கப்பட்டோர்,
இங்கும் அங்கும் பாக்கியர்.

உசக பாட்டு. 7's. 241

"Except ye be converted and become as little children, ye cannot enter into the kingdom of heaven."

நீங்கள் சீர்ப்பட்டுச் சிறு பிள்ளைகளைப்போலாகாவிட்டால், பரம ராச்சியத்திற் பிரவேசிக்கமாட்டீர்களென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். மத். யஅ. ௩.

க தேவ கல்வி எனக்கு
உம்மாலாகும்படிக்கு,
குணம் ஆசை தாழ்மையும்
யேசுவே, தந்தருளும்.

உ தன்மேல் நம்பும் நம்பிக்கை
நானே என்ற பெருமை,
இவை விட்டு முழுதும்
உம்மைப் பற்றப் புரியும்.

௩ சென்ம ஞானம் விடுவேன்,
பிள்ளைபோலத் தாழுவேன்;
நான் உம்மாலே பார்க்கவும்
பெலங்கொள்ளவுஞ் செய்யும்.

௪ செய்தால், நல்ல ஆவியே,
கல்வி, தெய்வ ஞானமே,
நித்த சீவன் இவையும்
எனக்கே தந்தருளும்.

உ௪உ பாட்டு. 8. 7. **242**

"Be ye therefore sober and watch unto prayer."

ஆதலால் சாவதானமாயிருந்து பிரார்த்தனைபண்ணிப் புத்திதெளிந்த வர்களாயிருக்கக்கடவீர்கள். க பேது. ச. எ.

க நெஞ்சமே, உன் தீய இச்சை
மேற்கொள்ளாமற் பார்த்துக்கொள்;
நாசத்துக்கு அது உன்னைக்
கொண்டுபோம்; விழித்துக்கொள்.
இன்பமாகப் பேசினும்
அதின் சத்தங் கேளாதே;
கேட்டாயாகில், மோசக்கேடும்
நாசமும் உண்டாகுமே.

உ அல்லதென்று அதெழும்பி,
சத்திபெற்று வளரும்;
வென்றுவிட்டேனேயென்றெண்ணி
கொள்ளாதே ஓர் நிமிஷம்.
சிலநாளாய் அமர்ந்தாலும்
அது இன்னம் உள்ளதே;
பின்னும் உன்னோடே எதிர்க்கும்
சற்றுந் தூங்கிக்கொள்ளாதே.

௩ ஆவிக்கு விரோதமாகும்
உன்னிலுள்ள இச்சையை
வெல்வதற்கு ஏற்றதாகும்
தேவ ஆயுதங்களை
வாங்கி நின்று வீரமாக
போர் செய்யாமல் விடாதே;
அப்போதே நீ பூரிப்பாக
வெற்றிகொண்டு வாழ்வாயே.

உசங. பாட்டு. 7's. 243

" *Be sober, be vigilant, because your adversary,*" *&c.*

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்:
உங்கள் விரோதியாகிய.—க பேது. ரு. அ.

க ஆத்துமாவே, தீமைக்கு
தப்பிக்கொள்ள விழித்து,
சீஷனாக மீட்பர் கீழ்
நின்று நித்தம் வேண்டிக்கொள்.

உ நீதிகெட்ட சாத்தானும்
கெட்டுப்போன லோகமும்,
எங்கும் உன்னைச் சூழவே
நின்று துன்பம் செய்யுமே.

௩ நீ உன் சொந்த வன்மையாய்
ஒன்றுஞ்செய்யவே மாட்டாய்;
ஊக்கம் பெலன் ஈவெல்லாம்
தேவனாலேதான் உண்டாம்.

ச பாவம் போக்கும் ஏதுவாய்
வேண்டிக்கொண்டு திட்டமாய்;
உன்னைச் சோதித்தாவிக்கு
உன்னை ஒப்புவித்திரு.

ரு தீமையோனைப் பார்க்கையில்
நீ கர்த்தாவின் நாமத்தில்
வேண்டிக்கொள்ளல் வன்மைதான்,
தீயன் நீங்கி ஓடுவான்.

௬ பத்தியோடே பேணலாய்
நீ நடந்துகொள்ளுவாய்;
நித்தம் மோட்ச ஸ்வாமியார்
உன்னை அன்பாய் ரட்சிப்பார்.

உ௪௪ பாட்டு. 7s. **244**

"Watch therefore, for ye know not what hour your Lord cometh."

உங்கள் எசமான் வரும் நாழிகையை நீங்கள் அறியீர்கள்; ஆதலால் விழித்திருக்கக்கடவீர்கள். மத். உ௪. ௪உ.

௧ தேவ ஆட்டுக்குட்டியே,
சர்வத்துக்கும் மீட்பரே,
உம்மால் மீட்கப்பட்ட நான்
தேவரீர்க்காதீனமாம்;
நீர் என் கோட்டை தஞ்சமும்,
ஆரால் ரட்சை நீங்கிடும்?

உ உம்மைப் பற்றும் நேசத்தை
நீர் கற்பித்த உண்மையை
சாத்தான், கெட்ட லோகமும்,
ஆவலாய் விரோதிக்கும்;
இன்பந் துன்பம் கண்ணியாய்
வைத்துக்கொள்ளும் நித்தமாய்.

௩ கர்த்தரே, என் தீபத்தில்
எண்ணெய் பொழிந்து என்னில்
அந்தகாரம் நீங்கிட
அன்பின் சுவாலை கொளுந்த
ஆவியின் நல் ஈவை நீர்
பூர்த்தியாக அளிப்பீர்.

௪ எந்த நாழிகையிலே
நீர் வந்தாலும், யேசுவே,
உம்மையே நான் சந்தித்து,
கண்ணால் கண்டு ஆலித்து
வாழ, நீர் எந்நேரமும்
நான் விழிக்கத் தந்திடும்.

உசரு பாட்டு. S. M. 245

"Watch and pray that ye enter not into temptation."

நீங்கள் சோதனையில் அகப்படாதபடிக்கு விழித்திருந்து வேண்டுதல் செய்யுங்கள். மத். உசா. சக.

க நன்ருய் விழிப்பவன்
ஆனந்தஞ் சுகிப்பான்;
விழிப்பில்லாமல் வாழ்பவன்
மா கஸ்திப்படுவான்.

உ ஏவாள் ஓர் கனியை
பொசித்ததாலேயே,
கர்த்தாவின் சாப ஆக்கினை
யார்மேலும் வந்ததே.

ங விழிப்பில்லாதோனாய்
அத்தன்மையாகத்தான்
தீமைக்குட் போகில் நித்தமாய்
நான் வேகக்கூடுமாம்.

ச இதை நான் எண்ணினால்
என் தேகம் ஆவியும்
பயம் அடைந்து ஏங்கலால்
முற்ருக நடுங்கும்.

ரு விழித்த கர்த்தரே,
என்மேல் இரங்குவீர்;
உமக்கொப்பாய் விழிக்கவே
சகாயம்பண்ணுவீர்;

உசசா பாட்டு. 7's. 246

"Watch unto prayer."

சாவதானமாயிருந்து, பிரார்த்தனைபண்ணுங்கள். க பேது. ச. எ.

க நெஞ்சமே, நீ விழிப்பாய்,
தீயனுக்கு எதிர்ப்பாய்;
சூட்சமுள்ள பாதகன்
உன்னை வெல்லத் தேடுவான்.

உ எந்தக் காரியங்களும்
வேண்டலாலே முடியும்;
ஆதலால் நீ யேசுவை
நோக்கிக் கேள் ஒத்தாசையை.

௩ வென்றேனென்று எண்ணாதே,
போர் செய்யாமல் விடாதே;
சாகுமட்டும் சகிப்பாய்,
பட்டோனாக வெல்லுவாய்.

உசஎ பாட்டு. S. M. **247**

"*Be sober, be vigilant, because your adversary the devil,*" *&c.*

தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருங்கள்; விழித்திருங்கள், உங்கள் விரோதியாகிய பிசாசானவன்—க பேதுரு. ரு. அ.

க ஆன்மாவை ரட்சிக்க
முயற்சிபண்ணுவாய்;
பசாசு செய்யும் கண்ணிக்கு
விழித்துத் தப்புவாய்.

உ உபாயத்துடனே
விழுங்கும் சாத்தான்தான்
கெடுத்துப் போடும்படிக்கே
எத்தீங்கும் பண்ணுவான்.

௩ மிகுந்த தீமையால்
நிறைந்த லோகமும்
நல் ஆசை நூர்க்க, மாய்கையால்
விடாமல் தெண்டிக்கும்.

ச மன்றாட எங்களை,
கர்த்தாவே, எழுப்பும்;
விழிக்க ஞானப் பெலத்தை
என்றைக்கும் தந்திடும்.

உசஅ பாட்டு. L. M. 248

Watchfulness and prayer.

விழிப்போடே பிரார்த்தித்தல்.

க இகத்தில் உன் தலைவர்போல்
உபத்திரம் சகித்துக்கொள்,
பொல்லாத ஏது தோன்றிடில்
பெலன் தரித்தெதிர்த்து நில்.

உ எல்லாத்திலும் நல்லறிவை
கொடுக்கும் தேவவார்த்தையை
எந்நேரமும் தியானித்து,
பிரார்த்தித்தே விழித்திரு.

ௗ வென்றோனுக்காக மோட்சத்து
கிரீடமே வைத்தாயிற்று,
பொல்லாத மார்க்கமுள்ளவன்
இகழ்ச்சிகொண்டு நீங்குவான்.

ச இரக்கமுள்ள யேசுவே,
நான் மோட்ச ராச்சியத்திலே
உம்மோடிருக்க என்றைக்கும்
என்னில் தரித்தே ரட்சியும்.

எ—ம் பிரிவு.

பரிசுத்த ஆவி.

உசக பாட்டு. C. M. **249**

"Holy men spake as they were moved by the Holy Ghost."

தேவனுடைய பரிசுத்த தாசர் பரிசுத்தஆவியினால் உணர்த்தப்பட்டு வசனித்தார்கள். உ பேது. க. உக.

க தேவாவி, வாரும், எங்களை
எழுப்பிக்கொண்டிரும்;
சிநேகம், சீவன், பெலனை
ஈவாக அளியும்.

உ தேவாவி, வாரும், உம்மாலே
வேதியர் பேசினார்;
வேதத்தைக் கூறவும் நீரே
ஒன்றான திராணியார்.

௩ வானப் புறாவே, எங்களில்
இறங்கித் தங்கிடும்;
இருட்டை நீக்கி, மனதில்
வெளிச்சங் கற்பியும்.

ச நீர் சோதியாகத் தோன்றினால்,
கர்த்தாவை அறிவோம்;
தேவன்பின் பூரணத்தினால்
பரத்திற் சேருவோம்.

உருய பாட்டு. L. M. **250**

"He shall lead you into all truth."

சகல சத்தியத்திலும் உங்களை உட்படுத்தி நடத்துவார். யோவா. ௰சு. ௰௩.

க கர்த்தாவின் சுத்த ஆவியே;
நீர் எங்கள் ஆத்துமாவிலே
இறங்கி, மோட்ச வழியாய்
நம்மை நடத்துந் தயவாய்.

௨ உம்மாலே நாங்கள் சீர் பெற்றோம்,
தெளிந்த நேஞ்சை அடைந்தோம்;
நற்குணம் நடை யாவையும்
திருத்தமாய்ச் செய்தருளும்.

௩ நீர் தெளிவிக்கும் வார்த்தையே
எப்போதும் எங்கள் நெஞ்சிலே
வேரூன்றச் செய்து, பெலனும்
நற்கிருபையும் அளியும்.

௪ பிதாக் குமாரன் ஆவியே,
திரியேக தெய்வம் உம்மையே
பணிந்து போற்ற, எப்போதும்
நல்வாக்கை எமக்கருளும்.

உருக பாட்டு. 8.7.4. **251**

"Breathe upon these slain that they may live."

கொலையுண்டவர்களாகிய இவர்கள் சீவிக்கும்படி இவர்கள்மேல் ஊது. எசே. ௩௭. ௯.

௧ மானிடரெல்லாருங் கூடி
தங்கள் சொந்தப் புத்தியால்
யோசித்தாலுந் தேவ ஆவி
உண்மையைக் கொடாவிட்டால்,
ஒன்றும் நன்றாய்
செய்ய எதுவில்லையே.

௨ ஆ! கர்த்தாவே, உம்முடைய
வார்த்தையை நான் சாலவும்
எங்குங்கூற என்னுடைய
நெஞ்சிலே பிரகாசியும்;
அன்பின் தீபம்,
சோதி வீச அருளும்.

௩ இவ்விதம் நடந்துகொள்ள
யேசுவே, தேவாவியை

என்னிடத்தில் நீர் கொடுக்க
வேண்டும்; இவ்விருப்பத்தை
நீருங் கண்டு
கொள்ளும், நற் சகாயரே!

உருஉ பாட்டு. P. M. 252

"The Spirit of promise."

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியானவர். எபே. க. ௰ரு.

க தேவ ஆவியே,
பூர்வநாளிலே
பல பாஷை பேசும் நாவும்
மேன்மையான வரம் யாவும்
உம்மால் வந்ததே,
தேவ ஆவியே.

உ மாறுச் சுவாமி நீர்,
இங்குந் தேவரீர்,
எங்கள் நெஞ்சில் தீயாய் வந்து,
பாவம் பட்சித்தனல் தந்து,
போற்றும் நாவையும்
கொடுத்தருளும்.

ங சத்திய ஆவியே,
போதகர் நீரே;
கிறிஸ்தின் அருமையைக் காட்டி,
அவர் சாயல் என்னை மாற்றி,
ஞானம் ஈயுமே,
சத்திய ஆவியே.

ச ஜீவ ஊற்று நீர்
என்னில் ஊற்றுவீர்;
சுத்தங் கெட்ட சுபாபம் நீக்க,
ஆத்துமாவின் தாகந்தீர்க்க,
ஜீவ ஊற்று நீர்
என்னில் ஊற்றுவீர்.

௫ தேற்றரவாளனே,
இந்த நெஞ்சிலே
ஐயம் நீங்கி, இச்சை மாள,
தேவ சமாதானம் ஆள,
வாசம்பண்ணுமே,
தேற்றரவாளனே.

உ௫௩ பாட்டு. 6. 4. 253

"*Come Holy Ghost.*"

பரிசுத்தஆவியை வேண்டுதல்.

க கர்த்தாவின் ஆவியே,
அடியார் நெஞ்சிலே
இறங்குவீர்;
நீரே என் விருப்பம்,
எல்லா நற்குணமும்
விடாச் சந்தோஷமும்
உண்டாக்குவீர்.

உ தேய்வீக வார்த்தையே
எங்கும் பரம்பவே
நீர் காரணர்;
எல்லாருந் தாழ்மையாய்
குமாரன் வழியாய்
வணங்கும்படிக்காய்,
நீர் செய்பவர்.

௩ நல்லோர்கள் அடையும்
மெய்ஞ்ஞானம் அருளும்,
உம்மாலே தான்;
மா தேவனே, என்னில்
நீரே தரித்திடில்,
எல்லாச் சன்மார்க்கத்தில்
நிறைவுண்டாம்.

உருச பாட்டு. 8. 7. 4. **254**

"Thy Spirit is good; lead me into the land of uprightness."

உம்முடைய தயையுள்ள ஆவி செவ்வையான தேசத்தில் என்னை நடத்துவாராக. சங். ாசரு. ய.

க வாரும், தேவ ஆவி வாரும்,
எங்கள் ஆத்துமத்திலே
தேவ சீவ நன்மை தாரும்,
வாரும், சுத்த ஆவியே,
ஞான தீபம்
உம்மால் தானே ஆகுமே.

உ எங்கள் நெஞ்சில் நல்ல புத்தி
தேவபத்தி தோன்றவே,
அதை நீர் நன்றாய்த் திருத்தி,
தப்புச் சிந்தை யாவுமே
மாற்ற வாரும்,
நல்ல தேவ ஆவியே.

ரு மோட்ச மார்க்கம் அறிவித்து,
எவ்வகை விரோதமும்
நீக்கி, எங்களைப் பாலித்து,
நல்லோராக்கியருளும்.
கால் முடங்கி
போகில், நீரே ரட்சியும்.

ச நெஞ்சு எம்மிலே கலங்கி,
நாயனே, இரட்சியும்
என்று கெஞ்சும் போதிரங்கி,
எம்மைத் தேற்றிக்கொண்டிரும்;
துன்பம்போக
நீர் சகாயராயிரும்.

உ௫௫ பாட்டு. C. M. 255

"Open Thou mine eyes."

என் கண்களைத் திறந்தருளும். சங். ௱௰௯. ௰௮.

க தேவாவியே, இரக்கமாய்
என்னிற் பிரகாசியும்;
என் நெஞ்சின் இருளை அன்பாய்
விலக்கித் தேற்றிடும்.

உ இயேசு தேவ முகத்தை
அன்பாகக் காண்பியும்;
நான் உம்முடைய சித்தத்தை
உணரப்பண்ணிடும்,

௩ அநேக காலம் பாவத்தில்
நான் கேடாய் அலைந்தேன்;
நீரோ என் கேட்டை நீக்கிடில்,
கர்த்தாவில் களிப்பேன்.

௪ என் துக்கமான நெஞ்சத்தை
சந்தோஷிப்பித்திடும்;
என் நொறுங்கிய உள்ளத்தை
நீர் சொஸ்தப்படுத்தும்.

௫ தேவாவியே, இரக்கமாய்
என் நெஞ்சில் தங்கிடும்;
பிசாசின் அதிகாரத்தை
விலக்கி ஆண்டிடும்.

உ௫௬ பாட்டு. C. M. 256

The grace of the Holy Spirit.

தேவாவியின் வரத்தைத் தேடுவது.

க நல்லாவியே நான் பாழ் நிலம்,
இரக்கமாயிரும்;
ஆ! யேசுவினிமித்தியம்
என்னிற் பிரகாசியும்.

௨ இருள், பகை, விரோதமும்
உம்மாலே நீங்கவே,
நற்புத்தி, அன்பு, சாந்தமும்
உண்டாக்கும், ஆவியே!

௩ என் நெஞ்சைக் கிறிஸ்துவின் சாயலாய்
படைத்துக் காத்திடும்;
எல்லாரையும் இரக்கமாய்
திருப்பி, ஆண்டிடும்.

௪ சத்தியமுள்ள மார்க்கத்தில்
நிலைமையாகவும்
நடக்கப்பண்ணி, மோட்சத்தில்
என் ஆவியை எடும்.

உருஎ பாட்டு. C. M. 257

"He shall baptize you with the Holy Ghost."

அவர் பரிசுத்தஆவியினாலே உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்,
மத். ௩. ௰க.

௧ புறுவைப் போன்ற ஆவியே,
எழுப்ப வந்திடும்;
நெஞ்சத்தில் அன்பின் சுவாலையே
உண்டாகச் செய்திடும்.

௨ சிற்றின்ப அற்பப் பொருளை
ஆசித்துத் தேடினோம்;
யாமாக மோட்ச அருளை
அடைய அறியோம்.

௩ ஒத்தாசை நீர் செய்யாவிட்டால்,
அடியார் விண்ணப்பம்,
முயற்சி, கீதங்கள் எல்லாம்
வீணாக முடியும்.

௪ நல் நேசரே, இச்சீரில் யாம்
என்றும் இருக்கவோ?
கல்நெஞ்சுருக்க யேசு தாம்
அன்புள்ளோர் அல்லவோ?

ரு புறுவைப்போன்ற ஆவியே,
எழுப்ப வந்திடும்;
சுத்தாங்க அன்பின் பெலனே
விளங்கக் கற்பியும்.

உருஅ பாட்டு. L. M. 258

Influence of the Holy Spirit.

தேவஆவியின் வரங்களைக்குறித்துப் பாடியது.

க தேவாவியே, என் நெஞ்சை நீர்,
திருப்பிப் புதிதாக்குவீர்;
என்னென்ன நன்மை என்னிலே
உண்டோ, உம்மாலேதான் உண்டே.

உ உம்மால் கர்த்தாவை அறிவேன்,
உம்மால் "பிதாவே" என்கிறேன்;
நீர் என்னைச் சத்தியத்திலே
முடியவுந் தற்காப்பீரே.

௩ என் பாவக் கடன் யாவையும்
நீக்கி, என் நெஞ்சைக் கழுவும்;
என் விசுவாசம் நேசமும்,
மென்மேல் வளரச் செய்திடும்.

ச இவ்வருள் செய்யும் உமது
அளவிறந்த அன்புக்கு
இப்போதெப்பேதும் உமக்கே
இஸ்தோத்திரம் உண்டாகவே.

உருகூ பாட்டு. 8. 7. 4. 259

"Not by might, nor by power, but by my spirit," &c.

பெலத்தினுல் அல்ல, நமது ஆவியினுலே சித்தியாகும். சகரி. ச. கூ.

க வல்ல ஆவி, உம்மை அன்றி
குணமாக்க வல்லோன் ஆர்?
மாந்தர் பிரசங்கித்தாலும்
அவபத்தர் கேட்பாரா?
வல்ல ஆவி,
உம்மால் கேட்டுச் சேர்வார்.

உ சோதிதோன்றச் செய்வோமென்று
வேதத்தில் உரைத்தீரே;
இப்போ வந்து, இருள் நீக்கும்.
நாங்கள் விடுங் கண்ணீரை
நல்ல ஆவி,
களிப்பாகச் செய்வீரே.

௩ உம்மால் அன்றி எங்கள் செபம்
உழைப்பெல்லாம் அவமாம்;
எங்கள் ஆசை உம்மால் ஆகும்,
உம்மை மெய்யாய் நம்பலாம்;
உண்மை ஆவி,
பூமி எங்கும் ஆண்டிடும்.

உசூ௰ பாட்டு. L. M. 260

"He will reprove the world of sin."

அவர் பாவத்தைக்குறித்து உலகத்தைக் கடிந்துகொள்வார்.
யோவா. ௰சு. ௮.

க இறங்கும், தேவ ஆவியே,
அடியார் ஆத்துமாவிலே;
பரத்தின் நன்மை தந்திடும்,
மிகுந்த அன்பை ஊற்றிடும்.

உ உம்மாலே தோன்றுஞ் சோதியால்
எத்தேசத்தாரையும் அன்பால்
சம்பந்தமாக்கி, யாவர்க்கும்
நம்பிக்கையைக் கொடுத்திடும்.

௩ பரத்தின் தூய தீபமே,
உம்மாலே யேசுக்கிறிஸ்துவை
எல்லாரும் பற்றிக்கொள்ளவும்
துதிக்கவுஞ் செய்தருளும்.

௨௬௧ பாட்டு. L. M. 261

"The descent of the Holy Spirit on the day of Pentecost."

பெந்திக்கொஸ்துநாளில் பரிசுத்தஆவி இறங்கினது.

க இரட்சகர் எழுந்த பின்,
தேவாவி சீஷர் நெஞ்சத்தில்
இறங்கி வரம் ஈந்ததால்,
துதி உண்டாகும் மாந்தரால்.

உ அப்போது தேவ ஈவுகள்,
மா மேன்மையான திராணிகள்,
அவர்களுக்குண்டாயின,
அவை மற்றோர்க்குந் தோன்றின.

ங அப்போதனேகம் பேர்களே
மெய்யானதைக் கண்டார்களே;
இயேசுபட்ட சாவுக்கு
தகுந்த பலன் தோன்றிற்று.

ச கர்த்தாவே, அந்த நாளிலே
நடந்ததற்கொப்பாகவே,
இப்போதனேகம் பேர்களும்
மனந்திருப்பச் செய்திடும்.

௨௬௨ பாட்டு. 8. 7. 262

"The Spirit helpeth our infirmities."

ஆவியானவரும் நம்முடைய பெலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். உரோ. அ. உ௬.

க எங்களைப் பிதாவிடத்தில்
முழுப் பத்தியோடேயும்
சேரப்பண்ணி, ஆத்துமாவில்
ஆவியைத் தரித்திடும்.
அதினாலே ஊக்கம் அன்பும்
நம்பிக்கையும் பெருகும்.

உ மோட்ச பாதையில் நிலைக்க
பண்ணும், வல்ல ஆவியே,

லோக மாயத்துக்கு நீங்க
சோதி தோன்றச் செய்வீரே.
நாங்கள் உம்மைச் சார்ந்து, என்றும்
வெல்லத் தயை தந்திடும்.

ஙு நெஞ்சின் சுவாலை நூர்க்க, தேடி
சாத்தான் பார்க்கும் போதெல்லாம்,
நீரே வந்து, அதைப் பேணி,
உம்மைப் பற்றி நம்பலாம்
என்று பேயை அறத் தள்ளும்,
ஊக்கம் அன்பாய் அருளும்.

ச சாகுங் காலம் வர, நாங்கள்
நித்திய மகிழ்ச்சியாய்
வாழ்வோமென்றும் மோட்சவான்கள்
மூழ்கும் இன்பம் பூர்த்தியாய்
சேர்வோமென்றுங் களிக்கவே
தாரும், நல்ல ஆவியே!

உருங பாட்டு. L. M. 263

"He shall give you another Comforter."

வேறு தேற்றுகிறவனை உங்களுக்கு அனுப்புவார். யோவா. யச. யசு.

க அடியார் நெஞ்சைத் தயவாய்
திருப்பித் தேற்றி, உமக்கே
பொருந்தும் அலங்காரமாய்
படையும், தேவ ஆவியே!

உ தேற்றரவாளர் தேவரீர்,
இந்நெஞ்சுக்குள் பிரவேசியும்;
பரத்தின் ஈவைத் தந்து, நீர்
இறங்கித் தேற்றி அருளும்.

ஙு துக்கத்தை நீக்கும் ஆவியே,
மெய் ஆறுதலின் காரணம்,
மெய்வேத வாக்கின் பலனை
இப்போது வந்து தந்திடும்.

௪ குறித்த நல்ல புத்தியை
எமக்கு அன்பாய் அருளும்;
விழிப்புண்டாக்கி, மோட்சத்தை
யாம் சேரும்படி நடத்தும்.

௫ களிப்பிலும் தவிப்பிலும்
பிழைப்பிலும் இறப்பிலும்
எப்போதும் ஊக்கமாகவே
இருக்கச் செய்யும், ஆவியே!

௨௬௪ பாட்டு. 6. 4. **264**

"Uphold me by thy free Spirit."

உமது உற்சாகமான ஆவியினால் என்னைத் தாங்கிக்கொள்ளும்.
சங். ௫௧. ௰௨.

௧ விழிக்க துணையே,
கர்த்தாவின் ஆவியே,
இரக்கமாய்
மெய்ப் பாதை காண்பியும்,
திடம் நல் வரமும்
எனக்குத் தந்திடும்
மா தயவாய்.

௨ துன்பத்தில் சொஸ்தமே,
இருட்டில் தீபமே,
பிரகாசிப்பீர்;
என் இருள் நீக்கவும்
சகாயம்பண்ணவும்
எப்பேதும் தேற்றவும்
நீர் தோன்றுவீர்.

௩ பொல்லாத ஆவியை
எதிர்க்கும் வல்லமை
தந்தருளும்;
என் மீட்பர் நாமத்தில்
வென்று, சன்மார்க்கத்தில்
நிலைக்க, நெஞ்சத்தில்
நீர் தங்கிடும்.

உசரு பாட்டு. L. M. 265

Sending forth the Apostles.

அப்போஸ்தலர் அனுப்பப்படல்.

க தேவாவியின் வரங்களால்
அப்போஸ்தலர் நிறைந்ததால்,
அநேகம் பாஷைகளிலே
ரட்சிப்பைக் கூறினார்களே.

உ மெய்வேத வார்த்தை சகல
புறத்திலும் பிரசங்கிக்க,
அன்புள்ள யேசுதேவனார்
அவர்களை அனுப்பினார்.

ங தெய்வீக ஆவியென்கிற
வரத்தை வாங்கச், சகல
நல்லறிவையுந் தருவார்:
திடன் அருள் உண்டாமென்றார்.

ச துரைகள் முன்னே உங்களை
நிறுத்தும்போது, ஞானத்தை
பகரும் வாயைத் தருவார்,
பகர்வர் ஆவிதானென்றார்.

ரு சுத்தாங்கத்தின் வரங்களை
கொடுக்குந் தேவ ஆவியை
எல்லா வணக்கத்துடனே
துதித்தல் செய்யும், மாந்தரே!

உசசு பாட்டு. 7's. 266

Light and comfort from the Spirit.

பரிசுத்தஆவி பிரகாசிப்பித்துத் தேற்றுதல்.

க பரிசுத்த ஆவியே,
பாவ இருள் போக்கியே,
என் இருதயத்திலே
காலப்பண்ணும் சோதியே.

௨ யேசுவின் நல் முகத்தை
தரிசனம் பண்ணவே
அருளி, நல் உண்மையை
காட்டும் சுத்த ஆவியே.

௩ சாத்தான் என்னை ஆண்டது,
பாவம் என்னில் மிஞ்சிற்று,
என்னைச் சுத்தம்பண்ணியே
ஆண்டுகொள்ளும் ஆவியே.

௪ தேவ களிப்புடனே,
என்னை நிறைவாக்கியே,
நொறுங்குண்ட நெஞ்சையும்
ஆற்றித்தேற்றி அருளும்.

௫ அடியேனின் நெஞ்சிலே
வாசம்பண்ணி நீர்தாமே
என்றும் மேன்மையாகவே
ஆளும் தேவ ஆவியே.

அ—ம் பிரிவு.

திருச்சபை.

உசுஎ பாட்டு. L. M. **267**

"That they may be one as we are."

நம்மைப்போல ஒன்ருய் இருக்கும்படி இவர்களை உமது நாமத்தில் காத்துக்கொள்ளும். யோவா. ௧எ. ௧௧.

க கர்த்தாவை விசுவாசித்து
பிறரையுஞ் சிநேகித்து
தேவாபிஷேகம் பெற்றவர்,
மற்றெல்லாரிலும் பாக்கியர்.

உ இரட்சை பெற்றுக்கொண்டாராய்,
வாக்கெண்ணங் கிர்த்தியம் ஒன்ருய்
நடந்து, நித்த தோத்திரம்
செலுத்தும் நெஞ்சு காரியம்.

ஙு சபையார் வெவ்வேருகவே
சிதறுண்டு போனூர்களே,
எங்குள்ள யாரும், தேவரீர்,
ஒன்ருகச் சேரப்பண்ணுவீர்.

ச நம்பிக்கை ஸ்நானமும் ஒன்றே,
மெய்ப்பத்தி உள்ளோராகவே
தேவாவியால் நிறைந்தோராய்
நீர் சேர்த்துக்கொள்ளுந் தயவாய்.

உசுஅ பாட்டு. 7's. **268**

"And there shall be one fold and one Shepherd."

ஒரே ஆட்டுக்கூட்டமும், ஒரே மேய்ப்பனும் உண்டாயிருக்கும். யோவா. ௧. ௧௬.

க மேய்ப்பரே, நீர் கிருபை
செய்து, சிதறுண்டதை

மந்தையாக்கி, யாவையும்
சேர்த்தணைத்துக்கொண்டிரும்.

உ எங்கள் நெஞ்சில் தேவரீர்
நற்குணங்கள் ஆக்குவீர்;
தேவ அன்பை அதிலே
ஊற்றும், யேசுக்கிறிஸ்துவே!

௩ நீரே நெஞ்சுடன் நெஞ்சை
கட்டி, அன்பின் பெலத்தை
எங்கும் எந்த நாளிலும்
தோன்றத் தயை செய்திடும்.

௪ மூன்றொன்றாகிய பிதா
சுதன் ஆவியும் எல்லா
நாளும் ஒருமைப்படும்
போல் இம்மந்தையாக்கிடும்.

உ௬௯ பாட்டு. 7's. **269**

"How good and pleasant a thing it is for brethren to dwell together in unity."

சகோதரர் ஐக்கியத்துடனே வாசம்பண்ணுவது எவ்வளவு உத்தமமும் இன்பமுமாயிருக்கின்றது. சங். ௱௩௩. ௧.

௧ ஆ! சகோதரர் ஒன்றாய்,
ஏகமான சிந்தையாய்,
தேறி நின்றால், எத்தனை
நேர்த்தியான மாட்சிமை.

உ அன்புள்ளோர்க்கு ஆண்டவர்
இன்பம் யாவும் ஈகுவார்;
அவ்விடத்தில் என்றைக்கும்
சீவ வாழ்வு பெருகும்.

௩ உண்மையுள்ளதாகிய
வேத மேன்மை விளங்க
எங்கள் வேண்டுதலையே
அன்பாய்க் கேளுங், கர்த்தரே!

உஎம பாட்டு. 8. 7. 4. **270**

The Church's Warfare.

திருச்சபை போராடல்.

க கிறிஸ்துவைப் பின்செல்லுஞ் சபை
முற்சிநேகம் பிடிப்பாய்;
கிறிஸ்துவில் வேரூன்றி, ஏறி,
நின்றுகொள்ளு விரைவாய்.
திடமாக
மோட்ச மார்க்கம் பற்றிக்கொள்.

உ செல்லுகையில் துன்பத்துக்கு
நீ அஞ்சாமல் வீரமாய்
சீவ முடியைத் தரித்து,
போகாப்படி விழிப்பாய்
உண்மையான
நன்மையை விடாதிரு.

ந லோகத்துள்ள வாழ்வு, மேன்மை
என்று சிந்தியாதிரு;
நீ பிசாசு வீசும் மாயை,
ஏவும் இச்சை வெறுத்து,
லோக இன்பம்
துன்பமென்றறிந்துகொள்.

ச சீயோனே, மற்றோர்கள் போலே
நீதியைத் தள்ளாதிரு;
நீதிக்காகப் பேயினாலே
துன்பம் தோன்றில் வென்றிடு.
கிறிஸ்துநாதர்
உன்னை மேன்மையாக்குவார்.

ரு மோட்ச மார்க்கத்தில் நடந்து
கொண்டிளைப்பில்லாதிரு;
தேவதூதர் உன்னைப் பார்த்து
கொண்டுபோகக் காத்திரு.
சாவுமட்டும்
சோர்வில்லாமல் தேறிப்போ.

உஎக பாட்டு. L. M. 271

A prayer for the Church's deliverance from her enemies.

திருச்சபையைச் சத்துருக்களினின்று இரட்சிக்க வேண்டுமென்பது

க பிதாவே, சத்துராதியின்
சத்தியைப் பார்த்து, வேதத்தின்
வெளிச்சம் எங்கள் யாரிலும்
தரிக்கத் தயை காண்பியும்.

உ எழும்பும், தெய்வ மைந்தனே,
ராசாதி ராசா யேசுவே,
புகழ்ச்சி உமக்கென்றைக்கும்
உண்டாகச், சபை ரட்சியும்.

ஈ திடத்தைப்பண்ணும் ஆவியே,
துன்னுளில் எங்கள் நெஞ்சிலே
தரித்து, எந்த இக்கட்டும்
அகன்றுபோகக் கற்பியும்.

ச பகைஞர் யோசனையையே
அவத்தமாக்குந் திரியேகரே,
எதிர்த்து நிற்கும் சேனை, நீர்
முறிந்துபோகப்பண்ணுவீர்.

உஎஉ பாட்டு. P. M. 272

The triumph of the Gospel.

சுவிசேஷம் செயமடைதல்.

க பலத்த தேவ வார்த்தையே
எல்லா இடமுமாக,
ரட்சிப்பின் மா விசேஷமே
எல்லாருக்குள்ளுமாக,
வர்த்திக்கப்பண்ணும், யேசுவே
எல்லாரையும் ரட்சிக்கவே
உலோகத்திற் பிறந்தீர்.

௬ கர்த்தாவே, பொய் மதங்களை
நியாயந் தீர்த்தழித்து,
நாருக்கு மெய்ஞ் ஞானத்தை
அன்பாகவே அளித்து,
எல்லா வகைத் துன்மார்க்கமும்
ஒழிந்துபோகச் செய்திரும்!
அதற்கே பாடுபட்டீர்.

௭ கர்த்தாவே, எந்தத் தேசமும்
உமக்குள்ளாவதாக;
எல்லா வகைச் சனங்களும்
துதித்தல் செய்வதாக.
நீர்மாத்திரம் மெய்த் தேவனே,
புகழ்ச்சி உமக்கேற்றதே!
அதை நீர் வாங்கிக்கொள்க.

௨௭௩ பாட்டு. 7's. 273

The spread of the Gospel.

சுவிசேஷப் பிரபலியம்.

௧ மா அன்புள்ள யேசுவே,
உம்முடையோர் பேரிலே
நீர் இரங்கி, யாரையும்
சீர்திருத்தி, ரட்சியும்.

௨ செயங்கொண்ட தேவரீர்
அதைக் கூறக் கற்பித்தீர்;
மீட்கப்பட்ட யாருக்கும்
பேயை வெல்லத் தந்திடும்.

௩ எங்கும் மானிடர்களே
தங்கள் கேட்டைக் காணவே
புத்தியைக் கடாட்சியும்,
கேட்டை நீக்கி ரட்சியும்.

௪ வேதத்தின் விசேஷத்தை,
அதின் மேன்மை, மகிமை,

மாந்தர் யாரும் பார்க்கவே
செய்யும், நல்ல மீட்பரே!

உஎச பாட்டு. 8. 7. 4. **274**

"All nations shall serve Him."

சகல தேசத்தாரும் அவரைச் சேவிப்பார்கள். சங். எஉ. யக

க தேசத்தார்கள் யாரும் வந்து,
நல்ல மா விசேஷத்தை
கேட்டு, அதின் சோதி கண்டு,
சீர்கொள்வார்கள் என்றீரே.
ஆ! கர்த்தாவே,
சொற்படிக்குச் செய்திரும்.

உ வையகமெல்லாம் மிகுந்த
புத்தியீனமுள்ளது;
அதால் மாந்தர்க்குட்புகுந்த
கேடு மா பலத்தது.
ஆ! கர்த்தாவே,
மாந்தரை இரட்சியும்.

ந உம்முடைய வார்த்தை சொல்ல
எங்கும் போகும் சீஷரை
நீர் கடாட்சஞ் செய்து, நல்ல
புத்தி தாரும், மீட்பரே!
உமதாவி
போதகர்க்கு ஈந்திடும்.

ச வார்த்தை கேட்கும் ஊர்ச்சனங்கள்
உண்மை பற்றிக்கொள்ளவும்,
அங்கங்குள்ள பொய் மதங்கள்
பூதலத்தில் நீங்கவும்,
நீர் இரங்கி
ஆவி பொழிந்தருளும்.

உஎரு பாட்டு. L. M. 275

Superstition.

வீண் பத்தி.

க கர்த்தாவே, பூதலத்திலே
உண்டான கேட்டைப் பார்க்கவும்;
அங்குள்ள தேசத்தார்களே
இருளை விட்டு வரவும்.

உ நீரே மெய்த்தேவன்! மானிடர்
பொல்லாத இஷ்டமாகவே
பொன், வெள்ளி, மண், கல், வீரர்கள்
தேவர்கள் என்கிறுர்களே.

ங பலத்த யேசு கர்த்தரே,
அப்பொய்களை அகற்றுமேன்;
தெய்வீக வார்த்தையால் நீரே
துன்மார்க்கரை அதட்டுமேன்.

ச எல்லாரும் ஏக சித்தமாய்
மெய்த் தேவனுன உம்மையே
அறிந்து, கிறிஸ்தின்மேல் அன்பாய்
இருக்கச் செய்யுங், கர்த்தரே!

உஎசு பாட்டு. 8.7.4. 276

"*I will give Thee the heathen for Thine inheritance.*"

புறத்தேசத்தாரை உனக்குச் சுதந்தரமாகத் தருவேன். சங். உ. அ.

க இருளாலே மூடப்பட்ட
பர்வதங்கள் உற்றுப்பார்!
வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட
சோதி தோன்றச் செய்கிறுர்.
அதற்காக
சாலவும் மகிழ்ச்சிகொள்.

உ ஆ! கர்த்தாவே, இந்து தேசர்
கல்வியற்ற காப்பிரிகள்,

பிர்மர், சீனர், யூதர், கிரேக்கர்,
தீயோர், துஷ்டர், ஏழைகள்,
மற்றெல்லாரும்
உம்மைப் போற்றச் செய்திடும்.

ங கொல்கத்தாவில் பட்ட பாட்டை
கொண்டு மானிடர்களில்
அன்பு காட்டி, மா ரட்சிப்பை
செய்து, மோட்ச மார்க்கத்தில்
முன் நடந்து,
மோட்சத்தைச் சம்பாதித்தீர்.

ச அதைத் தேசத்தார் எல்லாரும்
காணச் செய்யுங், கர்த்தரே!
அந்தகாரமுள்ள யாரும்
அதாற் சீர்கொள்வார்களே.
நீர் சகித்த
சாவின் பலன் அதுவே.

ரு இந்தக்காலம் லட்சமான
பேர்கள் நன்மை சேர்ந்தது
உம்முடைய உண்மையான
அன்பினுலே ஆயிற்று.
அதற்காக
உமக்கே இஸ்தோத்திரம்.

உஎஎ பாட்டு. 12s. 11s. & 8s. **277**

"*The Prince of salvation in triumph is riding,*" *&c.*
பூலோகத்தின் மீட்பர் சிங்காசனம் ஏறி—

க பூலோகத்தின் மீட்பர் சிங்காசனம் ஏறி,
செங்கோலுஞ்செலுத்த மெய்யாய் வருவார்.
இச்செய்தி இப்போதும் எங்கெங்குமாய்த் தேற
பூவெங்கும் வர்த்திக்கச் செய்வார்.

உ தேசாதேசமாக அந்தந்தச் சனங்கள்
இராசாக்கள் கூட மா சந்தோஷமாய்
ஒரே கூட்டமாகப் பணிந்துகொள்வார்கள்,
என் யேசுவிடத்தில் அன்பாய்.

௩ பூலோகத்தார் யாரும் விண்ணோர்களைப்போலே
சுத்தாங்க வணக்கஞ் செலுத்திருப்பார்;
சங்கீதங்கள் பாடி, மகா களிப்போடே
மோட்சானந்த சாயல் கொள்வார்.

௪ பூலோகத்தின் மீட்பர் சிங்காசனம் ஏறி,
செங்கோலுஞ் செலுத்த, மெய்யாய் வருவார்;
விண் மண் தலத்தோருங் கெம்பீரமாய்த் தேறி,
முன்பின் சேனையாய்ப் பணிவார்.

௨௭௮ பாட்டு. 4 5s. & 2 9s. 278

"The Lord reigneth."

யெகோவா இராசரிக்கம்பண்ணுகிறார். சங். ௯௯. ௰.

௧ யெகோவா தாமே
சிறந்தவரே,
செங்கோலுஞ் செலுத்திருக்கிறார்;
தேசா தேசமாய்,
மகா நீதியாய்,
பூ யாவையும் ஆண்டுகொள்வார்.

௨ பாரேன், மாந்தரே,
சீயோன் சபையே,
கிருபை விளங்கச் செய்வார்;
தென்வடவழியாய்,
கீழ்மேற்றிசையாய்
அறிந்தோரையே அழைப்பார்.

௩ பூலோகத்தாரே,
வானோர்களுமே,
மா பூரிப்பாய்க் களியுங்கள்,
லோகா லோகமாய்,
ஞாயாதிபதியாய்,
ஆள்வார், யேசுவைப் பாருங்கள்.

உஎகூ பாட்டு. L. M. 279

"*I am the light of the world.*"

நான் உலகத்தின் ஒளி. யோவா. அ. ௰உ.

க மெய்ச் சோதியான யேசுவே,
இருளிலுள்ளோர் பேரிலே
உதித்து, மாந்தர் யாருக்கும்
வெளிச்சந் தோன்றக் கற்பியும்.

உ பொய்ப் போதகத்தால் யாருக்கு
தகாத சிந்தனை உண்டோ
அவர்கள் ஆத்துமாவிலே
மெய்ஞானந் தாரும், கர்த்தரே!

ஙு காணமற்போன பாவியை
அன்பாகத் தேடி, நெஞ்சத்தை
திருப்பிக் கொண்டிரட்சியும்,
நற்சித்தத்தைக் கடாட்சியும்.

ச அதற்கு வேதவாக்கியம்
எல்லாருடைய நெஞ்சிலும்
பெலன் உண்டாகச் செய்திடும்,
தேவாவியே, பிரகாசியும்.

உஅ௦ பாட்டு. L. M. 280

"*I will draw all men unto me.*"

எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்.
யோவா. ௰உ. ௩உ.

க ஆ! எங்கும் வெகுபேர்களும்
இந்நேரமாம் வரையிலும்
தேவன்பின் மேன்மையற்றோராய்
நடக்கிறார்கள் ஆவலாய்.

உ கர்த்தாவே, ஏழை மானிடர்
அலைந்திராமற் பாக்கியர்
உண்டாகவே, எப்போது நீர்
அவர்களுக்கிரங்குவீர்?

ரு இரங்குவேனென்றே சொன்னீர்,
அதற்குச் சீவனும் விட்டீர்;
விட்டும், அநேகம் மாந்தரே
அதை அணைக்கவில்லையே.

ச கொடுத்த வாக்குத்தத்தத்தை
முடித்து, நீர் விசேஷத்தை
உலோகத்தார் எல்லாருக்கும்
போதித்து, அருள் தந்திடும்.

உஅக பாட்டு. P. M. 281

"Who hath believed our report, and to whom is the arm of the Lord revealed."

எங்கள் போதனையைக் கேட்டு விசுவாசித்தவன் யாவன்? யெகோவாவின் புயம் ஆருக்கு வெளிப்பட்டது? ஏசா. டுங. க.

க ஆ! ஸ்வாமி, நீர் கடாட்சித்து,
பூலோகத்தாரைப் பாரும்,
நல்லோர்கள் சபை குறைந்து,
சன்மார்க்கர் தொகை தாழும்.
தெய்வீக வேத வார்த்தையின்
அருள் நிறைந்த மேன்மையில்
ஆர் பங்கைப் பெற்றுக்கொண்டார்?

உ வீண் தோற்றலான போதனை
நரர் சூதால் நடக்கும்;
நிசமில்லாத தப்பறை
அநேகரால் பிறக்கும்.
வெவ்வேறாய் உபதேசித்து,
இன் சொற்களாலே மந்தைக்கு
மா கேடுண்டாக்கினார்கள்.

௩ ஆ! கர்த்தரே, இரங்குவீர்,
பாழானவர்களுக்கும்
ரட்சிப்புண்டாகக் கற்பிப்பீர்,
நல்லோரின் நெஞ்சைத் தேற்றும்.
எல்லாருந் தேவ வார்த்தையை
மெய்யாக நம்புங் கிருபை
தாராளமாய்த் தந்திடும்.

உஅஉ பாட்டு. L. M. 282

"All nations shall call Him blessed."

சருவ தேசத்தாரும் அவரை வாழ்த்துவார்கள். சங். எஉ. ௰எ.

௧ வெற்றிசிறந்த சபையும்
மெய் விசுவாசமுள்ளோரும்
எல்லாருங் கூடிக், களிப்பாய்
துதியுங்கள் குமாரனே.

௨ ராசாக்களுக்கிராசாவே,
பூலோக பாவப் பலியே,
மரித்தெழுந்த தேவரீர்
செங்கோல் செலுத்தி ஆளுவீர்.

௩ பூமியிலுள்ள தேசத்தார்
அந்தந்தப் பாஷை பேசுவார்
எல்லாரையும் ஒன்றுகவே
இழுத்துக்கொள்வோமென்றீரே.

௪ கிரேக்கர், யூதர், தீவார்கள்,
இராயர், குடிசனங்கள்,
படித்தோர், மூடர், யாவரும்
வந்தும்மைப் போற்றச் செய்திடும்.

௫ பொன், வெள்ளி, முத்து, மாணிக்கம்,
பூமியின் மேன்மை யாவையும்
காணிக்கையாக உமக்கே
செலுத்தப்படும், யேசுவே!

௬ சிட்டிக்கப்பட்ட உலகம்,
கர்த்தாவின் சுத்த ஆலயம்,
எங்கெங்குமுள்ள தேசத்தார்
குமாரனை வணங்குவார்.

௭ வானங்களே! பூலோகமே!
சுத்தாங்க களிப்புடனே
பிதாக் குமாரன் ஆவிக்கும்
துதி செய்யுங்கள் என்றைக்கும்.

௨அ௩ பாட்டு. L. M. 283

"In his days Judah shall be saved."

அவருடைய காலத்தில் யூதா இரட்சிப்பைப் பெறுவான்.
எரே. ௨௩. ௬.

௧ மெய்விசுவாசமுள்ளோரே,
மெய் வேதம் பெற்றுக்கொண்டோரே,
பூர்வீகத்தில் யெகோவா தாம்
தெரிந்துகொண்ட சனமாம்.

௨ என்றாலும், வந்த யேசுவை
வெறுத்துக் கொன்ற பாவத்தை
செய்ததினால் எத்திக்கிலும்
சிதறிப்போனார் யாவரும்.

௩ போனாலுங், கர்த்தர் மீளவும்
உடன்படிக்கைப்படியும்
யாக்கோப்பின் வமிசத்தாரே
திரும்புவார்களென்றாரே.

௪ திரண்ட கூட்டங் கூட்டமாய்
பற்பல தேச வழியாய்
சீயோனில் வந்து சேருவார்,
கர்த்தாவின் பத்தராகுவார்.

ரு விழி, விழி, சீயோனைப் பார்,
விழுந்த மதில் கட்டுவார்;
கிரேக்கர், யூதர் ஏகமாய்,
செய்வார்களே விவேகமாய்.

சு கர்த்தாவின் மேன்மை சோதியும்
லோகத்தை முற்றும் நிறைக்கும்;
எங்கெங்குமுள்ள தேசத்தார்
தேவாபிஷேகம் பெறுவார்.

எ ஆ! களிகூர்ந்து, பாடுங்கள்,
சீயோனில் வாழ வாருங்கள்;
பூலோகம் வானம் புதிதாய்
சிஷ்டிக்கப்படுஞ் சுத்தமாய்.

கூ-ம் பிரிவு.

ஓ ய் வு நா ள்.

உஅச பாட்டு. L. M. 284

"Remember the Sabbath day to keep it holy."

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.
உ மோசே. உ௰. அ.

க இதே கர்த்தாவின் ஓய்வுநாள்,
விசாரம் வேலையை எல்லாம்
மறந்து, தேவ நன்மையை
சந்தோஷமாகவே நினை.

உ கர்த்தர் படைத்தவை எல்லாம்
அவர்க்கு மா புகழ்ச்சியாம்;
இருள் இருந்த பொழுதே
வெளிச்சந் தோன்றச் செய்தாரே.

ங தினமும் நம்மைப் போஷித்து,
விடாமல் தயை காண்பித்து,
இக்கட்டும் நீக்கிக் காக்கிறார்,
தப்பாத துணை ஈகிறார்.

ச விசேஷமாகப் பாவத்தை
நிவிர்த்தி செய்த மா தயை
அவர் விளங்கச் செய்ததால்,
ரட்சிப்பு மாந்தருக்குண்டாம்.

ரு அதின் மிகுந்த சோதியில்
இக்காலத்தோர் நடக்கையில்,
எல்லாரும் மா அன்பாகவே
அதைப் புகழ்வோமாகவே.

உஅரு பாட்டு. 8.7.4. **285**

"This is the day which the Lord hath made."

இது யெகோவா நியமித்த நாள். சங். ளக்சு. உச.

க வாழ்க சீயோன்! பத்தர் யாரும்
கீதம்பாடி வாழ்கவே!
நித்த மோட்சத்துக்கச்சாரம்
களிப்பான நாள் இதே.
துதியுங்கள்
நம்மை மீட்ட யேசுவை.

உ லோக சோலி, ஆசை, வேலை
அற யாரும் சுத்தமாய்,
சூழ நிற்கும் மோட்ச சேனை
துதிசெய்யுந் தன்மையாய்
சொல்வோமாக
நம்மை மீட்ட யேசுவை.

௩ கோடாகோடி தூதரோடும்
பாடிப்பாடித் துதிப்போம்;
மோட்ச கதி சோதியோடும்
தோன்றும், தோன்றும், நம்புவோம்
என்றென்றைக்கும்
அவர் சாயல் ஆகுவோம்.

ச லோகமெங்கும் தேசத்தார்கள்
வந்து சுத்த ஆவியால்
ஸ்நானம் பெற்றுத் துதிப்பார்கள்;
வானம் பூமி அவரால்
புதிதாகும்
அல்லேலூயா மாந்தரால்.

உஅசு பாட்டு. L. M. 286

"I was in the Spirit on the Lord's day."

கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன். வெளி. க. ௰.

க வெற்றி சிறந்த யேசுவே,
நாம் செய்த பாவம் யாவையும்
நிவிர்த்தி செய்த நாள் இதே;
புகழ்ச்சி கீர்த்தி என்றைக்கும்.

உ வானோர்கள் பாடும் ஓசையால்
வானம் நிரம்பிக் களிக்கும்;
தூதர்கள் யாரும் மா அன்பால்
சாஷ்டாங்கமாய் வணங்கவும்.

ங நாம் அங்கே சேர்ந்து பாடியே
மாட்சிமைகொண்டு வாழுவோம்;
பரத்திற் சேனையுடனே
வணக்கமாய்க் கொண்டாடுவோம்.

ச நீர் என்றும் வாழ்க! மீட்பரே,
விண் மண் தலத்தோர் யாவரும்
கீர்த்தனஞ் செய்து அன்போடே
வணங்கிப் பாடிப் போற்றிடும்.

உஅஎ பாட்டு. L. M. 287

"Upon the first day of the week," &c.

வாரத்தின் முதலாம் நாளில் சீஷர்கள் அப்பம் பிட்கும்படி
கூடி வந்தார்கள். அப். உ௰. எ.

க உன்னதமான கர்த்தரே,
இந்நாளை நியமித்தீரே;
அதில் நாம் உம்மை என்றைக்கும்
சேவித்துப் போற்றிக் களிப்போம்.

உ அடியார் உமதாளுகை,
இரக்கம், ஞானம், வல்லமை,
தெய்வீக அன்பு, நீதியும்
மென்மேல் உணர அருளும்.

௩ கெட்டோருக்கனுசாரமும்
ரட்சிப்பும் நித்த பூரிப்பும்
கிடைக்க, இன்று ரட்சகர்
கல்லறை விட்டெழுந்தவர்.

ச உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே,
நீர் எங்கள் ஆத்துமாவிலே
இருந்து, எந்த நன்மைக்கும்
அடியாரை உயிர்ப்பியும்.

ரு தேவாவியே, நல்லறிவும்
மெய் சாந்தம் சுத்தம் நேசமும்,
சபையில் நீரே சொல்லிய
நல் வார்த்தையாலே பெருக

௰-ம் பிரிவு.

பொதுவான தேவ ஆராதனை.

உ௮௮ பாட்டு. L. M. **288**

Public Worship.

தேவாராதனை.

க வாருங்கள் யாரும், கர்த்தனை
வணங்கிப் போற்றிப் பாடுங்கள்;
ஏகக் களிப்பாய் அவனை
நேசித்து நம்பிப் பற்றுங்கள்.

உ யெகோவா தாம் மெய்த்தேவனார்,
எல்லாரையும் படைத்தாரே;
அவர் அனாதி தந்தையார்,
எல்லாரையும் ரட்சித்தாரே.

௩ இவ்வண்ணமான நன்மையை
குறித்து இவ்விடத்திலே
சந்தோஷப்பட்டு நாயனை
துதித்தல் செய்யத்தக்கதே.

௪ தேவாவியே, இரக்கமாய்
நல்யோசனையைத் தந்திடும்;
எல்லாரும் அன்பு உண்மையாய்
நல் வார்த்தை கேட்கச் செய்திடும்.

உ௮௯ பாட்டு. S. M. **289**

Public Worship.

தேவாராதனை.

க அன்புள்ள யேசுவே,
எங்களிடம் வாரும்;
உமது வாக்கின்படிக்கே
விண்ணப்பத்தைக் கேளும்.

௨ இன்றிங்கே ஏகமாய்
கூடியிருக்கிறோம்;
விண்ணப்பந் துதி உண்மையாய்
செய்யத் துணிகிறோம்.

௩ இவ்வாலயத்திலே
இங்குள்ள தேசத்தார்
எல்லாரும் கூடி உம்மையே
வணங்கக்கடவார்.

௪ இத்தலம் பெத்தேல்தான்,
சாட்சியின் கூடாரம்,
சீயோனின் தேவ ஆலயம்
என்றே பேரிடலாம்.

௫ பிதா, சுதன், ஆவி
என்னும் திரியேகரே,
இன்றும் என்றும் எவராலும்
உமக்குத் துதியே.

௨௯0 பாட்டு. C. M. 290

Public Worship.

தேவாராதனை.

௧ கர்த்தாவே, இந்த நேரத்தில்
சமீபமாயிரும்;
இங்கும்முடைய கோவிலில்
பிரகாசமாயிரும்.

௨ இங்கும்முடைய வார்த்தையை
பிரசங்கஞ் செய்கையில்,
தேவாவியெங்கள் நெஞ்சத்தை
நிரப்பக் கேட்கையில்;

௩ செபத்தைக் கேளும், கர்த்தரே.
கடாட்சமாயிரும்;
தயையால் எங்கள் நெஞ்சமே
நிறையச் செய்திரும்.

௪ ஈற்றில் அநேகர் நன்றியாய்
"அங்கே குணப்பட்டோம்"
என்றும்மைப் போற்றும்படிக்காய்
கடாட்சங் காண்பியும்.

௨௯௧ பாட்டு. L. M. 291

Public Worship.

தேவாராதனே.

௧ நன்மேய்ப்பரே, இம்மந்தையை
கண்ணோக்கிப் பார்த்திரட்சியும்;
இக்கூட்டத்தின் ஆராதனே
அரோசியாமல் ஏற்றிடும்.

௨ விண்ணப்பஞ் செய்யத் தயவாய்
நற்புத்தி தந்து கேட்டிடும்;
தேவன்பைக் காட்டி ஏற்றதாய்
துதிக்கச் செய்திரட்சியும்.

௩ இவ்வாலயத்தில் மேன்மையாய்
பத்தியும் அன்பும் ஐக்கமும்
உண்டாயிருக்க, நிறைவாய்
கடாட்சம்பண்ணி அருளும்.

௪ உமது தேவ ஆவியால்
சனங்களுக்குப் புத்தியும்
தெய்வீக சிந்தையும் வந்தால்
மெய் வேத வாக்கு சித்திக்கும்.

௨௯௨ பாட்டு. L. M. 292

"*Where two or three are gathered,*" *&c.*

இருவராயினும் மூவராயினும் என் நாமத்தில்—மத். ௧௮. ௨௰.

௧ ஆ! இங்கே எங்களுடனே
இரும், அன்புள்ள யேசுவே,
மெய் வேதமுஞ் சன்மார்க்கமும்
இங்கே விளங்கச் செய்திரும்.

௨ இதே விசேஷக் காலமாம்;
கர்த்தாவே, வேதவாக்கியம்
தன் முத்திரைகளோடேயும்
தரிக்கக் கட்டளையிடும்.

௨௯௩ பாட்டு. 8. 7. 4. 293

"Desire the sincere milk of the word."

களங்கமில்லாத வாக்கியமாகிய பாலின்மேற் பிரியமாயிருப்பீர்களாக
க பேது. ௨. ௲.

க யேசு சுவாமி, தேவ வாக்கு
என்னும் பாலைத் தேடவே
வந்தோம்; நீரே எங்கள் நெஞ்சு
மண்ணை விட்டு உம்மையே
தேடிக்கொள்ள
அதை முற்றும் ஆண்டிடும்.

௨ உள்ளத்திலே அந்தகாரம்
விட்டுப்போக அருளும்;
சோதியென்னுந் தேவ வரம்
தந்து பிரகாசியும்.
ஈவு யாவும்
உமதாவியால் உண்டாம்.

௩ நாங்கள் இப்போ மாயம் அற
பாடிக் கெஞ்சி நெஞ்சிலே,
தேவ வாக்கைக் கேட்டுணர
ஊக்கந் தாரும், ஸ்வாமியே!
இன்றும் என்றும்
தேவரீரைச் சேவிப்போம்.

௨௯௪ பாட்டு. 8. 7. 4. 294

Approach to Christ.

கிறிஸ்துவைச் சேருதல்.

க தேவரீரே, தாழ்மையாக
திருப்பாதத்தண்டையே
தெண்டனிட ஆவலாக

வந்தேன், நல்ல யேசுவே,
உம்மைத் தேடி,
காணவே விரும்புவேன்.

உ வல்ல கர்த்தாவினுடைய
சுத்த ஆட்டுக் குட்டியே,
கருத்தோடே என்னுடைய
ஞான மணவாளனே,
உம்மைத் தேடி,
தரிசிக்கவே வந்தேன்.

ங என் பிரார்த்தனையைக் கேளும்;
அத்தியந்த பணிவாய்
கெஞ்சினேனைக் கேட்டுக்கொள்ளும்;
உம்முடைய பிள்ளையாய்
உம்மைத் தேடி,
உம்மிடத்தில் வருவேன்.

ச. லோக செல்வம் ஆசாபாசம்
வேண்டாமென்று தள்ளினேன்;
இந்த மாய்கை மனத்துக்கம்,
மெய்வாழ்வை விரும்புவேன்.
உம்மைத் தேடி
மோட்சங் கூட அடைவேன்.

உகரு பாட்டு. 8. 8. 6. **295**

" Bless the Lord, O my soul."

என் ஆத்துமாவே பராபரனை வாழ்த்துதல் செய். சங். ாசு. க.

க என் நெஞ்சமே, நீ கர்த்தனை
சங்கீதம் பாடி, நன்றியை
அன்போடே காண்பிப்பாய்;
என் சத்தம் சொஸ்தம் சீவனும்
உண்டாயிருக்கும் வரைக்கும்
விடாமல் துதிப்பாய்.

உ ஏதென்று கேளாதே; இதோ
அவர் தயாபரர் அல்லோ?

அன்பான சிஷ்டிகர்;
நீ கண்டடைந்த ரட்சிப்பை,
உன்மேல் விழுந்த தயவை
ஓயாமல் தந்தவர்.

ங இவ்வண்ணமாய்க் கடாட்சித்து,
உன் தோஷம் யாவும் அழித்து,
நேசித்த தேவனே
எத்தீங்கு வந்தும் கைவிடார்,
கிலேசம் நீக்கி ஆற்றுவார்
என்றெண்ணி, துதிசெய்.

ச என் கர்த்தரே, இதற்கு நீர்
என் நெஞ்சை ஏவக்கடவீர்;
விசேஷ தயவால்
உமக்கு வீடாய் ஏற்றிடும்,
அதில் வசித்துப் போஷியும்
தெய்வீக ஆவியால்.

உகூகூ பாட்டு. 8.7. **296**

"Ask and it shall be given to you."

வேண்டிக்கொள்ளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். மத். எ. அ.

க யேசு மீட்பர் செபங் கேட்பார்
என்ற வாக்கை நம்புங்கள்;
தயை கேட்போர் பெற்றுக்கொள்வார்
என்றறிந்து வாருங்கள்.
யேசுவண்டை நீங்கள் தேடும்
எந்த நன்மை வரமும்
ராசாவாயும் பூர்த்தியாயும்
ஈவார்.—இதே நிச்சயம்.

உ மேய்ப்பர் கிறிஸ்து உம்மைப் போற்ற
எங்கள் நெஞ்சை எழுப்பும்;
இன்றும் என்றும் வேண்டிக்கொள்ள
தயை காண்பித்தருளும்.
காதில் ஏறும் தேவ வாக்கை
நீரே ஆசீர்வதியும்;

சுத்தம், சாந்தம், மற்றும் நன்மை
அதால் தோன்றச் செய்திடும்.

உகஎ பாட்டு. L. M. **297**

Public Worship.

தேவ ஆராதனை.

க சபையே! ஏக சித்தத்தை
யடைந்து, பூரிப்பாகுங்கள்.
வணக்கமாகக் கர்த்தனை
எல்லாரும் வாழ்த்தல் செய்யுங்கள்.

உ பராபரன் மெய்த்தேவனார்
எல்லாரையும் படைத்தாரே,
அவர் கொடுத்த மைந்தனார்
எல்லாரையும் ரட்சித்தாரே.

ங இவ்வண்ணமான நன்மையை
குறித்து இவ்விடத்திலே
சந்தோஷப்பட்டு, நாயனை
துதித்தல் செய்யவேண்டுமே.

ச தேவாவியே! இரக்கமாய்
நல் யோசனையைத் தந்திடும்,
எல்லாரும் அன்பு உண்மையாய்
நல் வார்த்தை கேட்கச் செய்திடும்.

உகஅ பாட்டு. L. M. **298**

Divine Worship.

தேவ ஆராதனை.

க பராபரனே! உமது
ராசாசனத்தினண்டைக்கு
பணிந்து தாழ்மையாய் வரும்
இப்பாவியைத் தள்ளாதேயும்.

உ பிதாவே! என்னைத் தேவரீர்
செய்வீக ரூபாய்ச் சிஷ்டித்தீர்.
நீர்தான் என் சீவன், உம்மையே
அல்லாமல் மாண்டுபோவேனே.

ங திவ்விய மைந்தன் யேசுவே!
நீர் என்னை மீட்ட மீட்பரே,
அடியேன் தப்பத் தேவரீர்
பெலியாய்ச் சீவனை விட்டீர்.

ச தெய்வாவியே! என் நெஞ்சை நீர்
திருப்பிப் புதிதாக்குவீர்,
நற்சிந்தை யொன்றும் என்னிலே
உண்டோ, உம்மாலேதான் உண்டே.

ரு நீர் சோதனையில் தாங்குவீர்,
எத்துன்பத்திலுங் கைவிடீர்,
உம்மால்த் திடனும் வெற்றியும்
மனமகிழ்ச்சியும் வரும்.

உசுசு பாட்டு. L. M. 299

Divine worship.

தேவ ஆராதனை.

க இங்கே சபையிடத்திலே
இரும் அன்புள்ள யேசுவே,
மெய் வேதமும் சன்மார்க்கமும்
இங்கே விளங்கச் செய்திடும்.

உ இதே நற்பிரிய காலமாம்,
கர்த்தாவே, வேதவாக்கியம்
தன் முத்திரைகளோடேயும்
தரிக்கக் கட்டளையிடும்.

௩௱ பாட்டு. 8.7. 300

"Lord dismiss us with thy blessing."

தேவ ஆசீர்வாதத்தோடே எங்களை அனுப்பும்.

க தேவ ஆசீர்வாதத்தோடே
அடியாரை அனுப்பும்,
வார்த்தையாகும் அப்பத்தோடே
போஷித்து, வளர்ப்பியும்.

உ இப்போதும்மைத் தேடிக்கொண்டு,
மனதாரப் போற்றினோம்,
மோட்ச லோகத்தில் களித்து,
உம்மை வாழ்த்தித் தொழுவோம்

ஙக—ம் பிரிவு.

கர்த்தருடைய இராப்போசனம்.

ஙாக பாட்டு. 8. 7. **301**

The Eucharist.

நற்கருணை.

க வாரும், சுத்த ஆவி, வாரும்,
நம்மை ஏவியருளும்;
அப்பம் ரசம் இவையோடும்
தேவ ஈவைத் தந்திடும்.

உ சாந்தம், சுத்தம், நம்பிக்கையும்,
அன்பும் ஊறத் துணையாய்
இவ்விருந்து சித்தியாக்கும்
யாவருக்குந் தயவாய்.

ஙாஉ பாட்டு. L. M. **302**

Confession of unworthiness to partake of the Lord's Supper.

நற்கருணை உட்கொள்ள அயோக்கியத்தைச் சொல்லல்.

க என் பாவத்தின் நிவிர்த்தியை
உண்டாக்க அன்பாய்ச் சீவனை
கொடுத்துச் சிலுவையிலே
மரித்த தேவ மைந்தனே!

உ அநேக பாவஞ் செய்தோனும்,
மா நீசன், கெட்டோன், ஏழையாய்
உம்மண்டை சார்ந்த அடியேன்
இப்பந்தி சேரத் துணிவேன்.

௩ உமக்குவந்தோனாகவே
குணங்கள் தாரும், யேசுவே!
அசுத்தமான யாவையும்
நிவிர்த்தியாக்கி அருளும்.

௪ இருண்ட நெஞ்சில் ஒளியும்
மெய் ஞானம் விசுவாசமும்
கொடுத்தென், பாவக்குணமே
அடங்கப்பண்ணும், கர்த்தரே!

௩௦௩ பாட்டு. 8. 8. 6. 303

The Eucharist.

நற்கருணை.

௧ என் யேசுவே, மகிழ்ச்சியாய்,
அன்பு நிறைந்த மார்க்கமாய்
என்னைப் பார்த்தருளும்;
நீர் வான ராசா ஆகையால்,
வானத்தின் அப்பம் பானத்தால்
என் நெஞ்சைத் தேற்றிடும்.

௨ மெய் விசுவாசத்துடனே
சுத்தாங்கமுள்ளோனாகவே
இத்தேவ விருந்தில்
நான் சேர, தேவ ஆவியை
ஊற்றிட்டு, கிறிஸ்தின் நேசத்தை
உண்டாக்கும் உள்ளத்தில்.

௩ என் சீவ மேய்ப்பரான நீர்
இதை அன்போடே கற்பித்தீர்,
தேவன்பின் குறிப்பாய்;
ஆகையினால் இப்பொழுதும்
என்னோடிருந்து, காண்பியும்
அவ்வன்பைப் பூரிப்பாய்.

௩௱௪ பாட்டு. C. M. 304

The Eucharist.

நற்கருணை.

க ஆ! யேசுவே, இவ்விடத்தில்
இருக்கிறீர் அல்லோ?
எவர்கள் ஆத்துமாக்களில்
மெய்த்தெய்வ அன்புண்டோ,

உ அவர்கள் அதின் விரிவு,
உயர்ச்சி, ஆழமும்,
மெய்யாகக் காணும்படிக்கு
கடாட்சஞ் செய்திடும்.

௩ துக்கத்தினாலே நிறைந்து,
நம்பிக்கையுடனே
நல் எண்ணங் குணம் அடைந்து,
சேர்வோர்கள் யாருமே.

௪ தெளிந்த ஞான மார்க்கமாய்
ரட்சிப்பின் அமிர்தம்
ருசித்துப்பார்க்க, பூர்த்தியாய்
நல் ஈவைத் தந்திடும்.

௩௱௫ பாட்டு. 8. 7. 4. 305

Christ our sacrifice.

கிறிஸ்துநாதர் எங்கள் பலி.

க யேசுக்கிறிஸ்து நமக்காக
வந்து, மா அன்புடனே,
தேவ ஆட்டுக் குட்டியாக
அன்று பலியாகவே
பாடுபட்டு,
மாண்டு, நம்மை மீட்டாரே.

உ தம்முடைய பரிசுத்த
ரத்தமுள்ள மேனியை

என்றும் ஞாபகப்படுத்த
இங்கே ஞானுகாரத்தை
அன்பாய் ஈவார்
தோத்திரிப்போமாகவே.

௩ வந்து சேர்பவன் நன்ருக
தன்னைத்தானே ஆராய்ந்தே,
பாவம் யாவும் வெறுப்பாக
விட்டு, நேராய் நடந்தே,
நேசத்தோடு
தம்மைப் பற்ற என்ருரே.

௪ இந்தப் பரிசுத்த நன்மை
நமக்காகும்பொழுதே,
அந்தத் திரு ரத்தம் நம்மை
பரிசுத்தராக்கவே
தம்மை நொக்கி,
நம்பிக்கொள்ளச் சொன்னுரே.

௩0௬ பாட்டு. 8. 7. 4. 306

"Come, for all things are now ready."

வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிருக்கின்றன. மத். உஉ. ௪.

க ஆத்துமாவே, உன்னைச் சோடி,
துக்கம் யாவும் விடுவாய்;
மீட்பரிடத்தில் ஓடி,
சேரத் தாழ்மை கொள்ளுவாய்.
கர்த்தர் உன்னை
பந்திக்கு அழைக்கிருர்.

உ இந்தப் போசனத்தின் மேலே
வாஞ்சையாயிருக்கிறேன்;
உம்மையே, இம்மானுவேலே!
பத்தியாலே உட்கொள்வேன்.
தேவரீரே
சீவ அப்பமல்லவோ?

௩ மாசில்லாத ரத்தத்தாலே
என்னை அன்பாய் ரட்சித்தீர்;
அதை மா தயையினாலே
நெஞ்சத்துக்கு ஈகிறீர்.
இந்தப் பானம்
என்னை என்றுங் காக்கவே.

௪ உம்முடைய சாவின் லாபம்
மாட்சிமை சிறந்தது;
என்னிடத்திலுள்ள சாபம்,
உம்மால் தாமே நீங்கிற்று.
ஆ! கர்த்தாவே,
நான் அதைப் பொசிக்கவே.

௫ நீருந் தேவ சொற்படிக்கு
இங்கிரும், நல் நாதரே!
இந்தப் பந்தி மோட்சத்துக்கு
ஏதுவாய் இருக்கவே,
தேவ அன்பை
என்னில் ஊற்றி ரட்சியும்.

௩0௭ பாட்டு. 7. 6. **307**

The death of Christ.

கிறிஸ்துவின் மரணம்.

௧ ஆ! யேசுவே, உம்மாலே
நான் மீட்கப்பட்டேனே;
நீர் செய்த நீதியாலே
நான் சுத்தமானேனே.
மா கஸ்தியை அடைந்து,
என் குற்றத்தைத் தீர்த்தீர்,
மா புண்ணியம் நிறைத்து,
நீர் என்னையும் மீட்டீர்.

௨ உம்மால் நான் என்றும் வாழ,
இப்பந்தியில் நீரே

என் ஆவிக்கேற்றதான
அமிர்தந் தந்தீரே.
அன்போடு இன்னும் பார்த்து,
இரக்கமாயிரும்;
என் ஈனத்தைப் பொறுத்து,
சகாயந் தந்திடும்.

௩ நீர் இனி என்னிற் காணும்
பொல்லாங்கு யாவையும்
அகற்றிப்போட வாரும்,
என்றைக்கும் ரட்சியும்.
நான் உம்மைப் பற்றிக்கொள்ள
நீர் என்னை ஏவுமேன்;
மிகுந்த தாழ்மையுள்ள
மனமுண்டாக்குமேன்.

௪ நல் மீட்பரே, உம்மோடே
நான் ஐக்கமாகவும்,
நாடோறும் வாஞ்சையோடே
உம்மில் நிலைக்கவும்,
மிகுந்த அன்பினாலே
துணை செய்தேயிரும்;
தெய்வீக அப்பத்தாலே
என் நெஞ்சைப் போஷியும்.

௩௱௮ பாட்டு. L. M. 308

"I am the living bread."

சீவ ஆகாரம் நானே. யோவா. ௬. ௩௫.

க ஆ! யேசுவே, நான் பண்ணின
நல் நிண்ணயம் பெலப்பட
பிசாசை ஓட்டியருளும்,
எப்போதும் என்னை ஆண்டிடும்.

உ நான் உம்மில், வானத்தப்பமே!
மகா வணக்கத்துடனே
புசித்து, உம்மை என்றைக்கும்
நினைத்துக்கொள்ள அருளும்.

௩ நான் இவ்விருந்தின் நன்மையால்
சுத்தாங்கனுய், பிதாவினுல்
மன்னிப்பும் தேவ பெலனும்
அடையத் தயை க்ரண்பியும்.

௪ ஆ! உமக்கென்னை யாவிலும்
நீர் ஏற்ருேனுக்கிக்கொண்டிரும்;
தினமும் என்னை உம்மிலே
தரிக்கப்பண்ணும், கர்த்தரே!

௫ மரிக்கும்போதென் ஆவியை
உம்மண்டை சேர்த்து, கதியை
அளித்து, உம்மால் என்றைக்கும்
திருத்தியாக்கி அருளும்.

௩௱௯ பாட்டு. S. M. 309

The Lord's Supper.

கர்த்தருடைய இராப்போசனம்.

க நான் முழு ஆசையாய்
இப்பந்திக்கு வந்தேன்;
என் யேசுக்கிறிஸ்துவே, அன்பாய்
உம்மைச் சமீபித்தேன்.

உ ஆ! என்னைத் தயவாய்
இப்போ கடாட்சியும்;
நான் உம்மைச் சேர்ந்த சீஷனுய்
அடையச் செய்திடும்.

௩ நிறைந்த வாஞ்சையால்
என் சீவ காலத்தில்
சேவிக்கப்பண்ணி, நேசத்தால்
சேர்த்திடும் மோட்சத்தில்.

௩௱௰ பாட்டு. L. M. 310

"This is my blood of the New Testament."

இது புதிய உடன்படிக்கைக்குரிய என் இரத்தம். மத்தே. உசு. உ௮.

க உலோகத்தாரின் பாவத்தை
நிவிர்த்தி செய்யச் சீவனை

கொடுத்து, சிலுவையிலே
மரித்த தேவ மைந்தனே!

௨ எல்லாருக்கும் நீர் ரட்சகர்,
தவிப்புள்ளோருக்குத் தாரகர்;
மருந்து நீர், ஆ! என்னையும்
குணப்படுத்தி ரட்சியும்.

௩ இப்பந்திக்குச் சமீபித்தேன்,
என்னை அன்பாக நோக்குமேன்;
அசுத்தமான யாவையும்
துடைத்து, நீக்கி, அருளும்.

௪ மோட்சம் நிறைந்த அப்பமே,
நான் உம்மை உண்மையாகவே
பொசிக்கத் தயை செய்திரும்,
என்னை அன்பாய் உயிர்ப்பியும்.

௫ நான் சாகும்போதென் ஆவியை
நீர்சேர்த்துக்கொள்ளும், மோட்சத்தை
அடையச் செய்யும், கர்த்தரே!
புகழ் உமக்குண்டாகவே.

௩௱௰௧ பாட்டு. C. M. 311

The Eucharist.

நற்கருணை.

௧ உம்மாலேதான், என் யேசுவே,
ரட்சிக்கப்படுவேன்;
உம்மாலே தான் பேரின்பத்தை
அடைந்து, களிப்பேன்.

௨ இப்பந்தியில் நீர் ஈவது
மெய்ஞ்ஞான செல்வமாம்;
இனி நான் பெற்றுக்கொள்வது
பரத்தின் பொக்கிஷம்.

௩ இவ்வேழை அடியேனுக்கு
சந்தோஷத்தைத் தந்தீர்;
இக்கட்டு வரும்பொழுது
நீர் என்னைத் தேற்றுவீர்.

௪ பூமியில் தங்கும் அளவும்
நான் உம்மைப் பற்றுவேன்;
எவ்வேளையும் எவ்விடமும்
நான் உம்மைப் போற்றுவேன்.

௫. முடிவிலே நான் மரித்தும்,
கெலிப்பேன் செயமாய்;
என் தேகம் மண்ணாய்ப் போயினும்,
நான் வாழ்வேன் சிறப்பாய்.

௰உ—ம் பிரிவு.

ஞ ா ன ஸ் ந ா ன ம்.

௩௱௰உ பாட்டு. L. M. **312**

"Suffer little children to come unto me."

பிள்ளைகள் நம்மிடத்தில் வருகிறதற்குத் தடைபண்ணாமல் இடங்கொடுங்கள். மத். ௰௯. ௰௪.

௧ குழந்தை என்னிடத்திலே
வரட்டுமென்று யேசு தாம்
உரைத்ததாற் பெற்றோர்களே
அவர் சமீபம் சேர்க்கலாம்.

௨ குழந்தைகளுக்காகவும்
இரட்சகர் மரித்தாரே;
கைம்மாறில்லாத நன்மையும்
அவர்களுக்கும் ஈவாரே.

௩ அன்புள்ள கிறிஸ்துநாதரே,
இப்பிள்ளை ஏந்தியருளும்;
உமது ஆசீர்வாதத்தை
அன்பாகத் தந்து ரட்சியும்.

௩௱௰௩ பாட்டு. S. M. 313

Children brought to Jesus.

குழந்தைகள் யேசுவினிடத்திற் கொண்டுவரப்படல்.

௧ குழந்தை நாயனார்
தம்மண்டை அழைத்து,
தழுவி, ஆசீர்வதித்தார்,
அன்புடன் அணைத்து.

௨ சேரட்டுமென்றாரே
தடுக்கவே வேண்டாம்;
சுதந்திரம் பரத்திலே
இவைகளுக்குண்டாம்.

௩ ஆ! யேசு, அருளாய்
இவைகள் ஏற்றிடும்;
உம்மோடே என்றுங் களிப்பாய்
இருக்கச் செய்திடும்.

௩௱௰௪ பாட்டு. L. M. 314

Baptism.

ஞானஸ்நானத்தின்பேரில் பாடியது.

௧ தெய்வீக நீதி யாவுக்கும்
சரிசெலுத்திக் கிறிஸ்துவும்
யோர்தான் கங்கையிலே நின்றார்;
சலத்தில் ஸ்நானம் அடைந்தார்.

௨ தாம் பட்ட சாவின் பலனை
நாம் பெற, ஞானஸ்நானத்தை

இரக்கமான வழியாய்
